செந்தமிழ்

தொகுதி 51 பகுதி 3-5

மாசி-பங்குனி — மார்ச்-ஜூன் 1955

JL
731m211, w02
N54.51.3-5
208248

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருக.] ஜய-ஹு—தை-மீ [பகுதி-ந

Vol. 51. January-February—1955. No. 3.

உள்ளுறை

இலக்கிய வுண்மை	திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்	65—73
காஞ்சி-கயிலாசநாதர் கோவில்	திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள்	74—79
இயற்கையைப் பயன் படுத்துதல் 2. சூரியன்	திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B. L.	80—85
திருவள்ளுவர் கால வாழ்க்கை நிலை	வித்துவான் திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A.	86—93
மதிப்புரை—பத்திராசிரியர்		94—95
ஞாபகக் குறிப்பு—,,		96

பத்திராசிரியர்—திரு. நா. அப்பனையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N. APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளையும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றை பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகங்கள் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டு அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,
மானேஜர்.

உ
கடவுள் துணை

636

செந்தமிழ்

தொகுதி-௫௧.]	ஜய-ஞு-தைமீ	[பகுதி-௩.
Vol. 51.	January—February-1955.	No. 3.

இலக்கிய வுண்மை

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

மக்கள் வழக்கில், அவருடைய நினைவு சொல் செயல் என்ற மூன்றையும் நிலைக்களமாகக் கொண்டே உண்மையும் பொய்ம்மையும் நிலவுகின்றன. நினைவு முதலிய மூன்றும் உலகியற் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நிற்பன. ஆகலால் உண்மையும் பொய்ம்மையும் உலகியலோடு தொடர்புற்று இருப்பது தெளிவாகும். ஒருபொருள் உளதாகுங்கால் உண்மையும், அவ்வாறு ஆகாது மறையுங்கால் பொய்ம்மையும் தோற்றம் பெறுகின்றன. உள்ளது ஒன்றன் உண்மையைப் பிறர் சொல்லக் கேட்பவன் அதனை நேரிற் சென்று காணும் போது அப் பொருள் மறைந்தொழியின் அதன் இன்மையால் முன்னர்க் கேள்வியுற்ற உண்மை பொய்யாகி அவனை மயக்குகிறது. அதனை மேற்கொண்டு ஆராய்ந்து காணுவழி அவனுக்கு அது பொய்யாகவே அமைந்து விடுகிறது. இவ் வண்ணமே நினைவும் நிகழ்ச்சியும் ஒன்றுவிடத்தும், சொல்லும் செயலும் ஒவ்வாவிடத்தும், செயலும் பொருளும் (பயனும்) பெறவாவிடத்தும் பொய்ம்மை உருக்கொள்ளுகிறது. ஆராய்ச்சியால் பொய்ம்மை நீங்குவதும், உண்மை ஒளிவிட்டுத் தோன்றி இன்பம் செய்வதும் மக்களுலகில் நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

208248

உண்மையாராய்ச்சியில் தலைப்பட்டோர் உண்மைகளை விஞ்ஞான வுண்மை (Scientific Truth), வரலாற்று உண்மை (Historical Truth), மெய்ந்நெறியுண்மை (Philosophical Truth), புலனெறி யுண்மை (Poetic Truth) என நான்கு வகையாகக் கண்டு உரைத்துள்ளனர்.

இரண்டோடு மூன்றைக் கூட்டினால் ஐந்தாகும் என்பது போல்வனவும், இருபங்கு நீர்க் காற்றும் ஒருபங்கு நெருப்புக் காற்றும் சேர்ந்தால் நீர் உண்டாகும் என்பது போல்வனவும் விஞ்ஞான வுண்மை; நமது தமிழகத்தைச் சில ஆண்டுகட்கு முன்னர் மேனாட்டு ஆங்கிலரும், அவர்க்குமுன் நாடக்க முகமதிய மன்னர்களும், அவர்கட்கு முன்னே பாண்டிய சோழ மன்னர்களும், அவர்க்கு முன்பு பல்லவரும் ஆட்சிபுரிந்தனர் என்பது போல்வன வரலாற்றுண்மை; உலகியற் பொருள்களைக் கண் முதலிய கருவிகளால் அறிந்தபின் அறிந்தவற்றை ஆராய்ந்து முடிபு செய்வதற்கு மன முதலிய கருவிகள் நமக்கு உண்டு என்பதும் அவற்றை நெறிப்படுத்தும் கருவியாக அறிவு என்பது உண்டு என்பதும் இவை போல்வன பிறவும் மெய்ந்நெறி உண்மைகளாகும். "சுவை யொளி யூறு ஓசை நாற் றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு" என்பதும் அது. கண் முதலிய கருவிகளால் புறத்தே கண்ட பொருள்களை மனத்தின்கண் நிறுத்தி அவற்றைக் கூட்டியும் கழித்தும் வகுத்தும் மீட்டும் சொல்வடிவில் வெளிப்படுத்திக் கேட்போர் உள்ளத்தில் தன் மனத்திற்கண்ட காட்சி யெழுமாறு செய்யும் புலனெறி வழக்கில் காணப்படும் பொருளும் செய்கையும் புலனெறி யுண்மையாகும்.

மூத்து நரைத்த முதியவள் ஒருத்தி தன்மகன் யானையோடு போராடி அதனைக் கொன்றுவிட்டுத் தானும் மடிந்தான் என்று கேள்விப்பட்டு, யானையைக் கொன்றதுபற்றி உவகையும் மடிந்தது பற்றித் துயரும் கொண்டு கண்ணீர் வடிக்கின்றாள். அதனைப் புலவ னொருவன் நமக்கு உரைக்கின்றான். முதியவளது முதுமை நிலையை

“மீனுண் கொக்கின் தூவியன்ன, வால்நரைக் கூந்தல் முதியோள்” என்றும், அவள் மகன் யானையைக் கொன்று தானும் இறந்தானெனக் கேள்வியுற்றதை “முதியோள் சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும்” என்றும், அவள் சொரிந்த கண்ணீரைக் “கண்ணீர், நோன்கழைத் துயல்வரும் வெதிரத்து, வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே” என்றும் உரைத்து, யானையொடு போராடிய மகன் அப் போரில் யானையைக் கொன்று வென்றி எய்தியதனால் உவகைக் கண்ணீர் சொரிந்ததை, “களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே” என்றும், “கண்ணீர் வெதிரத்துச் சிதரினும் பலவே” என்றும் கூறியதுபோல்வன புலனெறி யுண்மைகளாம். “வானத்திற் பறக்கலாம், எந்திர ஊர்தி இயற்றுமின் என்றான்”, கடற்குள் மூழ்கிச் சென்றான். நீர் மேல் நடக்கலாம் என்றெல்லாம் புலமைக் கண்ணில் தோன்றிய காட்சிகள் இந்நாளில் நம் கண்முன்னே நிகழ்தலால், அவையும் எதிரது போற்றி மக்களுலகின் மாட்சி தெரிக்கும் புலனெறி யுண்மை வகையேயாம்.

இவ் வுண்மைகளை ஆராய்வது நாட்டு நலனுக்கும் மக்கள் வாழ்வுக்கும் பொருந்த நன்மையாகும். விஞ்ஞான வுண்மை ஆராய்ச்சியால் நாட்டின் பொருளியல் வாழ்வு ஆக்கம் பெறுகிறது. மேனாடுகளிற் பலவும் அமரிக்க நாடும் இன்று பொருள் வாழ்வு சிறந்து பொலிவதே இதற்குப் போதிய சான்று. வரலாற் றாராய்ச்சியால் அரசியல் வாழ்வு திட்பமும் செம்மையும் அடைகிறது. ஆங்கில நாட்டு அரசியற் பாராளுமன்ற முறை உலகிலுள்ள ஏனை நாடுகட்கு எடுத்துக் காட்டாக இலங்குவது ஆங்கில மக்களின் வரலாற் றாராய்ச்சியால் விளைந்த பெரும் பயன். மெய்ந்நெறி யாராய்ச்சி, விதிவிலக்கு, நீதி, நேர்மை முதலிய கூறுகள் வளம்பெற்று நாட்டில் அமைதியும் அறமும் பொருந்திய வாழ்வு நிலவுதற்குத் துணை செய்கின்றது. முன்னாளில் சிறந்து விளங்கிய யவனநாட்டு மெய்ந்நெறிப்

புலவர்கள் செய்த அறிவுப்பணியால் இன்றைய அரசியல் சட்டங்கள் உருவாய் அமைந்திருப்பதை இதற்கு எடுத்துக் கூறலாம். இன்றும் சட்டக்கல்வி கற்பிக்கும் கல்விநிலையங்கள் யவனநாட்டுச் சட்டங்களை நம்நாட்டு இளைஞர்கட்குக் கற்பித்து வருவது இதனை நன்கு வற்புறுத்துகிறது. இறுதியாக நிற்கும் புலநெறி யுண்மை ஆராய்ச்சி மக்களை ஏனைய விலங்கு முதலிய மாக்களின் இனத்தினின்று பிரித்து மக்கட்பண்பை வளர்த்து, அறிவு, அறம், அன்பு ஆகியவற்றின் வாயிலாகக் கண்ணுக்கு அழகும் கருத்துக்கு இன்பமும் பெருகும் இம்மை வாழ்வும் அம்மையிற் பெறலாகும் அந்தமில் இன்பத்து அழியாப் பேரின்ப வாழ்வும் கைவரச்செய்யும் கவின்வாய்ந்ததாகும். நாளும் வளர்ந்து வரும் மக்களினத்துக்கு வேண்டுவன வற்றை உணர்த்தி வேண்டாதவற்றை விலக்கி, நேரிய நினைவும் சீரிய நடையும் உடையதாக ஆங்கிலமக்கட் சமுதாயத்தைச் செய்தது இப் புலநெறி யுண்மை ஆராய்ச்சியே. இத்துணை நலங்கள் இந்த உண்மையாராய்ச்சியில் இருப்பது கண்டே நாகரிகம் படைத்த நாட்டினர் அனைவரும் இவற்றை மிகவிரும்பிக் கையாண்டு வருகின்றனர். நம்நாட்டு அரசியலும் இத்துறையில் கருத்துச் செலுத்தி வருவதை நாம் நாளும் கண்டு வருகின்றோம்.

இவ் வுண்மையாராய்ச்சி பொதுவகையில் நான்கு பெரும் பிரிவாகக் காணப்பட்டதாயினும் அவ் வகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்து இயங்குவதில்லை. ஒன்றையொன்று இன்றியமையாது சார்ந்துவரும் முறைமை இவற்றிடையே விளங்கித் தோன்றுகிறது. விஞ்ஞானத்துறையில் ஒருகாலத்திற் காணப்பட்டவுண்மை பிறிதொரு காலத்தில் தொடர்பாக ஆராய்ச்சி செய்யப் பெற்று விளக்கம் பெறுவதோடு மேலும் பல உண்மைகளைக் காட்டியமைகிறது. புகைவண்டி முதன்முதலாகத் தந்த தோற்றமும் இன்று தரும் தோற்றமும் தம்முள் வேற்றுமை பெரிதும் கொண்டுள்ளன. விஞ்ஞான உண்மை காணும் ஆராய்ச்சி வழிவழியாகத் தொடர்ந்து

நடந்ததே இதற்குக் காரணம். இன்றையதோற்றத்தில் காணப்படும் வேற்றுமைக் கூறுகள், தோன்றிய காலத்துக் கூறுகளோடு ஒப்ப வைத்து நோக்கின், அதன்கண் வரலாற்றுண்மை உள்ளீடாக நிற்பதைக் காணலாம். ஏனை மெய்ந்நெறித் துறையிலும் பிறவற்றிலும் வரலாறு உள்ளுற நிற்பதும், வரலாற்றுண்மை ஆராய்ச்சியில் விஞ்ஞானம், மெய்ந்நெறி முதலியவற்றின் உண்மை கலந்திருப்பதும் ஆராய்பவர்க்குத் தெளிவாகத் தெரிகின்றன.

இயற்கையும் செயற்கையுமாகிய எல்லாப் பொருட்கும் அகக்கூறும் புறக்கூறும் காண்பது உண்மையாராய்ச்சிக்கு உருவாகும். அக் கூறுகளில் தோய்ந்திருக்கும் உண்மைகளை மேலே கூறிய விஞ்ஞானம் வரலாறு மெய்ந்நெறி ஆகிய துறைகள் ஆராய்ந்து வெளிப்படுத்தா நிற்ப, புலநெறி யுண்மையாராய்ச்சி அவ் விருவகைக் கூறுகளின் அமைப்பிடையே நிலவும் அழகையும் பொற்பையும் வெளிப்படுத்தி உள்ளத்துக்கு இன்பத்தையும் அமைதியையும் நல்குகிறது. உலகிலுள்ள மக்களினம் எல்லாவற்றிற்கும் அகக் கூறுகளில் ஒற்றுமை காணப்படினும் புறக்கூறுகளாகிய தோற்றம், நிறம், வடிவம் முதலியவற்றில் பல வேறுவகை வேற்றுமைகள் காணப்படுகின்றன. அவ் வேற்றுமையிடையே ஒவ்வொன்றிலும் ஒன்றையொன்று ஈர்த்து மகிழ்விக்கும் அழகும் பொற்பும் அமைந்திருப்பது உண்மை. இயற்கைப் பொருளிடத்தே காணப்படும் எழிலும் அழகும் மக்கள் மனத்திற் படிந்து அவர் செய்யும் செயற்கைப் பொருளிடத்தும் வெளிப்பட அமைந்து விடுகின்றன. நாம் காணும் மோட்டார்கார்களின் அகக்கூறுகளில் ஒருமை காணப்படுவது போலப் புறக்கூறாகிய தோற்றம், அமைப்பு, நிறம் முதலியவற்றில் காணப்படாது வேற்றுமையுற்றாலும், நம்கண்ணையும் கருத்தையும் ஈர்த்து நிறுத்தி இன்புறுத்தும் வனப்பும் அழகும் தனித்து விளங்குகின்றன. அகமும் புறமுமாகிய இருவகைக் கூறுகளையும் நோக்கிப் புறத்தோற்றத்தில் பூத்து விளங்கும் பொற்பிலும் வனப்பிலும் அமைந்த

அழகையும் கவினையும் காண்பதிலும் பிறர்க்குக் காட்டுவதிலும் புலனெறி யுண்மையாராய்ச்சி பெரிதும் ஈடுபட்டு நிற்கிறது. இது மக்களுயிரின் செயற்றிறத்தை ஊக்குதற்கும் அறிவுத் திறத்தை ஆதரிப்பதற்கும் பெருந்துணையாய் நிற்றலால், ஆராய்ச்சியாளர் புலனெறித் துறைக்குச் சிறந்த இடத்தை நல்கித் திருவுறுகின்றனர்.

இப் புலனெறித் துறையைப் பண்டைத் தமிழ் நூலார் புலத்துறை யென்றும் புலனெறி வழக்கென்றும் புகன்று உரைத்தனர். பிற்காலத்தார் இலக்கியநெறி என்றும், புலனெறியுண்மை யாராய்ச்சியை இலக்கிய ஆராய்ச்சி யென்றும் வழங்கலாயினர். புலனெறிக் குரியவன் புலவன். புலம் என்பது அறிவு; ஆகவே அறிவுடையவன் புலவனாகின்றான். உயிர் உணரும் தன்மையது. எனவே உயிருடையவர் அனைவரும் உணர்வுடையவரே; ஆயினும் அவருள்ளும் பொதுவகையாலன்றிச் சிறப்பு வகையால் மேன்மை யுறுபவரையே "உணர்வுடை மாந்தர்" என ஆன்றோர் உயர்த்துக் கூறுகின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்று உரைப்பதனால் இதனை அறியலாம். அவ்வாறே அறிவுடையோர் அனைவரும் அறிஞர் எனப்படுவதில்லை. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற புலன்கள் ஐந்தாலும் உலகியற்பொருள்களைக் காண்பவர் புலவராயினும், அப் புலன்களை ஆளும் அறிவினால் உலகியற் பொருள்களின் உண்ணிகழ் கூறுகளை உள்ளத்தே வைத்து ஆய்ந்து கொள்வதில் புலவன் சிறப்புறுகின்றான். அவனுடைய் புலமையில் விஞ்ஞான முதலியவற்றின் உண்மைகளும் உண்மைக் கூறுகளும் அமைந்துள்ளன. அவனே புலத்துறை முற்றியவன்; அவனே புலவன் என்ற சொற்குப் பொருளாகின்றான்.

நம் நாட்டில் புலத்துறை முற்றிய புலவனது புலனெறி சிறந்த வகையில் இதுகாறும் இயன்று வந்துள்ளது. உள்ளதன் உண்மையும் இல்லதன் இன்மையும் உய்த்தறியும் அவனுடைய புலமையுள்ளம் அவ் வுண்மைகளை உலகிற்கு உரைக்க முற்படுகிறது. எழுத்தும் இசையும் நடிப்பும் ஓவியமும் சிற்பமும் அவன் உள்ளத்துக்குக் கருவியாகின்றன. பிறருடைய கண்ணும் காதுமாகிய சிறப்புடைய அறிகருவிகளில் கண்ணை மட்டும் நடிப்பும் ஓவியமும் சிற்பமும் வாங்கிக் கொள்கின்றன; இசை செவியைப் பற்றிக்கொள்ளுகிறது. எழுத்து ஒன்றுதான் கண்ணையும் செவியையும் பற்றி அறிவும் இன்பமும் அளிக்கின்றது. அறிவும் இன்பமும் உடலோடு இயங்கும் மக்கட்கு இலக்கமாதலால் அவற்றை நல்கும் எழுத்துத் துறை இலக்கியத்துறை எனப்படுதற்கும் பொருத்தமாக வுளது.

இலக்கியத்துறையில் பணிசெய்த தமிழ்ப்புலவர்களின் இலக்கியங்களை நோக்கின், நால்வகைப் புலனெறிகள் அவற்றில் காணப்படுகின்றன. அவை உள்ளது புணர்த்தல், இல்லது புணர்த்தல் என இரண்டாய் நின்று ஒவ்வொன்றும் இவ் விரண்டாய் விரிகிறது. உள்ளது புணர்ப்பு, உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல். இல்லோன் தலைவனாக உள்ளது புணர்த்தல் எனவும், இல்லது புணர்ப்பு, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தலும், இல்லோன் தலைவனாக இல்லது புணர்த்தலும் எனவும் வரும். இவற்றுள் உள்ளது என்றது உலகியலோடு ஒட்டிநிற்பது; இல்லது உலகியலில் எங்கும் காணப்படாதது. உள்ளது புணர்த்த இலக்கியங்கள் எக்காலத்தும் பயன் தருவனவாய் இலங்குகின்றன; இன்றும் யாவரும் விரும்பிப் பயில்கின்றனர். இவ் வகையில் சங்க இலக்கியங்கள் முன்னணியில் நிற்கின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி ஆகிய மூன்றும் சிறிதளவு இல்லது புணர்க்கப்பட்டிருப்பினும் அவற்றை விலக்கி நோக்கியவழி உள்ளது புணர்த்த இலக்கியப்பண்பு சிறிதும் குன்றாமையால் உள்ளது புணர்த்த வகையில் அடக்கிக் கோடற்கு இடமுண்டு. இல்லது புணர்த்த இலக்கிய வகையில்,

கோவை, உலா, தூது, மடல் முதலியன வந்து நிற்கின்றன. இக் கோவை முதலிய இலக்கியங்களுள் மேலேகண்ட விஞ்ஞான முதலிய உண்மைகட்குச் சேர்த்த இடம் இல்லாமையால், விஞ்ஞான முதலியவற்றின் அறிவு பெற்றுள்ள இந் நாளில் அவை சிற்றிலக்கியமென்ற பெயர் பூண்டு போதிய செல்வாக்கின்றி நூல் வடிவில் பழையோர் பேணித் தந்த பழந் தமிழ்ப் பொருளாய்த் தம்மை விரும்பிப் பயில்வோர் குன்றி யிருக்கின்றன.

இன்றும் என்றும் இன்பம்தரும் வகையில், உள்ளது புணர்த்த இலக்கியங்களுள் அழகும் இன்பக் கூறும் பொருந்துமாறு புனைந்துரைப்பகுதிகள் காணப்படுவதுண்டு. புனைந்துரைக்கும் பொய்யுரைக்கும் வேறுபாடு அறியாத சிலர் அழகு தரும் புனைந்துரையையும் பயனில்லாத பொய்யுரையாகக் கருதி மயங்குவாராயினர். "பொய் பிறந்தது புலவன் வாயிலே" என்ற பொதுமொழி இம் மயக்கத்தால் விளைந்த பயன்.

செய்யப்படும் எவ்வகைச் செயற்கைப் பொருளிடத்தும் காண்பார் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வனப்பும் அழகும் அமைப்பது இயற்கை நெறி. இலக்கியப் புலவன் இந்த இயற்கை நெறிக்கு உட்பட்டவனாதலால் அவன் செய்யும் இலக்கியமாகிய பொருளின்கண் புனைந்துரை வழங்கும் வனப்பும் புலத்துறை யின்பம் தரும் அழகும் அமையாது ஒழியாவன்றோ? ஏனைப் பொருட்கு அழகு செய்தல் ஊதியம் கருதியது; இலக்கியப் பொருட்கு அது வேண்டாவே என்றொரு கேள்வி எழுவதும் உண்டு. உண்மை யுணர்ந்த உயர்ந்தோர் உள்ளத்தே இஃது எழாதாயினும் ஏனோர் இதனை எழுப்புவது இயல்பு. சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன் மேனாட்டில் இக் கேள்வி எழுந்தது. அதற்கு அக்காலத்தே செருமனி நாட்டில் வாழ்ந்த ஷோபனவர் என்ற நல்லிசைப் புலவர் முன்வந்து, "நாம் உயிர் வாழ்வதற்கு உயிர்க்காற்றே (Oxygen) வேண்டுவது; அஃது இல்லையாயின் நாம் மடிந்து போவோம் என்பது விஞ்ஞான வுண்மை. அந்த உயிர்க் காற்றைப் பிற காற்று வகைகளினின்றும்

பிரித்துத் தூயநிலையில் வடித்து உட்கொண்டோமாயின், சில வினாடிகளில் நுரையீரல் வெந்து இறந்து விடுவோம். இதனால் உயிர்க்கு இன்றியமையாத உயிர்க்காற்றும் பிற காற்றுக்களோடு கலந்து புனைந்துருவாய் வருதல் வேண்டும் என்பது இயற்கையின் விதியென உணர்தல் வேண்டும். மேலும், உண்மையை உள்ளவாறே ஒப்பனையும் ஒளியுமின்றி உரைத்தால் அது கேட்போர் உள்ளத்தை யுற்று ஒளிசெய்யாதொழியும். உடற்குட்புகுந்து உயிர்க்கு நலம் செய்வதற்கு உயிர்க்காற்றோடு பிறகாற்று வகைகளைக் கலந்து உயிர்க் காற்றாகப் புனைந்து இயற்கை வழங்குவது போல உண்மையும் ஒப்பனையால் (புனைந்துரையால்) ஒளியூட்டப்பட வேண்டும்" என விடை யிறுத்தார்.

உள்ளதன் உண்மையை யுரைக்குமிடத்துப் புனைந்துரை வகையால் பொய் சிறிது கலக்குமாயினும் அப்பொய்ம்மை வாய்மையாய் உண்மை தரும் உறுதிப்பயனைப் பெறுவித்தலால் அது விலக்குண்ணாது. இன்றேல் கொள்ளத்தக்க உண்மையும் காண்போர் கருத்தைக் கவரமாட்டாமல் பொய்யாய் விலகிப் போம். "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்ற இயற்கையறமும் ஈண்டு நினைவுகூரத் தக்கது. இயற்கையை அடிப்படுத்தித் தனக்கு ஏவல் செய்விக்கும் அளவுக்கு மக்களுயிர் உயர்ந்து நிற்கிறது. இதற்கு இந்த ஏற்றத்தைத் தந்தது விஞ்ஞான வளர்ச்சி. அதன் அடிப்படைக் கூறுகளுள் நிலத்தியல் கணக்கு (Geometry) என்பது ஒன்று. அந்தக் கணக்கியல் புள்ளியும் கோடும் என்ற இரண்டின்மேல் நிற்கிறது. புள்ளியாவது உட்பரப்பில்லாத வட்டம் என்றும் அஃது இயங்குமிடத்து உண்டாகும் சுவடே (Locus) கோடு என்றும், அக் கோட்டுக்கு நீளமுண்டே யன்றி அகலமென்பதே கிடையாது என்றும், அக் கணக்கியல் கூறுகிறது. இது வெறும் புனைந்துரையே யன்றி உண்மையன்று. இவ்வாறே நோக்கின், புனைந்துரை கலவாத வரலாற்று நூலே இந்த நிலவுலகத்தில் எங்கும் கிடையாது. ஆகவே, புனைந்துரை உண்மைக்கு வேண்டாததன்று என்பது தெளிய உணரவேண்டுவதொன்றாம்.

காஞ்சி-கயிலாசநாதர் கோவில்

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தியாகராசர் கல்லூரி, மதுரை.

கோவில் இடமும் அமைப்பும்

இராசசிம்மன் கட்டிய உலகம் போற்றும் கயிலாசநாதர் கோவில் இப்போது நகரத்தின் மேற்றிசையில் சமனிகளுக்கு இடையில் இருக்கிறது. இதற்குப் பின்புறம் சிறிதுதொலைவில் இன்றைய கச்சி நகரின் மேற்குஎல்லை முடிவுபெறுகிறது. ஆயின், இது கட்டப்பட்டகாலத்தில் இந்தக் கோவில், நகரத் தெருக்களுக்கு இடையிற்றான் இருந்தது என்பது பல கல்வெட்டுகளால் தெரிகின்றது; இக் கோவிலுக்குப் புறமதில், திருமடைவிளாகம் முதலியன இருந்தன; ஏராளமாக நிலங்கள் இருந்தன. கோவிலைச் சுற்றிலும் மாடவீதிகள் இருந்தன.[1] இராசசிம்மன், 'மாடெல்லாம் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்தான்' என்று சேக்கிழார் பெருமான் கூறியது முற்றும் உண்மையே ஆகும்.

கல் வெட்டுகள்

கயிலாசநாதர் கோவிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன.[2] அவை, கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல்லவர், சோழர், விஜயநகரத்தார் கல்வெட்டுகளாக இருக்கின்றன. அவற்றுள் இக் கோவில் கட்டிய இராசசிம்மன் கல்வெட்டுகளும், அவன் மகனான மூன்றாம் மகேந்திரன், அவன் மனைவி ரங்கபதாகை முதலியோர் கல்வெட்டுக்களும் உள்ளன. பல்லவரை வென்று தொண்டை நாட்டை ஆண்ட முதற்பராந்தகன், இராசராசன், இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், இவர்தம் கல்வெட்டுகளும் பல

[1] S. I. 1. Vol. I Nos. 24-30, 86-88. 140-150.

[2] Vide S. I. I. Vol. I Nos. 24-30, 82-88, 144-150.

வாகக் காண்கின்றன. சோழர் காலத்தில் இக் கோவில், மாடவீதிகள், வெளிச்சுற்று, மடவிளாகம், மடங்கள் முதலியவற்றையும் அளவிடற்கரிய செல்வத்தையும் பெற்றிருந்தது என்பதை இக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சியைக் கைப்பற்றிய இரண்டாம் விக்கிரமாதித்தனது கன்னடக் கல்வெட்டும் இங்கே இருக்கின்றது. அதனில், 'இராசசிம்மன் கட்டிய கோவிலில் உள்ள பெருஞ்செல்வத்தைக் கண்டு வியந்த வல்லபன், அதனைக் கவராது அப் பெருமானுக்கே விட்டுவிட்டான்' என்பது குறிக்கப்பட்டுளது. இவ் வுண்மையைச் சாளுக்கியருடைய வக்கலேரி, கேந்தூர்ப் பட்டயங்களும் பகர்கின்றன.[1]

கோவிற் சிறப்பு

இராசசிம்மன் தன்னை வாத்ய வித்யாதரன் என்பதற்கேற்ப, இக் கோவிலில் யாழ் வாசிக்கும் உருவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இவன் இசை, நடனம், சிற்பம் ஓவியம் இவற்றில் பேரறிவு படைத்த பெருவேந்தன் என்பதற்குக் கயிலாசநாதர் கோவில் ஒன்றே போதிய சான்றாக அமைந்துள்ளது. இக் கோவில் வைகுந்தப் பெருமாள் கோவிலுக்கு நேர் எதிரே அமைந்திருத்தல் வியத்தற்குரியது. இங்குள்ள கணக்கற்ற சிற்பங்கள் சுவர்களில் இருத்தல் போலவே அக் கோவிற் சுவர்களிலும் இருத்தல் இங்கு நினைக்கத்தகும். சுருங்கக் கூறின், கயிலாசநாதர் கோவில் பல்லவரது சிற்பக் கலையை உலகத்திற்கு அறிவிக்க எழுந்த சிற்பக் கலைக்கூடம் என்னலாம்.

சில கல்வெட்டுச் செய்திகள்-இராசசிம்மனைப் பற்றியவை:

"இராசசிம்மன் (கி. பி. 685-720) கலியுகத்தில் அசரீரி[2] (கேட்டவன்) சிறந்த மற்போர் வீரன்; யானை நூல் அறிவில் வத்சராசனையும்

[1] E P. Ind. Vol. 5, P. 200; Vol. 9, P. 200.

[2] இந்த அசரீரி கேட்ட செய்தியையே, பூசலார் புராணத்தில் பல்லவன் கனவு கண்ட செய்தி' யாகச் சேக்கிழார் கூறியுள்ளார் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

பகதத்தனையும் ஒத்தவன்; போரில் விசயனுக்கும் இராமனுக்கும் ஒப்பானவன்; உடல் வலியாலும் புகழாலும் நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன்; நாடு பிடிப்பதில் பேரவாவுடையவன்; போரில் மிகக் கொடியவன்; தன் பகைவரை அழிப்பவன்; இவனது செல்வாக்கு உயர்கின்றது; அஞ்சத்தக்க பேராண்மை உடையவன்; அடக்கத்திறனால் வெல்லத்தக்கவன்; போரில் சிங்கம் போன்றவன்; வில்லையே துணையாகக்கொண்டவன்; பகைவர்க்கு இடியேறு போன்றவன்; கொடிய போரக்களை ஒழிப்பவன்; போர் வீரரை அழிப்பவன்; போரில் மனவுறுதி உடையவன்; போரில் செல்வத்தை வெல்லுபவன்; பகைவருடைய பொருளைப் போரில் கைப்பற்றுபவன்; வீரத்தில் மகேந்திரனை ஒத்தவன்; திடீரென இடிக்கும் இடி போன்றவன்; பல இடங்களை வென்றவன்; போரில் களைப்படையாதவன்; செருக்கரை அடக்குபவன்........."

கயிலாசநாதர் கோவிலில் மட்டும் இராசசிம்மனுடைய விருதுப் பெயர்கள் ஏறத்தாழ 250 காணப்படுகின்றன. அவற்றில் 'ரிஷபலாஞ்சனன், ஸ்ரீ சங்கர பக்தன், ஸ்ரீ ஆகமப் பிரியன், சிவசூடாமணி[1] என்பன போன்றவை இவனது சைவ சமயப்பற்றைக் குன்றின் மீதிட்ட விளக்குப்போல் ஒளிரச் செய்கின்றன. இராசசிம்மன், சைவசித்தாந்தத்தில் பேரறிவுடையவன் என்றும் கயிலாசநாதர் கோவில் கல்வெட்டொன்று கூறுகிறது.

சோழர் காலத்துச் செய்திகள்

இக் கயிலாசநாதர் கோவில் ஏறத்தாழக் கி. பி, 700-இல் கட்டப்பட்டது என்று சொல்லலாம்; அது முதல் பல்லவர் ஆட்சி முடியும் (ஏறத்தாழக் கி. பி. 900) வரை மிகவுயர்ந்த நிலையில் இருந்தது; 'பிற்காலச் சோழர்' ஆட்சி ஏற்பட்டது முதல் ஏறத்தாழக் கி. பி. 1100 வரையிலும் அவ்வுயரிய நிலையினின்றும் சிறப்புக் குறையாமல் இருந்தது. இராசராசன் காலத்து, கச்சிநகரப் பொதுமக்கள் இக் கோவில்

[1] இவனும் தன் தந்தையைப் போலவே கண்மணியால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை மகுடமாகத் தாங்கியிருந்தான் போலும்!

பண்டாரத்திலிருந்து ஏராளமான பொன்னைக் கடன் பெற்றனர்; பலர் 270 ஆடுகள், 180 ஆடுகள் வீதம் கோவிலுக்குத் தானம் செய்தனர்; கோவில் பத்திரங்கள் (கல்வெட்டுகள்) எல்லாம் சண்டேசுவரர் பெயரால் பொறிக்கப்பட்டன;[1] இக் கோவிலில் 'திருவுண்ணாழிகைச்' சபையார் இருந்தனர்; கோவில் 'கணக்கன்' இருந்தான். சோழர் காலத்தில் இக் கோவில் 'பெரிய கற்றளி' எனப் பெயர் பெற்றிருந்தது; பல்லவர் காலத்தில் 'இராசசிம்மேசுவரம்' எனப் பெயர் பெற்றிருந்தது.

இக்கோவிலில் உள்ள இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்றினால், இக் கோவிலில் கல்லூரி ஒன்று இருந்தது தெரிகிறது. அக் கல்லூரி, காஞ்சியில் நெடுங்காலமாக இருந்து புகழ்பெற்ற வடமொழிக் கல்லூரியாகஇருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அக் கல்லூரியில் இராசேந்திர சோழன் காலத்துத் "தேவார நாயகம்' என்ற அரசியல் அலுவலாளன் தங்கி இருந்தான் என்பது கல்வெட்டுச் செய்தி ஆகும்.

இக் கோவிலின் அழிவு

முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1070-1120) எக்காரணம் கொண்டோ இக் கோவில் இழிநிலை அடையலாயிற்று. "இக் கோவில் மூடப்பட்டது; இதற்குரிய நிலங்கள் விற்கப்பட்டன; கோவிலின் வெளிப் பிராகாரமும், திருமடை விளாகமும் அனயபதங்கா வுடையார் கோவிலுக்குத் தரப்பட்டன."[2] இங்ஙனம் முதற் குலோத்துங்கன் ஆட்சியில் பொலிவிழந்த இக் கோவில் ஏறத்தாழக் கி. பி. 1364-வரை மூடப்பட்டே கிடந்தது.

விஜயநகர ஆட்சி

இங்ஙனம் ஏறத்தாழ 250 ஆண்டுகள் மூடப்பட்டுக் கிடந்த இக் கோவில், கம்பண உடையார் காலத்தில் (1364-இல்) திறக்கப்பட்டது;

[1] S. I. I. Vol. I, Nos 84, 85, 89, 110, 112, 131, 140, 149, 159
[2] S. I. I. Vol. I. 86.

அவ் வாண்டு ஆடி மாதம் முதல், விழா நடைபெறலாயிற்று; முருங்கையூர் சர்வமானியமாக விடப்பட்டது. அக் காலத்திலும் இக் கோவிலைச் சுற்றி நான்கு மாடவீதிகள் இருந்தன. கயிலாசநாதர் கோவில் ஆட்சிக் குழுவினர் வடக்குச் சந்நிதித் தெருவில் இருந்த சில வீடுகளை 150 பணம் வீதம் கைக்கோள முதலிமார்க்கு விற்றுவிட்டனர்.

"வட்சிறகில் முன்னால் இருக்கும் ஆண்டார் சுந்தரப்பெருமாள் மடமும், திரு அகத்தீசுவரம் உடைய நாயனார் கோவிலுக்குக் கிழக்கு-திருமஞ்சனப் பெருவழிக்கு மேற்கு-உள்ள மனை நீங்கலாக மனை அடங்கலும் இந்நாள் முதல் என்றும் கைக்கொள்ளற்கும் கைக்கோள முதலிகட்கும் இந்த வடசிறகில் உள்ள மனையும் மனைப்படைப்பையும் சண்டேசுவர விலையாக விற்று இவர்களிடம் வாங்கிக் கோவில்பண்டாரத்தில் முதல் இட்ட இ.........[1]"

கோவில் அதிகாரிகள் அதிகாரி விருப்பப்படி, கோவிலுக்கு அருகில் மேலைத்தெருவில் இருந்த மேலைச் சந்நிதித்தெரு மடமும் சிறிது நிலமும் கோவிலில் வேதம் ஓதும் தொழிலைச் செய்துவந்த திருக்கழுக்குன்றத்து மாகேசுவரரான காங்கேயற்குக் கொடுத்தனர்[2].

சிற்பங்கள்

இக் கோவிலினுள் நுழைந்தவுடன் எதிரில் உள்ள சிறிய கோவில் இராசசிம்மன் மகனான மூன்றாம் மகேந்திரனால் கட்டப்பட்டது. இராசசிம்மனது கோப்பெருந்தேவியான ரங்க பதாகை என்பவள் சைவப்பற்று மிக்குடையவள். அவள் கட்டிய சிறிய கோவில் ஒன்றும் கயிலாசநாதர் கோவிலில் இருக்கின்றது. இக் கோவிற் சிற்பங்கள் உள்ளத்தை உருக்குவனவாகும். அவற்றுள் பெரிதும் பாராட்டத் தக்கவை சிவனார் ஆடிய பலவகைக் கூத்துவகைகளைக் குறிப்பனவாகும்.

[1] Ibid. 86.
[2] Ibid. 88.

அவை (1) நாதாந்த நடனம், (2) லதாவ்ரிசிக நடனம், (3) தாண்டவ நடனம், (4) குஞ்சித நடனம் என்பன. இவற்றுள் பலவாகக் காணப்படுவது குஞ்சிதநடனமே யாகும். இதுவே இராசசிம்மன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது போலும்![1]

முடிவுரை

இக் கயிலாசநாதர் கோவில் தென் இந்தியக் கட்டடக் கலைக்கும் ஓவிய-சிற்ப-இசை-நடனக் கலைகட்கும் இருப்பிடமாகும். இத்தகைய சிறப்புடைய இதனைக் கட்டுவித்த பரம சிவபக்தனான இராசசிம்மன் இன்று இக் கோவிலைக் காண்பானாயின்........என்ன நினைப்பான்? சற்று எண்ணிப் பாருங்கள். அவன், நாகரிகக் கலைகட்கு இருப்பிடமாக அமைத்த இக் கோவில், இன்று கவனிப்பாற்றுப் பாழ்பட்டுக் கிடப்பது, தமிழ் மக்களது அநாகரிக நிலையை விளக்கப் போதிய சான்றாகும். அழிந்தது போக எஞ்சியுள்ள கோவிற் பகுதிகளேனும் அழிவுறாமல் இருக்கப் பார்த்தல் அறிவுடைத் தமிழ்மக்கள் கடமையாகும். இத்தகைய வியத்தகு வேலைப்பாடமைந்த கோவில்களைக் கொண்டே நமது பழைய நாகரிகம் உயர்ந்தது என்று மேனாட்டார் பாராட்டுகின்றனர் என்பதை நாம் மறத்தலாகாது. வரலாற்றுச் சிறப்புடைய இத்தகைய பழைய கோவில்களைத் தமிழ்மக்கள் பாதுகாக்கப் புறப்படும் நாளே தமிழர் வாழ்வு சிறப்புறுதற் கேற்ற நன்னாள் ஆகும்.

[1] இச்சிற்பங்களைப் பற்றிய முழு விவரங்கள் டாக்டர் மீனாட்சி அம்மையார் வரைந்துள்ள 'கயிலாசநாதர் கோயில் சிற்பங்கள்' என்னும் ஆங்கில நூலில் காணலாம்.

இயற்கையைப் பயன்படுத்துதல்

2 *சூரியன்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B.L., சென்னை.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் சூரியனைத் தெய்வமாக வணங்கினார்கள். 'பரிதியே உயிர் யாவிற்கு முதலே' என்றும், 'ஞாயிறு போற்றுதும்' என்றும் அதை வழிபட்டு வணங்கினார்கள். பிற்காலத்திலே வாழும் நாம் பிரபஞ்சத்திலுள்ள பல கோடிக் கணக்கான நக்ஷத்திரங்களில் நமது சூரியனும் ஒன்று என்பதைத் தெரிந்துகொண்டோம். ஆகையால், சூரியனுக்குத் தெய்விகத் தன்மை இல்லாது போயிற்று. ஆயினும், நம்முடைய உலகத்திலுள்ள உயிர்களில் பெரும்பான்மை தோன்றுவதற்கும் வாழ்வதற்கும் சூரியனே அடிப்படைக் காரணம் என்னும் உண்மை மாறவில்லை. ஆகையால், இன்றும் விஞ்ஞானிகள் உட்பட அனைவரும் சூரியனைப் போற்றிவருகிறார்கள்.

உண்மையில் சூரியன் ஒரு மிகப் பெரிய தீக்கோளம். அது பிரபஞ்ச வெளியிலே நானுபக்கமும் இடைவிடாமல் மிக நெடுங் காலமாக ஒளியையும் வெப்பத்தையும் வீசி வந்திருக்கிறது. இன்றும் வீசிவருகிறது. இன்னும் மிக நெடுங்காலம் வீசிவரும் என்பதில் ஐயமில்லை.

இவ்வுலகில் சக்தியைப் பெறுவதற்கு நாம் பயன்படுத்தும் பொருள்கள் எல்லாவற்றுக்கும் சூரியனே அடிப்படைக் காரணம். உதாரணமாக, சூரியனின் துணையால் நிலக்கரி இயற்றப்பட்டது. பண்டைக்காலமரங்கள் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) என்னும்

* சென்னை அகில இந்திய வானொலி நிலயத்தில் 14—7—54-ல் ஒலி பரப்பியது; அந் நிலயத்தார் அநுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

அற்புதச் செயலாலும், இரசாயன மாறுபாடுகளாலும், தங்களுடைய இலைகளின் மூலமாகச் சூரியனிடமிருந்து சக்தியைப் பெற்றன. அம் மரங்களே நிலக்கரியாயின; விறகாயின. சூரிய வெப்பத்தின் விளைவே காற்றும், மழையும், அருவியும் ஆறும். எண்ணெய் என்பது சூரியனும் கடலுமாகச் சேர்ந்து நிகழ்த்திய செயல்களின் விளைவு.

சூரியன் வீசிச் சிதறும் ஒளியிலும் வெப்பத்திலும் ஒரு மிகச் சிறிய பகுதியே நமது பூமியின்மீது உறைக்கிறது. ஆயினும், இதன் அளவும் மிகமிகப் பெரிது என்றே சொல்லும்படி இருக்கிறது. பன்னிரண்டேகால் கோடிகோடி டன் எடையுள்ள நிலக்கரியை எரித்தால் எவ்வளவு வெப்பம் உண்டாகிறதோ, அவ்வளவு வெப்பம் ஒவ்வொரு வருஷமும் சூரியன் நமக்கு அளித்து வருகிறது என்றும், ஒவ்வொரு நொடியிலும் அறுபதுலக்ஷம் டன் நிலக்கரியை எரிப்பதற்கு ஈடானது சூரியனிலிருந்து நமக்குக்கிடைக்கும் வெப்பம் என்றும், ஒரு நாளில் சூரியனிலிருந்து நமது பூமியின் தளத்தில் ஒன்றரை மைல் பரப்பில் பொழியப்படும் சக்தியானது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணு-குண்டின் சக்திக்குச் சமமாக இருக்கிறது என்றும் பலர் பலவகையாகக் கணக்கிட்டுச் சூரியனது பெருமையை நமக்கு விளக்க முயலுகிறார்கள். இப்படி வழங்கியும் அதன் சக்தி குறைவுபட்டதாகவே நமக்குத் தெரியவில்லை. ஆகவே, சூரியன் மிகமிகப் பெரிய சக்திக் களஞ்சியம் என்பதில் ஐயமில்லை.

சக்தியை மேன்மேலும் நாடிவரும் மக்கள் இதை உணர்ந்து இதன் சக்தியை எப்படிப் பயன்படுத்தலாம் என்று பண்டைக்காலம் முதலே ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். அதன் வெப்பத்தைப் பயன்படுத்துவதே முதல் முயற்சி. கிரேக்க நாட்டு அறிவாளியாகிய ஆர்க்கிமீடீஸ் சூரிய கிரணங்களை ஓரிடத்தில் குவியச்செய்து எதிரிகளின் கப்பல்களைத் தீக்கு இரையாக்கினர் என்ற கதையைக் கேட்டிருப்பீர்கள். அவருடைய காலத்துக்கு முன்னாலே சூரியனின்

கிரணங்களால் பற்பல பொருள்களை வெப்பமுறச் செய்யலாம் என்று தெரிந்து பயன்படுத்திவந்தார்கள்.

பிற்காலத்திலும் சூரிய கிரணங்களைக் குவியச்செய்து, மிகுந்த வெப்பத்தை உண்டாக்கியபோது இரும்பு முதலிய உலோகங்களையும் உருக்கமுடிந்தது. இவ்வாறு செய்தவர்களில் பிரான்சுநாட்டு விஞ்ஞானியாகிய லாவாய்சியே (Lavoisier) ஒருவர். அமெரிக்க நாட்டில் வாழ்ந்த கான் (Conn) என்பவர் பத்தடி குறுக்களவுள்ள அலுமினியக் குவி-ஆடி ஒன்றை அமைத்தார். அதன்மூலமாகப் பத்தே நொடிகளில் மூவாயிரம் சென்டிகிரேட் டிகிரி வெப்பத்தை அவரால் உண்டாக்க முடிந்தது. ஆனால், அந்த வெப்பம் ஓர் அங்குலத்தில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு அளவே உள்ள ஒரு சிறிய இடத்தில் மட்டுமே உறைக்கக் கூடியதாக இருந்தது. இது சில பரிசோதனைகளுக்குப் பயன்பட்டது; வாழ்க்கைக் காரியங்களுக்கு உதவவில்லை.

அமெரிக்காவில் பிலடெல்பியாவிலும், பாஸடீனாவிலும், அரிஸோனாவிலும், எகிப்திலும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவதற்கான கருவிகளை ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்னால் இயற்றினர். கருவி வேலை செய்தது; ஆனால், செலவுக்குத்தகுந்த பயன் இல்லை.

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் வாஷிங்டனில் உள்ள ஆபட் (Abbot) என்பவர் காலிபோர்னியாவில் வில்சன் மலையின் உச்சியில் ஒரு கருவியை வைத்தார். அது சூரிய வெப்பத்தால் நீரைக்கொதிக்கச் செய்து, நீராவியை இயற்றி, கால் குதிரை யோட்டச் (Horse power) சக்தியுள்ள நீராவி எந்திரத்தை ஓடச் செய்தது. அவர் சூரியனது வெப்பத்தால் சமையல் செய்வதற்கேற்ற அடுப்பு ஒன்றையும் அமைத்தார். அதில் சில பலகாரங்களையும் சமைத்துக் காட்டினார். ஆனால், அந்தக் கருவியில் செலவு அதிகம்.

இதற்கு ஒரு முக்கிய காரணம் சூரியன் ஓரே நிலையிலிருந்து ஓரே இடத்தில் எப்போதும் ஒன்றுபோல் வீசாததேயாகும். பூமி சுழல்வதால் சூரியனின் நிலை மாறிக்கொண்டேயிருக்கிறது. ஆகையால், சூரியனின் கிரணங்கள் ஓரே திசையாக வந்து கருவியின்மேல் படவேண்டுமானால், சூரியனைநோக்கிக் கருவி திருப்பப்பட்டுக் கொண்டே வரவேண்டும் அல்லவா? இத்தகைய கருவியை அமைக்கவும், அது சீராக வேலை செய்யும்படி கவனித்துப் பழுதுபார்க்கவும் செலவு அதிகம். மேலும் சூரியன் இல்லாத வேளைகளில் அதாவது இரவிலும், மேகம் செறிந்த நாட்களிலும் மழை நாட்களிலும் இந்தக் கருவி பயன்படாது.

ஆகையால், சூரியன் பிரகாசிக்கும்போது, அதன் சக்தியை ஏற்று, அதைச் சேகரித்து வைத்து, நமக்கு வேண்டியபோது அச்சக்தியைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகள் அவசியம். இவ்வாறு கிடைத்தபோது சேகரித்த சூரிய வெப்பத்தைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு எண்ணெய், தண்ணீர், சாணைக்கல், சோடியம் சல்பேட்டுஉப்பு முதலியவைகளைப் பயன்படுத்திப் பார்த்துவருகிறார்கள்.

ரஷியாவில் ஸ்டாலின்கிராடு நகரத்தில் சுமார் பன்னிரண்டு வருஷமாகச் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன. பாவளைவுள்ள (Parabolic) ஆடிகளைக்கொண்டு சூரிய கிரணங்களைக் குவியச் செய்ய முயன்றார்கள். இந்த ஆடிகள் சாமானியக் கண்ணாடியால் அமைக்கப்பட்டவை; சுமார் 33 அடி குறுக்களவுள்ளவை. சுமார் பத்து வருஷங்களுக்கு முன் மத்திய ஆசியாவில் சூரிய சக்தி ஆராய்ச்சி நடத்துவதற்காக டாஷ்கென்ட் (Tashkent) என்னும் இடத்தில் இவ்வகைக் கருவி ஒன்று வேலை செய்தது.

நமது நாட்டில் பூசாவிலும் (Pusa), டில்லியிலும் இதைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. சிறிய எந்திரங்களை இயக்கு

விப்பதற்கு ஏற்றவையான சக்தி குறைந்த எஞ்சின்களை ஓட்டுவதற்குப் போதிய நீராவியைச் சூரிய சக்தியால் இயற்ற முடியும் என்று நினைத்து அதற்கேற்ற முயற்சிகள் நடக்கின்றன. வீட்டுச் சமையல் காரியங்களையும் சூரியனது சக்தியால் செய்யக்கூடிய அடுப்பை எளிய விலையில் அமைப்பதற்கும் முயலுகிறார்கள். முயற்சி அநேகமாக வெற்றிகரமாக முடிந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது.

வேறு வகையாகவும் சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம். வெப்பத்தால் நேரிடையாகவே மின்சாரத்தை இயற்றலாம். இதில் சூரிய வெப்பத்தில் நூற்றுக்கு இரண்டு பகுதிதான் பயன்படும் என்று கணக்கிடுகிறார்கள்.

தாவரங்கள் சூரியசக்தியை அற்புதமாகப் பயன்படுத்துகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். அதைப்போல், செயற்கையாக வேறு ஏதாவது செய்ய முடியுமா என்றும் முயன்று வருகிறார்கள். தண்ணீரை ஹைடிரஜன் பெராக்ஸைடாக மாற்றுவதுபோன்ற வேறு வகையான முயற்சி ஒன்று அமெரிக்காவில் ஹைட் (Heidt) என்பவரின் தலைமையின்கீழ் நடந்துவருகிறது. ஏதாவதொரு துறையில் வெற்றி கிடைத்தாலும் அதனால் விளையும் லாபம் மிகப் பெரியதாயிருக்கும்.

இப்படிப் பல நாடுகளிலும் முயற்சிகள் தனித்தனியே நடந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய உண்மை என்ன என்று பலரும் உறுதியாகத் தெரிந்துகொள்வதற்காக அமெரிக்காவில் தேசிய பௌதிகச் சோதனைச் சாலையின் (National Physical Laboratory) தலைவரான புல்லார்டு (Bullard) என்பவரின் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அது பல விஷயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. பலவகையான புள்ளி விவரங்கள் அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சூரிய கிரணங்களை முக்கியமாக ஆறு துறைகளில் பயன் படுத்தக் கூடும் என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. தண்ணீரை வெப்பமுறச் செய்தல் (Water heating), சமைத்தல், Cooking), பண்டங்களைக் குளிரவைத்துப் பாதுகாத்தல் (Refrigeration) எந்திரங்களை இயக்குதலும் மின்சாரத்தை உற்பத்தி செய்தலும் (Mechanical or Electrical Power Production), விறகுப் பொருள்களை இயற்றுதல் (Fuel Making), தண்ணீரைக் காய்ச்சி வடித்தல் (Distillation of Water) என்பவைதாம் அந்தத் துறைகள்.

சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன. சூரியன் எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும், எல்லா வேளைகளிலும் ஒன்றுபோலப் பிரகாசிப்பதில்லை. சூரிய சக்தி மொத்த அளவில் மிகப் பெரிது என்று கருதக் கூடியதாயிருந்தபோதிலும், அது மிகப் பரந்த இடங்களில் சிதறி வீசப்படுகிறது. அது ஒரே இடத்தில் நிலையாக ஒரே திசையாக உறைப்பதில்லை. ஆகையால், அதைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய கருவி விலைமிகுந்ததாகிவிடுகிறது — சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பது போல. ஆயினும், எங்கும் விலை இல்லாமல் கிடைக்கும் சக்தியை எப்படியாவது நன்கு பயன் படுத்த வேண்டும் என்று அறிவாளிகள் முயன்று வருகிறார்கள். கோடிக் கணக்காகப் பணச் செலவு செய்து, அறிவின் முன்னணியில் உள்ளோரை ஏவல் கொண்டு, அணுவின் இரகசியத்தை விண்டு, அதிலிருந்து அளப்பரிய சக்தியைப் பெறும் வழியைக் கண்டுபிடித்துவிட்டார்கள் அல்லவா? அதுபோலவே இந்த முயற்சியும் கைகூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திருவள்ளுவர்கால வாழ்க்கைநிலை

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(406-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆடவர்

மக்கள், ஆண், பெண், பேடி என முத்திறப்படுவர். ஆண்மை யுடையவர் ஆண்மக்கள். பெண்மை-(பெட்குந்தன்மை)-யுடையவர்கள் பெண் மக்கள். ஆண்மை குறைந்து பெண்மை மிகுந்துள்ள ஆண்கள் பேடி எனப்படுவர். "பேடிகை வாளாண்மை போல்" என்பது குறள். ஆண்மையாவது எடுத்த செயலை எத்தகைய இடையூறுகள் வரினும் விடாது முடிக்குந் தன்மையாம். "பேராண்மை என்ப தறுகண்." பிறரையாளும் வன்மையும் ஆண்மையாம்; தன் ஐம்புலன்களையும் ஆளுந் தன்மையும் ஆண்மையாம். பிறன்மனை நோக்காத் தன்மையும் பேராண்மையாம். எனவே ஐம்புலன்களை அடக்கியாளுந் தன்மையே பேராண்மை. அவரது ஏவல்வழி உலகம் நிற்கும். ஆண்மையுடையவன் ஐம்பொறிகளை யடக்கி யாள்பவன்; பழிபடுவ செய்யான். "சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு பேராண்மை வேண்டு பவர்" என்பது திருக்குறள். ஈண்டுப் "பேராண்மை" எனப்படுவது 'மானம்' என்றும் "எவ்விடத்தும் நிலை குலையாத திண்மையான் உளதாதல் பற்றிப் பேராண்மை எனப்பட்டது" என்றும் கூறும் பரிமேலழகர் உரை சிந்திக்கத்தக்கது. "நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன் காமுற்றா ரேறும் மடல்," "காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு நல்லாண்மை என்னும் புணை" என்னும் குறள்களும் இக் கருத்தையே வலியுறுத்தும். 'ஆடவர்க்கழகு பெண் விரும்ப ஒழுகுவதேயன்றிப் பெண்ணேவல் செய்வதன்று' என்பது 'வாழ்க்கைத் துணை' 'பெண்வழிச் சேறல்' என்னும் இரு வேறதிகாரங்கள் வகுத்திருப்பதனால் புலனாம்.

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறு 105). பொருளீட்டும் முயற்சி ஆடவர்க்கே உரியது. 'ஆடூஉ' என்னும் சொல்லே இதனை வலியுறுத்தும். வினையே ஆடவர்க்கு உயிர் (குறு 105). அகப்பொருள் இலக்கணம் 'பொருள் வயிற் பிரிவு' என ஒன்று குறிப்பதும் இதனை வலியுறுத்தும். "திரைகட லோடியும் திரவியம் தேடு" என்பதும் முன்னையோர் கூறும் நல்லுபதேசமாம். "முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை" என்பது தொல்காப்பிய மாதலின் ஆடவர் தாம் அம் முயற்சிக்குப் பெரிதும் உரிமை யுடையர் என்பது தெள்ளிதிற் புலனாம். "ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் நிலக்குப் பொறை" என்னும் குறள் பொருளீட்டுவார்க்கு வேண்டுவதோர் பண்பினை யுணர்த்துகிறது. பொருளீட்டலே போல் புகழும் நாடப்பெறல் வேண்டும். புகழ் பொருளினும் சிறந்தது. அப்புகழ் ஆடவர்க்குரித்தெனக் குறிக்கிறது இக் குறள். புகழை நாடுதல் மகளிர்க்கு உரித்தன்றோ எனின் அவர்கட்கும் உரித்து என்பது உண்மையே; "புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை" என்னும் குறள் இவ் வுண்மையை விளக்கும். மகளிரை வாழ்க்கைத் துணை எனக் குறிப்பதனால் குடும்ப வாழ்க்கையில் அவர்களது பங்கினை நாம் உன்னுதல் வேண்டும். பொருளீட்டுவோர் ஆடவரே என்பதை இக் குறளும் வலியுறுத்தும்.

மக்களது மேனியில் இயற்கை மணம் உண்டு. ஆடவர் மேனி முல்லை மலரின் மணமுடையது. "மணந்தனென் மன்னெடுந் தோளே இன்று முல்லை முகைநா றும்மே" (குறு. 193) என்பது அரிசில் கிழார் வாக்கு. மகளிர் மேனியிலும் இயற்கை மணம் உண்டு என்பதைக் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைச் செய்யுள் குறிக்கும். "பந்தினை யிளையவர் பயிலிடம் மயிலூர், கந்தனை யனையவர் கலைதெரி கழகம், சந்தன வனமல சண்பக வனமாம், நந்தனவனமல நறைவிரி புறவம்" என்னும் கம்பர் பாட்டும் இதனை வலியுறுத்தும். "முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம், வேலுண்கண் வேய்த்தோளவட்கு" என்னும் குறளும் மகளிர்க்கு இயல்பாய மணம் உண்டெனக் கூறுவது காண்க.

ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் வாழ்க்கை மரபு. எனினும் ஆடவர் பலமகளிரை மணந்து வாழ்வதுண்டு, வாழ்ந்ததுண்டு. முதல் மனைவி தலைவி அல்லது கிழத்தி எனச் சிறப்பாகக் குறிக்கப்படுவாள். ஏனையவர், 'பின்முறை வதுவைப் பெண்டு' எனக் குறிக்கப்படுவர். இவர்கள் முதல் மனைவி போலவே தலைவனது சொத்திற்கு உரிமையுடையவர். ஆடவர் காமநுகர்ச்சிக்கெனப் பரத்தையரை யடைவதுண்டு. அவர்களுள்ளும் தமக்கே யுரிமையுடையவராக மணந்து கொள்ளப்படுபவர் காமக்கிழத்தியர் எனப்படுவர்.

எனவே, ஆடவர் ஐம்புலனடக்கி, பழிபடுவன செய்யாது மானத்தோடு பொருளீட்டி, வாழ்க்கைத் துணையொடு புகழீட்டி வாழ்ந்து வந்தனர் என்பது பெற்றும்.

மனைவியை யிழந்த ஆடவர் தவநெறியில் நிற்பர்; வேறு மகளிரை மணந்து வாழ்வதுமுண்டு. அவர் தவநெறியில் நிற்பதைத் தபுதார நிலை என்பர் இலக்கண நூலார். மனைவியை விலக்குவதனைப்பழித்தனர்; இழித்தனர். மனைவியைத் துறந்தான் நிலையைக் குற்றிசை என்றும் தன்னைத் துறந்தானை நங்கை முன்னின்று பழிதூற்றுதலைக் குறுங்கலி என்றும் இலக்கண நூலார் கூறுவதே அதற்குத் தக்க சான்றும்.

மகளிர்

மகளிர் பிறரை வாழவைப்பவர். ஆதலின், வாழ்க்கைத் துணை என வள்ளுவரால் சிறப்பிக்கப்படுகிறார்கள். 'இல்லாண் முல்லை' என்னும் புறத்திணைத் துறையும் (பு. வெ) இதனை வலியுறுத்தும். "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்." பெண்களுக்குக் கற்புச் சிறந்தது. கற்புடைய மகளிர் 'ஒருமை மகளிர், எனக் குறிக்கிறார் வள்ளுவர். "ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு' என அவர்களைச் சிறப்பிக்கின்றார். பெருமை வேண்டும் ஆடவர் இம்மகளிர் போல் ஒழுகல் வேண்டும் என மகளிரைச் சிறப்பிக்கும் நிலை உன்னி

யுன்னிப் போற்றற்குரியது. ஒருமை மனத்தாற்றான் பெருமை யுண்டாம் என்கின்றார் வள்ளுவர். ஒருமையாவது நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண் டொழுகலாம். "கற்புண்டாதல் தோன்ற நின்றமையின் உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழி மெய்களை யொடுக்கி ஒப்புரவு முதலிய செய்து போதல்" எனப் பரிமேலழகர் குறிப்பது நோக்கத்தக்கது. கற்புடைய மகளிர் ஒருமை மகளிர் எனப்படுதலால், இருமை மகளிரும் உண்டு என்பது பெறப்படும். அவர்களை இருமனப் பெண்டிர் என்பர் வள்ளுவர். இருமனப் பெண்டிரைப் பொருட்பெண்டிர், மாயமகளிர் எனவும் குறிக்கின்றார். வரைவின் மகளிர் இத்தன்மையரே.

பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை யுடைய வல்ல ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப்பத் தங்கை யிட்டால் இந்திரன் மகளு மாங்கே
வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போல் மெலிந்துபின் னிற்கு மன்றே"

என்னும் சிந்தாமணிச் செய்யுளும், "இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறு படும்" என்னும் குறளும் அன்பு சென்றவழி மனம் செல்லுமாதலின் எம் மகளிர்க்கும் மனம் மாறுபடும் எனப் பொதுப்படக் குறிக்குமாயினும் இந்நிலை-மனம் மாறுபடும் நிலை-இருமனப் பெண்டிர்க்கேயாம் என்பது உய்த்துணர வேண்டுவதொன்று, நிறையொடு வாழும் மகளிரும் உண்மையான்.

மகளிர் தம் குடும்பநிலை யுணர்ந்து, அதற்குத்தக வாழ்க்கை நடத்துதல் வேண்டும். தம் கணவரது வருவாய்க்குத்தகச் செலவுசெய்தல் வேண்டும். தம் கணவர்க்குப் பொருளும் புகழும் புண்ணியமும் பொருந்துதற்குக் காரணமாவர் இத்தகைய மகளிர்களே. கணவனுக்குக் கவலையைத் தீர்த்துக் களிப்பை நல்குவர். மனைத்தக்க மாண்புடையவளும் கணவனது வளத்தக்காளும் ஆகியவளே வாழ்க்கைத் துணை யாதற்குரியவள். வளத்தக்காளாயினும் மாண்பிலளாயின் இல்வாழ்க்கை மாண்புறாது. மனைத்தக்க மாண்பு நற்குணங்களும் நற்

செய்கைகளுமாம். "நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற் றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின" என்பர் பரிமேலழகர். இத்தகைய மாண்பினளும் வளத்தக்காளு மாயினும் குடும்பம் சிறக்கும் என்பது உறுதியே. எனினும் இவ்விரண்டோடு கற்பும் இருத்தல் வேண்டும். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மையுண் டாகப் பெறின்." என்று வள்ளுவர் கூறுகின்றார். "பெறின்" என்னும் வினையெச்சப் பொருள் சிந்திக்கத்தக்கது. மனைத்தக்க மாண்பினளும் வளத்தக்காளுமாகிய வழியும் கற்பில்லாவிடில் பயனில்லை. அவை கற்பொடு கூடின் சிறந்த பயனுண்டாம். அத்தகையவளே கணவனுக்குப் பொருளும் புகழும் புண்ணியமும் பொருந்துதற்குக் காரணமாவாள். கற்பிலாதாரும் மனைத்தக்க மாண்பொடு வாழ்வர், வாழ்ந்தனர் என்பது "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்க ணையப்படும்." என்னும் குறளால் வலியுறும். "நலத்தின்கண்" என்பதற்குக் "குலநல முடையவனாய் வருகின்றவன் கண்ணே" எனவும், 'தோன்றின்' என்பது "தோன்றாமை விளக்கி நின்றது" எனவும், "ஐயப்பட லென்பது பாடமாயின் 'ஐயப்படுக' என விதியாக்கி யுரைக்க" எனவும் பரிமேலழகர் கூறுவது, நற்குல மகளிரிடத்தும் இத் தவறுண்டாம் என்பதை யுணர்த்தும். மனைத்தக்க மாண்பொடு வாழ்தல் கற்பிற்குரிய இலக்கணத்துள் ஒன்று என்பதை நோக்கினும் இக் கருத்துப் புலனாம். இதனாற்றான், "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவள் பெய்யெனப் பெய்யும் மழை" எனக் கற்பினிலக்கணம் வகுக்கும் வள்ளுவனார் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என அதனை விரித்தோதுகின்றார். நிறையால் தற்காத்துக் கொள்வதே கற்பு எனப்படுமாயினும் அந் நிறை நிலைத்து நிற்கத் தற்கொண்டான் பேணலும் தகைசான்ற சொற்காத்தலும் இன்றியமையாத் துணையாம். நிறையாற் தற்காத்தலே கற்

பெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது என்பதனை "நிறை காக்கும் காப்பே தலை" என்பது வலியுறுத்துகிறது. பரிமேலழகர் "தன்மாட்டுப் புகழாவது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது" எனத் "தற்காத்து" என்னும் குறளில் விளக்கம் கூறுவதும் இதனை வலியுறுத்தும். "நிறை யென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு" என்பதும் இதனையே வலியுறுத்தும். "செவ்வன், இறை காக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லாள், நிறைகாப்ப வைகும் நிறை", "வைகலும், அங்குழைக்கீரை யடகு மிசையினும், எங்கணவன் நல்கலினிது" 'எங்காதலன் நல்க வருவிருந்தோம்பும் வளம்' என்னும் புறப்பொருள் வெண்பாமாலைத் தொடர்கள் மேற்கருத்தையே வலியுறுத்துவன காண்க. "எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன் பழிகாணேன் கண்டவிடத்து" "பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார் நல்காமை தூற்றா ரெனின்," "அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு," "செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா முற்றா லுறாஅதவர்" என்னும் குறள்கள் நிறையின் வன்மையையும் பெருமையையும் புலப்படுத்துவதோடு திருமண விலக்கு (Divorce) அக்காலத்து விரும்பப்படாததொன்று என்பதையும் புலப்படுத்தல் காண்க. கற்புடையவளே கணவனுக்குப் பெரும் புகழளிக்கும் மனைவியாவாள் என்பது "புகழ் புரிந்த இல்" என்னும் குறளடியால் தெற்றமாம். "பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார் நன்னிலைய ராவ ரெனின்" "இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக் கண்ணிறை நீர்கொண் டனள்" என்னும் குறள்கள் ஒருத்திக்கு ஒருவனே கணவன் என்னும் கொள்கையை நிலைநிறுத்துகின்றன.

மனைவி விருந்தோம்பலில் விருப்புடையளாதல் வேண்டும். "நீணெடும் பந்த ரூண்டுறை பூட்டும் இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில வரிசையி னளிக்கவும் வல்லன்" (புறம் 331) என்பதனால் மனைவி வரும் விருந்தினர்களை அவரவர் தகுதி யறிந்து ஓம்புவாள் என்பது புலனாம். "கடனீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதும் கடனீ ரறவுண்

னும் கேளிர் வரினும்-கடனிர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி மாதர் மனைமாட்சி யாள்" (நாலடி 882) என்பதனால் தன் நலம் கருதாது வருவிருந் தோம்புவதே நோக்க மாதல் வேண்டும் என்பது புலனும். மகளிர் இழை வளை முதலிய கலனணிதலினும் மலரணிதலினும் பெரு விருப்புடையர்.

மகளிர் மணம்புரிந்துகொண்டுதான் வாழவேண்டும். மணமில்லா வாழ்க்கை அவர்கட்குக் கூடாது என்பது பண்டையோர் கொள்கை. "அற்றாக் கொன் றற்றதான் செல்வம் மிகுநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்னும் குறள் இதனை வலியுறுத்தும். இவ் வளம் பெறு மகளிர் மகப்பேற்றொடு வாழ்தல் வேண்டும். நன்கலம் நன்மக்கட் பேறும். "சந்ததிக் கழகு வந்திசெய் யாமை" என்பதோர் அமுதமொழி. மக்கட் பேற்றிற் காகவே மணம்புணர்தல் என்பது பெரியோர் கூறும் நல்லுரையாம். அக் கொள்கையே காதற் காமத்தை வளர்க்கும். இன்றேல் காமக் காமத்தால் கவினழிந்து நிலையழிந்து இன்னலுற நேரும்.

மகளிர் கற்புநெறியினின்றும் தவறாதிருக்க நிறையுடையாதல் வேண்டும். "நிறையென்னும் தாழுத்தாழ் வீழ்த்த கதவு" என வள்ளுவனர் குறிப்பது நோக்கத் தக்கது. நிறை வழுவாதிருக்கத் துணை செய்வன நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகியனவாம். பரிமேலழகர் "நாண்: இழிவாயின செய்தற்கண் விலக்குவது" (குறள் 1123), "பாத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல்" (குறள் 1257), "எஞ்ஞான்றும் கூடிபொழுகினும் அஞ்ஞான்று கண்டார் போன் றொடுங்குதல்" (குறள் 1297), "மடமை: கண்டவழி நினைந்து காணாதவழி மறக்குந் தவற்றைக் காணாவழி நினைந்து கண்டவழி மறத்தல்" (குறள் 1297) எனக் கூறுவர். தனது நிறைக்குக் கேடுவரும் என உணரும் காலத்து இழிவுறும் என நாணி, ஒன்றும் உணராதார் போல வாளாவிருந்து, இழிவுதரும் கேட்டிற் கஞ்சிப் பிற ஆடவர் மெய்ப்படுதலை வெறுத்து நிற்றல் வேண்டும். ஆதலின் இவை நான்கும் மகளிர் தற்காக்கும் படையாம்.

"நாற்குணமும் நாற்படையா வைம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

என்னும் நளவெண்பாப் பாட்டு உன்னுதற்குரியது. "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் இதனை வலியுறுத்தும். மகளிர் நல்லறிவுடையவர் என்பதைச், "செறிவும் நிறையும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பா லான" என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இயம்புதல் காண்க.

கணவனை யிழந்த மகளிர்க்கு அவன் இறந்த செய்தி கேட்டதுமே உயிர் நீங்கும். அவ்வாறு உயிர் நீங்கா மகளிர் அக் கணவனுடலொடு தீயில் புகுவர். அங்ஙனம் மாயாது கைம்பெண்ணுகிக் கணவனை நினைந்து தவநெறியில் நிற்பினும் நிற்பர். மூதானந்தம். தலைப்பெயனிலை, முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை, கணவனொடு முடிந்த படர்ச்சி, பாலைநிலை, முதுமாலை, தாபதநிலை என்னும் புறத்திணைத் துறைகள் இவ் வுண்மையை உணர்த்துவனவாம். "செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை" என்னும் குறள் இதனை வலியுறுத்தும்.

(தொடரும்)

மதிப்புரை

பாதசங்கிரகம்:—[நூலாசிரியர்: அறம்வளர்த்தான் என்பார். பதிப்பாசிரியர், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள். விலை ரூ. 4. விலாசம்: 'The Registrar, Annamalai University, Annamalai Nagar P. O,]

இஃது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைத் தமிழ் வெளியீடு 20. பரதம் நாடகத் தமிழாயினும், இயல் இசைத் தமிழ்க் கூறுபாடுகளும் ஒரு நெறிப்பாடின்றி இதில் விரவியுள்ளன. இதனுள் பலவேறு பாக்கள் கலந்திருப்பது, அவை பலவேறு ஆசிரியர் இயற்றியனவோ என ஐயமாக்குகின்றது. நாடகம், தாளம் என்பவற்றின் அரிய இலக்கணங்கள் சில இத்தொகுப்பு நூலால் நன்கு அறியலாவன. முழுதும் வடநூல் வழக்குப் பற்றி ஒழுகும் இது, அம்மொழியோடு இரண்டற இயைந்தே, முன்னாளில் தமிழிசை நாடகக் கலைகள் தழைத்து வளர்ந்தன என்றற்குச் சிறிய எடுத்துக்காட்டு என்னலாம்.

அரைகுறையாகி, நிரம்பாத பழையவுரை யொன்று இதன் பாக்களின் பொருளைத் தெளிய வுணர்த்துகின்றது. அதன்மேலும், பதிப்பாசிரியரவர்கள் பழையநூல் உரை மேற்கோள்களை யெல்லாம் அரிதின் ஆராய்ந்து தேடித் தொகுத்து அடிக்குறிப்பாக உதவி யுள்ளார்கள். இக் குறிப்புரை மிகப் பயன்தரு மென்பது இதனை ஒருகால் பயில்வார்க்கும் இனிது விளங்கும். மிகவும் நுனித்துணரவுரிய சில அரிய கருத்துக்களும் இதில் காணப்பெறுவது, அவர்களின் ஆய்வுத் திறனைப் புலப்படுத்துகின்றது.

ஆயினும், மூலத்தினும் உரையினும் சில பல வழுக்கள் இன்னும் திருத்தம் பெறல் இன்றியமையாததாம். பக்கம் 17-ல்

'செய்யவிரு கால்கூட்டிச் சேர்த்தழக மசையாமல்'

என அச்சிட்டிருக்கும் வெண்பாவடியை,

'செய்யவிரு கால்கூட்டிச் சேர்த்த முகமசையா(து)

என்று திருத்தியிருந்தால்சீரும் தளையும் சிதையாது சிறக்கும்.

இங்ஙனமே பக்கம் 20-ல்,

'புட்பாஞ்சலி வகுப்பு புனிதர்தில்லை மன்றுளினில்'

என்றிருப்பதை,

'புட்பாஞ் சலிவகுப் புப்புனிதர் தில்லைமன்றில்'

என வகையுளி பிரித்துப் படிக்கச் சீரும் தளையும் சிதையாதாம். இவை போல்வன யாரும் எளிதாகத் திருத்த இயலும்.

இனி, பக்கம் 18-ல் 'நாட்டிய தசப் பிராணன்' என்ற தலைப்பின் கீழ் வெண்பாவின் முதல் மூன்றடிகள்,

'மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழிற்
கையே புருவங் குறிப்பறிதல்—சேயலென்றீர்
அவைவிகற் பத்தீ றலாட லென்றார்'

என எட்டிவிருந்தவாறே பாட்டுப் பிழையாகப் பதிக்கப்பட்டுள்ளன. இதன் பழைய வுரை தலைப்பிலுள்ள 'தசப்பிராணன்' என்றதற்கேற்ப, 'மெய், முகம், கண்கள், கால், பண்பு, தொழில், கை, புருவம், குறிப்பறிதல், பண்; இவை பத்து விகற்பத்தாலும் ஆடப்படும்' என்று மிகத் தெளிவாக இங்கு விளக்கம் தருகின்றது. எனவே தலைப்பிலும் உரையிலும் குறிப்பிட்ட பத்துப் பிராணனும் குறையாமல் இவ் வெண்பாப் பகுதிக்கு உயிரூட்ட வேண்டும். அங்ஙனம் செய்யும்போது,

'மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழில்
கையே புருவங் குறிப்பறிதல்—செய்பண்
அவைவிகற் பம்பத்தி னாலாட லென்றார்'

எனத் திருத்தமுற்றுப் பொருளொடு பொருந்திச் சிறந்து காட்டும்.

இன்னும் பக்கம் 58-ல் பழைய வுரையின்கண் கடைப்பட்டது என்னும் பொருளில் வழங்கும் 'அதமம்' என்னும் வடசொல் 'அதன்மம்' என்று பிழைபட இரண்டிடத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இவை போல்வன இன்னும் உள. அவை யாவும் அடுத்த பதிப்பில் திருந்துதல் வேண்டும். நிற்க.

இவ் வெளியீடு போன்ற உத்தமப்பணிகளால் முத்தமிழ் வளர்க்கும் பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்பாக வுரியது. அது நீடு வாழத் தில்லைச் சிவபிரான் திருநோக்கு அருள்க.

அநுதாபக் குறிப்பு

இலங்கை-தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பண்டிதமணி திரு. க. சு நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் சென்ற 22—12—54ல் இவ்வுலகவாழ்வு நீத்து உயர்நிலையுலகம் எய்தினர். அவரது பெரும் பிரிவால் பரிவுற்ற தமிழினத்தவர் தனித்துறுதுயரில் அழுந்தினர். சிறப்பாக அவர்கள் செல்வக் குமாரர்கள், அருமை மருகர் ஸ்ரீ பூர்ணானந்தர் முதலிய இளைஞர்களுக்கு அளவாத அநுதாபமும் உரியதாகும்.

பாரதியாரவர்கள் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பழைய மாணவரில் ஒருவரெனப் பாராட்டற்குரியவர். தம் ஆயுளிறுதிவரை இச்சங்கத்தின் உறுப்பினராய் உதவியவர். இச் செந்தமிழில் எத்துணையோபல கட்டுரைகள் வெளியிட்டுச் சிறந்த பணி புரிந்தவர். சிலகாலம் இச் சங்கத் தனித்தமிழ்த் தேர்வுகளின் பரீக்ஷகராகவும் விளங்கினவர்.

இவர், வடமொழியை வெறுக்கும் கொள்கையில் சாராத, தூய தமிழார்வம் மிகப்படைத்தவர். 'மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனூர்' எனவும் இவர் தமக்கு மறுபெயர் புனைந்து கொண்டார்; சங்கத் தொகைச் செய்யுளே போன்ற உயரிய தனித் தமிழ்ப் பாக்களாக உலகியல் விளக்கம் என ஒரு நூலினை இயற்றினர். மற்றும் இவர் செய்தவை, வெளி வந்தனவும் வெளிவராதனவும், எத்துணையோ பல வுள. இறுதியாக இவர் எழுதி முடித்த 'திருவாசக ஆராய்ச்சிப் பேருரை' இவருக்குத் தமிழன்னை அமைத்துத் தந்த நினைவுச் சின்னம்போல நிலவும் என்னலாம்.

இப் பெருந்தகையாளரின் ஆன்மா இறைவன் திருவடியிற் கலந்து இன்புறுவதாகுக.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச், உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8
41.	பொருட்டொகைநிகண்டு	0	6
42.	அகராதிநிகண்டு	0	12
43.	மேகவிடுதூது	0	2
44.	திருக்குற்றாலமாலை	0	2
45.	தண்டலையார்சதகம்	0	4
46.	இராமோதந்தம்	0	8
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6
52.	கூடற்புராணம்	0	10
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12
56.	பாப்பாவினம்	0	10
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3
59.	கடம்பர்கோயில் உலா	0	6
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6
61.	கலைசைக்கோவை	0	12
62.	பெருந்தொகை	5	0
63.	குடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5
64.	சிராமலைக்கோவை	0	12
65.	மத்யமவியாயோகம்	0	2
67.	அமிர்தாஞ்ஜலி	0	2
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8
70.	திருச்சிறுபுலியூருலா	0	12
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களை கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளி நாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4–8–0. இதுவரை 50 தொகுதி கள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டு வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

MADRAS

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-டுக.] ஜய-ஸ்ரீ—மாசி-மீ [பகுதி-௪.
Vol. 51. February-March—1955. No. 4.

உள்ளுறை

வடமொழியில் தமிழ்ச்சொற்கள்: 97
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.

கோடைமலைத் தலைவர்கள்: 105
ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை

காஞ்சி-ஏகாம்பரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள்: 111
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

இயற்கையைப் பயன்படுத்துதல் 3. அணுசக்தி: 119
பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்

மதிப்புரை: 125
ப. ஜோதிமுத்து

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபைத் தீர்மானங்கள்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.
1955.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு பேராசிரியர், செந்நாவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௧.] ஜய-தை—மாசி௴ [பகுதி-௪.

Vol. 51. February-March—1955. No. 4.

வடமொழியில் தமிழ்ச் சொற்கள்

(டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம், ஏ.,)

"வடமொழியில் தமிழ்ச் சொற்கள்" என்ற தலைப்பைக் கண்டவுடனேயே சிலர் வியக்கலாம். ஏனென்றால் வடமொழியிலிருந்து தமிழ் மொழியிலே பலசொற்கள் வந்து வழங்குகின்றன என்பதுதான் பலராலும் பரப்பப்பட்டிருக்கின்ற கருத்தாக இருக்கின்ற காரணத்தால் என்க. ஆயினும் டாக்டர் கால்டுவெலர் நூறாண்டுகளுக்கு முன்னரேயே தமிழிலிருந்து வடமொழிக்குப் பழங்காலத்திலேயே சென்று சேர்ந்துவிட்ட சொற்கள் பல உண்டு என்பதைக் காட்டியுள்ளார். அவர் சொல்லியுள்ளதாவது, எப்பொழுதும் தமிழே வடமொழியினின்று கடன் வாங்கியுள்ளது எனக் கருதுவது தப்பு என்பதும், வடமொழி தானும் தமிழினின்று பண்டைக் காலத்தே கடன்வாங்கத் தயங்கியதில்லை என்பதுமாம். அதைப் போலவே, திராவிட மொழிகளிலிருந்து சமஸ்கிருதம் பல்வேறு சொற்களைக் கடன் வாங்கியுள்ள செய்தியை டாக்டர் குன்டெர்டு என்பார் விளக்கிக்காட்டியுள்ளார்.

இவற்றிற்கு எதிரே சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுதியிருக்கின்ற ஒரு சூத்திர உரையில், தமிழ்ச்சொற்கள் வட

மொழியில் சென்று சேரமாட்டா என்பது அவரால் கூறப்பட்டிருக்கக் காண்கிறோம். (சொல்லதிகாரம்-எச்சவியல்-சூத்திரம் ஐந்தின் உரை) இச் சூத்திரத்தின் உரையில் தமிழ்ச்சொல் வடபாடைக்கண் செல்லாது என்பதும், வடசொல் இல்லாத் தேயத்திற்கும் பொது என்பதும் அவரால் உரைக்கப்பட்டிருக்கின்ற தவறான கருத்துக்கள். இக் கருத்து அவர் வாழ்ந்த 13-வது நூற்றாண்டினையொட்டிய காலத்தில் இருந்த கருத்தாகமாத்திரம் நாம் எடுத்துக் கொள்ளுதல் கூடும்.

இக் காலத்திலும், பல தமிழ்ச் சொற்களை வடமொழியினின்று வந்தவையெனப் பேசுகின்ற தமிழன்பர்களும், தமிழ் அறிஞர்களும் சிலர் இருக்கிறார்கள். தமிழ் என்பதே திராவிடம் என்ற சொல்லின் திரிபு எனச் சொல்லித் தம்முள் மகிழ்வோரும், பிழை, யாழ் முதலிய அரும் தமிழ்ச் சொற்களெல்லாம் வடமொழியினின்று தமிழுக்கு வந்தன எனக் கூறி மகிழும் தமிழ் அறிஞர்களும் இருக்கிறார்கள்.

இக் கட்டுரையின் நோக்கம் தமிழ்ச் சொற்களிற் பல, பழங்காலத்திலேயே வடமொழிக்குச் சென்று வடமொழிபோன்று உருவம் பெற்றுவிட்ட காரணத்தால், பொதுவாக வடமொழியிலிருந்து தமிழுக்குப் போந்தவை அவை என மக்களால் பிறழ உணர்ந்தபடி இருந்து வருவதைக் குறிப்பிடுவதேயாகும். காட்டாக, 'அகில்' என்ற மரச் சொல் வடமொழியிலிருந்து பிராகிருதத்திற்குப் போய், பிராகிருதத்திலிருந்து தமிழுக்கு வந்திருக்கிறது எனத் திருவாளர் வையாபுரி பிள்ளை போன்றவர்கள் கூறுகிறார்கள், இச் சொல் சமஸ்கிருதத்திலேயும் பிராகிருதத்திலேயும் மாத்திரம் காணப்படுகிறதேயொழிய பிற இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின்கண்ணே காணப்படவில்லை. சிங்களத்தில் 'அகில்' என்ற சொல் இருக்கிறது. சிங்களமும் தமிழும் பண்டைக் காலத்தில் தொடர்புடைய மொழிகள். தமிழ், மலையாளம் ஆகியவற்றுள் 'அகில்' என்பது காணப்படுகிறது. துளுவில் 'அகிலு' என்ற வடிவம் உண்டு. "குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்" என்

பது பட்டினப்பாலையில் வரும் ஓரடி. இவ்வளவு தொன்மையான சான்று இதற்கு இருப்பவும், இது தமிழிலிருந்து வடமொழிக்கும், இந்திய-ஆரிய மொழிகளுக்கும் சென்றதென்று கூறுதிருப்பது பொருந்துவதாகத் தோற்றவில்லை.

'அம்பா' என்றவுடன் இது வடமொழிச்சொல் என்றும், 'அம்மா' என்பதுதான் தமிழ்ச்சொல் என்றும் சிலர் கருதுகிறார்கள். உண்மையில் தமிழ் 'அம்மா', 'அம்மை' என்ற வடிவங்கள்தான் 'அம்மாள்' எனத் திரிந்து பிறகு வடமொழிக்குச் சென்று 'அம்பா' என்ற வடிவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். "ஆள்" ஈறு திராவிட மொழிகளில் காணப்படுகின்ற பெண்மை விகுதி என்பது யாவரும் அறிந்தது. அச் சொல்தான் 'அம்பா', 'அம்பாலா', 'அம்பாலிகை' என்று சமஸ்கிருதத்திலும் காணப்படுகிறது என்ற கருத்தினை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகச் சமஸ்கிருதப்பேராசிரியர் பர்ரோ என்பவர் காட்டியுள்ளார்.

'அரவிந்தா' என்ற சொல் தமிழிலிருந்து வடமொழிக்குப் போயிருக்கிறது என்பதும் அவர் கருத்து. 'அரைவிரிந்த' என்ற சொல்தான் 'அரவிந்த' என்று மாறியுள்ளது என்பது அவரால் காட்டப்பட்டுள்ளது.

'கடக' என்ற சொல்லும் தமிழ் 'கட்டு' என்ற சொல் அடியாகப் பிறந்து வளையல் என்ற பொருளிலே வடமொழிக்குப் போயிற்றுப் போலும்! 'கடகா' என்பதற்குத் தக்கவரையில் அடிவேர் வடமொழியினர் சொல்லமாட்டாது இடர்ப்படுவர். கடினம் என்றவுடன் இச் சொல்தானும் வடமொழியெனப் பலர் கருதுகின்றார்கள். இது 'கட்டி' என்ற தமிழ்ச்சொல் அடியாகப் பிறந்திருத்தல் வேண்டும். கன்னடத்தில் 'கடுகு' என்றும், துளுவில் 'கட்டி' என்றும், தெலுங்கில் 'கடிதி' என்றும் காணப்படுகின்ற வடிவங்கள், சமஸ்கிருத 'கடினம்' இவற்றின் அடிவேர் வழியாகத் தோற்றியிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

'கவடு' என்ற தமிழ்ச் சொல் 'கபார்டா' என வடமொழி இருக்கு வேதத்திற் போய் ஏறியிருக்கிறது என்பது பேராசிரியர் பர்ரோ அவர்களது கருத்து. வடமொழி புராதனமான திராவிடச் சொல் ஒன்றைப் பண்டைய வடிவத்தில் இவ்வாறு மாற்றித் திருத்திக் கொண்டிருக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

'கமலம்' என்ற சமஸ்கிருதச் சொல்தானும் 'குவளை' என்பதன் திரிபு போன்று தோற்றுகிறது. தமிழில் 'குவளை' என்பது கன்னடத்தில் 'குவளே', 'கோவல்' என்ற வடிவத்திலும், தெலுங்கில் 'கலவா' என்ற வடிவத்திலும் காணப்படுகிறது. இவற்றின் அடியாகத்தான் 'கமலம்' என்பது தாமரையைக் குறிக்கத் தோற்றியிருத்தல்வேண்டும்.

வடமொழி மகாபாரதத்திற் காணப்படும் "கலஹ" என்ற சொல் தமிழ்க் 'கலங்கல்' என்றதன் அடியாகத்தான் பிறந்திருத்தல் கூடும். மலையாளத்தில் 'கலக்கம்', கன்னடத்தில் 'கலக்கு', துளுவில் 'கலம்புனி' முதலான வடிவங்கள் காணப்படுகின்றன. வடமொழியிலேயும் பிராகிருதத்திலேயும் 'கலகா' என்ற சொல் காணப்பட்டாலும், திராவிட அடிவேரிலிருந்துதான் இந்தச் சொல் முதலில் தோற்றியிருத்தல் வேண்டும் என்பது புலப்படும்.

தமிழில் வழங்குகின்ற 'கலை' என்ற சொல் வடமொழியின் திரிபு என எத்தனையோ பேர் சொல்லிவருகிறார்கள். ஆயினும், 'கல்' என்ற அடிப்படையிலிருந்து இச்சொல் பிறந்திருக்கிறது என்பது இன்னும் பலருக்கு நன்றாகத் தெரிந்திலது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிட மொழிகளிலெல்லாம் 'அறிவது' என்ற பொருளைத் தருவதற்கு 'கல்' என்ற அடிவேரே பயன்படுகிறது. இதனடியாகத்தான் 'கலை' என்ற சொல் தமிழிலே தோற்றியிருத்தல் வேண்டும். இதனை வடமொழியினர் 'கலா' எனத் திரித்து வழங்கலுற்றார்கள். வரலாறு இச்சொல்லின்கண்ணே மறைந்து கிடக்கிறது.

ஐதரேய பிராமணத்தில் காணப்படுகின்ற 'கவசம்' என்ற சொல் தமிழிலிருந்து வடமொழிக்குப் போனதொரு சொல்போலக் காணப்படுகிறது. தமிழில் 'கவர் வழி' என்றால் கிளைத்துக் கிடக்கின்ற வழி என்பது பொருள். சிலப்பதிகாரத்திலேயும் பத்துப்பாட்டிலேயும் 'கவர்' என்ற இச்சொல்லுக்குப் இப்பொருள் உண்மை அறியப்படும். மலையாளத்திலும் கன்னடத்திலும் இச்சொல் வழங்குகின்றது. ஆனால் வடமொழியிலும் அதனோடு தொடர்புடைய பிற மொழிகளிலும் காணப்படாமல் இச்சொல் தனித்திருக்கக் காண்கிறோம். அதனால் இது தமிழிலிருந்து வடமொழிக்குப் போனதொன்று என்று கூறுவது பொருத்தமுடையதேயாகும்.

'காநக' என்ற வடமொழிச்சொல் தமிழ் 'கா' என்ற சொல்லின் அடிப்படையில் தோற்றியது ஒன்றாம். முற்காலத்தில், ஓரெழுத்து ஒருமொழியாயிருந்த 'கா' என்பது 'கா'ன் என்ற 'ன'கரச் சாரியை பெற்றது. அதுவே இன்னும் கொஞ்ச காலங்கழித்து 'அம்' என்ற சாரியையும் பெறத் தலைப்பட்டது. எனவே 'கானம்' என்று ஆயிற்று. இதுதான் 'காநக' என வடமொழியில் சென்று வழங்குகின்றது.

'கிண்கிணி' என்ற சொல் வடமொழி மகாபாரதத்தில் காணப்படுவது தமிழ் 'கிண்' என்ற அடிப்படையில் தோன்றியது ஒன்று. ஒலிக்கின்ற பறைக்குக் 'கிணை' என்றும், மணிக்கு அல்லது தாளத்திற்குக் 'கிணை' என்றும் தமிழிற் பெயர்கள் வழங்கக் காண்கிறோம். கன்னடத்திலும் மலையாளத்திலும் துளுவிலும் 'கிணி' என்றும், 'கிண்கிணே' என்றும் வழங்குகின்ற வழக்குகள் உண்டு. அதனால் திராவிட மொழியின் அடிப்படையிலிருந்துதான் வடமொழிக்கு இச்சொல் போயிருத்தல் கூடும் என்பது ஊகிக்கத் தக்கதொரு செய்தி.

குழல் என்ற தமிழ்ச் சொல் 'குரால' என்று வடமொழியில் சென்று வழங்குகின்றது. 'கூந்தல்' என்னும் பொருளைக் குறிக்க

மலையாளத்திலும், தமிழிலும் கன்னடத்திலும் தெலுங்கிலும் இதனையொத்த சொற்கள் உண்டு. 'குழல்'-தமிழும் மலையாளமும். 'குருள்' கன்னடம். 'குருகு'-தெலுங்கு.

தமிழிலுள்ள கிணற்றினைக் குறிக்கும் 'கூவல்' என்ற சொல்தான் வடமொழி இருக்குவேதத்தில் 'கூப' என வழங்கியுள்ளதெனப் பேராசிரியர் பர்ரோ கண்டறிந்து கூறியிருக்கிறார். பொதுவாக, நம் நாட்டில் 'கூபம்' என்றவுடன் அது வடமொழிச் சொல் என மக்கள் மதித்து விடுகின்றனர். 'கூவல்' என்ற சொல் மலைபடுகடாத்திலும் சிலப்பதிகாரத்திலும் வந்திருக்கக் காண்கின்றோம். 'குடம் புகாக் கூவல்' என்று வந்த சிலப்பதிகார அடியைக் காண்க. துளுவிலும் 'குவலா' என்ற வழக்கு இருக்கிறது. திருத்தம் பெறாத திராவிட மொழிகளில் ஒன்றாகிய துளுவில் 'குவறு' என்ற வடிவம் காணப்படுவதும், வடமொழியையொத்த இனத்தைச் சார்ந்த வேறு மொழிகளில் அதைப் போன்றதொரு வடிவம் காணப்படாததும் இச்சொல் திராவிட இனத்திலிருந்து வடமொழிக்குச் சென்றிருப்பதொரு சொல் என்பதை நிலைநாட்டக் கூடிய சான்றுகளாகும்.

தமிழ், மலையாளம், கன்னடம் இவற்றில் வழங்குகின்ற 'குயில்' என்ற சொல்தான் 'கோகிலா' என வடமொழி மகாபாரதத்தில் வழங்கியுள்ளதென்றும் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

'கோட்டை' என்ற திராவிட சொல்லிலிருந்துதான் வடமொழி 'கோடா' என்பதும் எழுந்துள்ளது. தமிழில் 'கோடே' என்றும் மலையாளத்தில் 'கோட' என்றும், கன்னடத்தில் 'கோறே' என்றும், தெலுங்கில் 'கோட' என்றும் ஒத்த வடிவங்கள் வழங்குவதும், வடமொழியோடு தொடர்புடைய மொழிகளில் இவற்றைப் போன்றதொரு வடிவம் வழங்காததும் தக்க சான்றுகள் என்க.

'கர்தப' என்று கழுதையைக் குறிக்கும் இருக்குவேதச் சொல்தானும் திராவிடமொழியின் அடியாக எழுந்ததொன்றென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தமிழிலே 'கழுதை' என்பதும், மலையாளத்தில் 'கழுதா' என்பதும், தெலுங்கில் 'கடித' என்பதும், கன்னடத்தில் 'கத்தே' என்பதும் இச்சொல்லுக்கு உரிய வடிவங்கள். தெலுங்கு 'கடித' என்ற சொல்லுக்குப் பின் வடமொழி 'ப' என்ற சாரியை சேர்க்கப்பட்டு முடிவில் கர்தப என்ற வடிவு உண்டாயிருக்கிறது என்பது காட்டப்படுகின்றது. தமிழிலுள்ள 'கிடுகு' என்ற பண்டைச் சொல்தான் 'கேடகா' என வடமொழி மகாபாரதத்தில் போய் வழங்கியுள்ளது. முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு முதலான நூல்களில் காணப்படுகின்ற 'கிடுகு' என்ற சொல் 'கேடகா' என வடமொழியிற்போய்த்திரிந்து பிற்பாடு, மறுபடியும் இன்னொரு வடிவில் தமிழில் வந்து அது வழங்குகின்றது. தமிழ்க் 'கிடுகு', 'கேடகம்' என்று திரிந்த பிற்பாடு, மறுபடியும் 'கேடயம்' எனத் தமிழில் வந்து வழங்கி வேறொரு சொல்போலக் காட்சியளிக்கிறது. இது எதைப் போல் இருக்கிறதென்றால், பழைய திராவிட 'நாரங்கா' என்ற சொல் அராபிய, பர்சிய மொழிகளில் 'நாரன்ஜியோ' எனத் திரிந்து ஆங்கிலத்தில் 'ஆரஞ்சு' என ஆகித், திரும்பவும் தமிழில் 'ஆரஞ்சுப்பழம்' என வந்து வழங்குதலைப் போலுள்ளது என்க. ஆங்கிலத்தில் உள்ள 'பட்ஜட்' என்ற சொல்தானும் 'பை' என்ற பொருளைத் தரும் ஒரு பிரெஞ்சுச் சொல்லிலிருந்து முதலில் தோன்றி, ஆங்கிலத்திற்குப் போய்த் திரும்பவும் வேறொரு வடிவத்தில் இப்பொழுது வந்து வழங்குவதைப் போன்றே, 'கிடுகு' என்பதன் வரலாறும் இருக்கிறது.

தமிழிலுள்ள 'தண்ணுமை' என்பதுதான் 'டிண்டிம' என வடமொழியில் வழங்குகின்றது. ஒரு விதமான மத்தளத்தைக் காட்டுகின்ற 'தண்ணுமை' என்ற பழங்காலத் தமிழ்ச் சொல் கன்னடத்திலும், தெலுங்கிலும் 'துடுமு' என்று வழங்குகின்றது. அதுதான் வேறொரு சொல்போல 'டிண்டிம' என்றாகியுள்ளது.

'வில்' என்ற பொருளைக் குறிக்கக்கூடிய சமஸ்கிருதச் சொல்லாகிய 'சாப' என்பது மகாபாரதத்தில் வழங்கியுள்ளது. எனினும், அது திராவிட அடிவேரிலிருந்து வந்தது என்பது பேராசிரியர் பர்ரோ அவர்களது கருத்து. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்

கள் 'சாப்' என்ற சமஸ்கிருதச் சொல்லிருந்து தமிழ்ச் சாபம் என்றது வந்துள்ளதென வரைந்துள்ளார்கள். அதனோடு ஒத்த வடிவம் பிற இந்திய-ஐரோப்பிய மொழிகளில் இல்லாமலிருத்தலும், தக்க அடிவேர்ப் பொருள் கூறமுடியாதிருத்தலும், அதே நேரத்தில் கன்னடம் தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளிலிருந்து தக்க அடிவேர்ப் பொருள் சொல்ல இயலுதலும் இச் சொல் பண்டைக் காலத்தில் திராவிடத்தில் பிறந்தது எனக் கூறுதற்கு ஒத்த சான்றுகளாகும். கன்னடத்திலும், தெலுங்கிலும் 'சாசு' என்று கூறினால் நீட்டு என்பது பொருள். மலையாளத்தில் 'சாம்பு' என்று கூறினால் நீட்டம் என்பது பொருள். எனவே; நீட்டப்படுவதாகிய வில்லுக்கு 'சாபு' என்பது முதற்கண் சொல்லாயிற்று. அது 'சாபம்' எனப் பின் தமிழில் திரிந்தது. 'சாப்' என வடமொழியில் வழங்குகின்றது.

தமிழிலுள்ள 'தாண்டவம்' என்ற சொல் சமஸ்கிருதத்திலிருந்து வந்தது எனப் பலர் தவறுதலாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாகவத புராணத்தில் 'தாண்டவா' என்ற சொல் கூத்து என்ற பொருளில் வடமொழியில் வழங்கியுள்ளது உண்மையேயாகும். ஆயினும், 'தாண்டு' என்னும் திராவிட அடிவேரிலிருந்துதான் இச் சொல் உண்டாகியிருத்தல் வேண்டும். மலையாளம், கன்னடம் முதலியவற்றிலும் "குதி" என்ற பொருளில் தாண்டு என்ற சொல் வழங்குகிறது. தெலுங்கில் 'தாடு' என்று இச்சொல் காணப்படுகிறது. இதைப் போன்ற அடிவேர்ப் பொருளைக் கூறுதலோ, இதனையொத்த வடிவம் பிற இந்திய-ஐரோப்பிய மொழிகளில் உண்டு என்று காட்டுதலோ வடமொழியினரால் மாட்டாமையின் இச் சொல் தமிழிலிருந்து வடமொழிக்குப் போனதொன்றேயாகும் என்பது புலப்படும்.

இவை போன்ற பல்வேறு சொற்கள் தமிழிலிருந்து வடமொழியில் ஏறியிருந்தாலும், எடுத்துக் காட்டுவாரற்று இருத்தலாலும், எடுத்துக்காட்டலுறுவாரை ஏளனம் செய்வார் இருத்தலாலும், உண்மை வெளிப்படாமல் மாசு படிந்து கிடக்கின்றது. இம்மாசினை நீக்கும் நாள் எந்நாளோ?

கோடைமலைத் தலைவர்கள்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

மதுரை மாவட்டத்தின் மேல் எல்லையாக நிற்கும் மேற்கு மலைத் தொடர் தென்னம்பொருப்பு என்று சங்க இலக்கியங்களில் பெயர் கூறப்படும். இது பாலைக்காட்டிற்கும் தென் குமரிக்கும் இடையில் மேற்குக்கடற்கரையில் வடக்குத்தெற்காக நீண்டு தொடர்ந்திருக்கும் மலைத்தொடர். இதன்கண் பாலைக்காட்டுப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கித் திண்டுக்கல் வரையில் ஒரு சிறு தொடர் நீண்டு நிற்கிறது. இத்தொடரின் தென்பக்கத்தில் மலை முகடுகள் பலவுள்ளன. அவற்றுள் பொருநன்மாமலை என்பது ஒன்று; இப்பொழுது அது பெருமாமலையென மருவி வழங்குகிறது. இதன் உயரம் 7326 அடி. அதனைச் சங்க இலக்கியங்கள் கோடைமலை என்று குறிக்கின்றன. கோடைமலைத்தலைவனைக் கோடைப் பொருநன் என்று பண்டையோர் குறித்ததனால், கோடைமலை, பொருநன் மாமலையாய்ப் பின்பு பெருமாமலை எனப்படுவதாயிற்று. இக்கோடைமலையின் அடியிலுள்ள குளிர்ந்த காடுகள் கானல் என்ற பெயரால் இன்றும் சிறந்துள்ளன. அவற்றுள் ஒன்று கோடைக்கானல்; அப்பகுதி இன்று எழில் மிக்க மலைமேல் நகரமாய் இலங்குகிறது. கோடைமலையின் வேறு பகுதியில் கடியங்கானல் என்றொரு கானல் உண்டு; இது பொருநன்கானல் என்றும் வழங்குகிறது. இவ்வாறே இப்பகுதிகளில் வஞ்சன்கானல், தாமன்கானல் எனப் பல கானல்கள் உண்டு. இக்கானல் என்ற பெயரைச் சிறப்பித்துநிற்கும் கடியன், பொருநன், வஞ்சன், தாமன் என்பன மக்களைக்குறிக்கும் பெயர் என்பது சொல்லாமலே விளங்கும். இவர்கள் இக்கோடைமலையைச் சூழவுள்ள பகுதிகளில் வாழ்ந்த தலைவர்கள் ஆவர். இக் கோடைமலைத் தொடரின் கீழ்ப்பகுதியில் பண்ணைக்காடு, தோன்றிக்குடி எனச் சில பகுதிகள் உண்டு. இவையும் முறையே பண்ணி, தோன்றிக்கோ என்ற தலைவர்களைக் குறிப்பனவாகும். இங்கே காட்டிய தலைவர் பலரும் சங்க இலக்கிய காலத்தில் வாழ்ந்த பெருமக்கள்; இவர் அனைவரும்

கோடைமலையிலும் அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் வரையில் நிற்கும் மலைத்தொடரிலும் வாழ்ந்தனரெனச் சங்க இலக்கியம் கூறுகிறது. அன்றியும் இவர் பலரையும் கோடைமலைத்தலைவரென அவ்விலக்கியம் கூறுவதால் பண்டை நாளில் இம் மலைத்தொடர் கோடைமலைத்தொடர் என்ற பெயர் பூண்டிருந்தமை விளங்கும். அற்றாக, இப்போது இம் மலைத்தொடர் பழனிமலைத்தொடர் என்றும் இதன் மேலைப் பகுதி ஆனைமலைத்தொடரென்றும் வழங்குகின்றது.

கடியன் நெடுவேட்டுவன்:—

இக் கோடைமலைத் தலைவர்களில் கடியன் என்பவன் கடியன் நெடுவேட்டுவன் என்று சான்றோர்களால் சிறப்பிக்கப்படுகின்றான். இவன் காலத்தே முதிரமலைக்குரியனான குமணனும் அவனைப் புகழ்ந்து பாடிய பெருந்தலைச் சாத்தனாரும் வாழ்ந்தனர். இவனைச் சாத்தனார் பாராட்டி, இவனது கொடைநலத்தை மேகத்தோடு உவமித்துக் கூறியுள்ளார். கடலுக்குச் சென்ற மேகம் நீர் முகவாமல் திரும்பாதவாறு போல, இவன்பால் சென்ற பரிசிலர் பரிசில் பெறாது திரும்புவதில்லை என்ற கருத்துப்பட, "கடல்வயிற் குழீஇய அண்ணலங் கொண்மூ, நீரின்று பெயராவாங்குத், தேரொடு ஒளிறு மருப்பு ஏந்திய செம்மல் களிறின்று பெயரல பரிசிலர்கடும்பே" (புறம். 205) என்பது அப்பாடற்குறிப்பு. இக் கடியன் நெடுவேட்டுவனை, "கோன் சிலைவேட்டுவ" என்றும், இவன் கோடைமலைக்கு உரியவன் என்பதை, "வெள்வீ வேலிக் கோடைப்பொருந" என்றும் பெருந்தலைச் சாத்தனார் கூறுவதனால் நன்கு தெளிகின்றோம். இப்பொருநன், புகலடைந்தோர்க்குப் பெருந்துணை புரிவதையும், பகைத்துப் பொர வந்தோரை வலியற்றுச் சிதைய வென்று சிறப்பதையும் இயல்பாகவுடையன் என்பாராய், "உறுவர் செல்சார் வாகிச். செறுவர், தாள் உளம் தபுத்த வாள் மிகுதானை" யுடையன் என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

வஞ்சன்:—

இவன் சேரமான் வஞ்சன் என்றும் சங்க நூல்களில் குறிக்கப்படுகின்றான்; இதனால் இவன் சேரர் குடியில் முடிசூடும் முறைமை பெற்றவன் என்பது விளங்கும். இவனைத் திருத்தாமனார் என்ற சான்றோர் பாராட்டிப் பாடியுள்ளார். அப்பாட்டின்கண் இவன்

பாயல் மலைக்கு உரியன் என்பது தோன்றப் "பறையிசையருவிப் பாயற் கோவே" (புறம். 398) என்று பாடியுள்ளார். பாலைக்காட்டிற்கு வடக்கில் தொடர்ந்து குடகு நாடு முடியச் செல்லும் மலைத் தொடர் வானமலை எனப்படும். இதன் தென்பகுதி பாயல்மலைத் தொடர் எனப் பெயர் பெறும். அப்பகுதியிலும் தென்னம்பொருப்பின் வடபகுதியிலுள்ள கோடைமலை வரையிலும் இவனது ஆட்சி பரந்திருந்தது. அதனால் கோடைமலைப் பகுதியிலுள்ள கானல்களுள் ஒன்று வஞ்சன்கானல் என்ற பெயர் கொண்டு விளங்குகிறது. வஞ்சன் வாய்மை குன்றாத மொழியினன் என்றற்கு, "வாய்மொழி வஞ்சன்' என்றும் அவனுடைய ஊர் பழமையால் மேன்மையுற்றது என்றற்குப் "பெரும்பெயர் மூதூர்" என்றும் சான்றோராகிய திருத்தாமனார் என்பவர் (புறம். 398) சிறப்பித்துரைக்கின்றார். இவ்வஞ்சன் பெயர் பிற்காலத்தே அஞ்சன் என மருவியதோடு அவனது நாடும் அஞ்சனாடு எனப் பெயர் மருவி இன்றும் நின்று நிலவுகிறது. அஞ்சன்குன்று என்பது அஞ்சனகிரியென மருவி இப்போது நீலகிரி எனப் பெயர் பூண்டு பிறங்குகிறது. அஞ்சன்குன்றுகட்கிடையில் உள்ள தடவுகளில் வாழும் தடவரைத் தோடர் என்றும் தொதுவரென்றும் இக்காலத்தார் குறிக்கின்றனர். தங்கள் வரலாற்றை இழந்த மக்கள், மாக்களாய் வரிசையிழந்து கீழ்மையெய்துவர் என்றற்கு இத்தடவர் வரலாறு சிறிய சான்று பகர்கின்றது.

கோடைப்பொருநன் பண்ணி:—

இப்பொழுது கோடைக்கானலுக்குச்செல்வோர்க்கு மிக்க வசதியாக மலைமேற் சாலை அமைக்கப்பெற்றுளது. அச்சாலை வழியே செல்வோர், மலைமேற் சிறிது தொலைவு சென்றதும், சிறு குதிரைகள் மேல் வாழைத்தாறுகளை ஏற்றிக்கொண்டு மக்கள் வருவதும் போவதுமாக இருப்பதைக் காண்பர். சாலையின் இருமருங்கிலும் காணப்படும் மலைச்சரிவில் வாழைமரங்களும் பலாமரங்களும் காய்த்துக் கனி தாங்கி நிற்கும் காட்சி காண்போர் கண்களுக்கு இனிய விருந்து செய்து மகிழ்விக்கும். சாலையிலிருந்து ஒரு கிளைச்சாலை பண்ணைக்காடு என்னும் அழகிய ஊர்க்குச் செல்லுகின்றது. அங்கே செல்வமனைகளும் உயர்நிலைப்பள்ளி யொன்றும் சிறிய கடைத்தெருவும்

உள்ளன. மலைச்சரிவில் இருக்கும் அவ்வூரின் பெயரையும் அதனைச்சூழ்ந்து நின்று பசுந்தழை போர்த்துப் பசிய காட்சி வழங்கும் சோலைகளையும் நோக்குவோர்க்கு அதனைப் பண்ணைக்காடு என்று சொல்வது பொருத்தமாகவே தோன்றும். தெங்கும் வாழையும் தேமாவும் பலாவும் சிறந்து விளங்கும் இதனைப் பண்ணை யென்பதே அமையும்; காடு என மேலும் கூறுவது மிகை யென்னும் குற்றமாயிற்றே; மிகைபட மொழிவது குற்றமென வகுத்த மேலைத் தமிழ்ச் சான்றோர் இதனைப் பண்ணைக்காடு என மொழியமாட்டாரே என்று எண்ணலுற்றால் உண்மை தானாகவே ஒளிரத்தொடங்குகிறது.

பண்ணைக்காட்டின் புறத்தே பழம்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளன. பன்னெடுங்காலத்துக்கு முன்பே இது மிக்க சிறப்புடைய பேரூராக இருந்தமை தெரிகிறது. இவ்வூர்க்கண் பண்ணி என்னும் தலைவன் ஒருவன் இருந்தான் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. கோடைமலை தொடங்கித் திண்டுக்கல் வரையில் தொடர்ந்து நிற்கும் மலை பண்ணிமலை என்று பெயர் பெற்றிருந்தது. அழகன், செம்மையானவன் என்ற பொருள்பட நின்ற பண்ணியின் பெயர் நலம் தெரியாத பேதமையால் பிற்காலத்தார் சிலர் பண்ணிமலையைப் பன்றிமலை எனக்கொண்டு வடமொழிப் படுத்தி வாரகமலை, வாரககிரி என்றெல்லாம் வாய் தவறிவிட்டனர். வரலாற்றையிழந்த பேதைத்தமிழகம் இவ்வாறு எத்தனையோ வகையில் தன் புகழ்க்கு மாசு தேடிக்கொண்டிருக்கிறது. இது நிற்க.

பண்ணி என்பவன் தான் வாழும் கோடைமலைக்குத் தெற்கிலுள்ள தென்பாண்டி நாட்டுக்கு உரியவன். அவன் காலத்தே பாண்டிநாட்டை ஆண்ட பாண்டிவேந்தர்க்குத் தானைத் துணைவனாய் அவர்களுக்கு வெற்றி விளைவிக்கும் வில்லேருழவனாய் விளங்கினான்.

"இரு பேராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்" (அகம். 13)

என்பதனால் இது விளங்கும். கோடைமலைக்குரிய பொருநர் குடியில் தோன்றியவனாதலால் இவனை "வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்" என்று பெருந்தலைச் சாத்தனார் பெருமையுடன் கூறுகின்றார். ஒருகால் இப்பண்ணி என்பவன் பாண்டியர் பக்கல் நின்று

சிறிய போரொன்றைச் செய்து களவேள்வி செய்து வந்திருந்தோர் பலருக்கும் பெரும்பொருள் கொடை வழங்கிப் பெருமை பெற்றான். அவன் பெற்றபேறு வேறு பிறர் எளிதிற் பெறலாகாததொன்று என்று கண்ட பெருந்தலைச்சாத்தனார்,

"வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வதாயினும்" (அகம். 13)

என்று உவம வாயிலாக உயர்த்திக் கூறினார். "வரைநிலையின்றி இரவலர்க்கு ஈயும்" வள்ளலாகிய பண்ணி கோடைமலைப்பகுதியில் அதற்குரியனாய் விளங்கிய திறம் இன்று நம்மிடையே மறந்தும் மறைந்தும் போனமையால், பண்ணிக்காடாகிய பண்ணைக்காட்டின் பழமை நலம் இன்று புதுமையாய் இருக்கின்றது. இதன் உண்மை நிலை உணராமையால் கோடைப்பொருநன் என்ற தொடரிலுள்ள (அகம். 13) கோடை என்பதைக் கோட்டூர் என்பதன் மரூஉ முடிபாக அரும்பதக்குறிப்பு எழுதினோர் கொண்டொழிந்தனர்.

தாமன் தோன்றிக்கோன்:—

தோன்றிக்கோனாகிய தாமன் பெயர் சங்க நூலில் தாமான் எனக் காணப்படுகிறது. தாமன் என்ற பெயரே சங்க நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் திருத்தாமனார், முடத்தாமனார், ஆதித்தன் தாமன் எனப் பயில வழங்குதலால், தோன்றிக் கோவாகிய தாமனைத் தாமான் என்றது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையெனக் கோடல் வேண்டும். தோன்றிக்கோன் தாமனது பெயரால் அமைந்த தோன்றிக்குடி இன்று திண்டுக்கல்லுக்குத் தென்மேற்கில் கோடைமலைத் தொடரின் கீழைப்பகுதியில் உளது. இத்தாமன் பெயரால் உண்டாகிய ஊர் தாமனூர் என இருந்து பின் காமனூர் என மருவியது; தாமன் கானல் இப்போது தாம்பிரக்கானல் என வழங்குகிறது. காமனூரின் பழங்குறிப்புத் தாமனூர் என்பதும், தாமன் கானலின் பழமையும் அவற்றின் அருகில் தோன்றிக்குடி நின்று மலைவளம் சிறந்து மாண்புமிக்கிருப்பதும் நோக்கின் சங்க நூல் கூறும் தோன்றிக் கோனாகிய தாமன் என்பவன், கோடைமலைத்தொடரின் கீழ்ப்பகுதியில் பண்ணி என்பவன் காட்டுக்குக் கிழக்கே வாழ்ந்த தலைவன் என்பது இனிது பெறப்படும்.

இத்தாமனது தோன்றிமலையை "இழுமென இழிதரும் அருவி வான்றோய் உயர்சிமைத் தோன்றி" (புறம். 99) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துரைக்கின்றார். தோன்றிக்கோவாகிய தாமனை, "அறவர் அறவன் மறவர் மறவன், மள்ளர் மள்ளன் தொல்லோர் மருகன்" என்று அவர் பாராட்டுகின்றார். ஒருகால் சான்றோராகிய ஐயூர் முடவனார் கிள்ளிவளவனைக் காண்டற்கு அவன் இருந்த உறையூர் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், அவர் ஊர்ந்து சென்ற தேர்க்கு (வண்டிக்கு) நல்லதோர் எருது வேண்டியிருந்தது; அதனை அறிந்த இத்தாமன் அவர்க்கு ஊர்தியும் ஆனிரைகளும் நிரம்ப நல்கினான்.

இதுகாறும் கூறியதனால், கோடைமலையின் அடியில் வாழ்ந்த கடியன் நெடுவேட்டுவன் முதல், அம்மலைத் தொடரின் இடையில் வாழ்ந்த பண்ணியும், கீழ்ப்பகுதியில் வாழ்ந்த தோன்றிக்கோன் தாமனும் ஆகிய கோடைமலைத் தலைவர்கள் பலரும் கொடைவள்ளல்களாய்ச் சிறந்தார்கள் என்பதும் அவர்கள் வாழ்ந்த மலைத்தொடர் கோடைமலை யெனப் பெயர் பெறினும் இரவலர்க்கு வேண்டுவன நல்கும் கோடைமலையாய்ப் பயன் சிறந்து விளங்குகின்றமையும் இனிது விளங்கும். மேலும், தாமனது தோன்றிமலை கோடைமலைத் தொடர்க்கண் இருக்கும் அதுவேயன்றிக் கருவூர்க்கண்மையில் உள்ள தான்றோன்றி மலையாகாதெனக் கோடலே பொருந்தும் என்பதும் ஓராற்றால் கூறியவாறும்.

காஞ்சி-ஏகாம்பரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள்

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தியாகராசர் கல்லூரி, மதுரை.

காஞ்சிபுரம்

இந்நகரம் எப்பொழுது யாரால் உண்டானது என்பது திட்டமாகக் கூறக்கூடவில்லை. கரிகாலன் இந்நகரைச் சிறப்பித்தான் என்பது சேக்கிழார் கூற்று. அதற்கேற்ப, திருவேகம்பத்தில் கரிகாலன் உருவச் சிலை காணப்படுகிறது. திருவேகம்பம் எக்காலத்தில் உண்டானதென்பதும் கூற இயலாது. காஞ்சிபுரம் ஏறத்தாழக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பௌத்த சமயச் செல்வாக்குப் பெற்றிருந்த இடமாகும். பௌத்த சமயக் கலைஞானங்களிற் சிறந்த பெரியார் பலர் நாலந்தாப் பல்கலைக் கழகத்திற்கும் சீன நாட்டிற்கும் பேராசிரியராகச் சென்றிருந்தலைக் காணக் காஞ்சியில் அவர்களைத் தயாரித்து அனுப்பிய பல்கலைக் கழகம் ஒன்று இருந்திருத்தல்வேண்டும் என்பதை அறியலாம். பல்லவ காலத்தில் வடமொழிக் கல்லூரி ஒன்று நன்னிலையில் இருந்தமை தெரிகிறது. பௌத்த-சமண-சைவ-வைணவ சமயங்கட்குச் சிறப்பிடம் ஈந்த காஞ்சிமாநகரம்; இந்நால்வகைச் சமய நூல்களையும் பொதுவாகப் பலகலைகளையும் போதிக்கத்தக்க கல்லூரிகளைத் தன்னகத்தே பெற்றிருந்தது என்று கூறுதல் பொருந்தும்.

பலவகைக் கோவில்கள்

கி. பி. 640-இல் சிறுத்தொண்டரைச் சேனைத் தலைவராகக் கொண்ட நரசிம்மவர்மன் காலத்தில் காஞ்சியைக் கண்டு சென்ற ஹியூன்-சங் என்ற சீன வழிப்போக்கன் காஞ்சியில் பலகோவில்கள் இருந்தன என்பதும், அவற்றுள் பல, திகம்பர சமணருடையன என்பதும் குறித்துள்ளான். அவன் காலமே அப்பர் சைவராக மாறிச் சமயப் பிரசாரம் செய்துவந்த காலம். காஞ்சியில் ஏகாம்பரர் கோவிலும்

திருக்கச்சி மேற்றளியையும் அப்பர் பாடியுள்ளார் என்பதைக் காண, ஹியூன்-சங் காஞ்சிக்கு வந்தபொழுது இவ்விரு சிவன்கோவில்களும் சிறந்த நிலையில் இருந்தன என்பதை நன்குணரலாம். அப்பருக்குப் பின்னரே கச்சிநெறிக் காரைக்காடு, அநேகதங்காபதம், ஓணகாந்தன் தளி என்பன சிறப்புற்றன என்பது தேவாரத்திலிருந்து அறியலாம். சுந்தரர்க்குச் சிறிது அடுத்து வந்த மாணிக்கவாசகரும் திருவேகம்பம் ஒன்றையே சிறப்பித்துக் கூறியிருத்தல், அதன் பழமையையும் பெருமையையும் வலியுறுத்துவதாகும்.

திருவேகம்பம்-அமைப்பு

நாயன்மார் காலத்துக் கோவில்களெல்லாம் சிறிய அளவில் அமைந்தவையாகும். கருவறை, நடு மண்டபம், முன் மண்டபம் ஆகிய மூன்றைக் கொண்டதே கோவிலாகும். அதனைச் சுற்றிலும் மதிற்சுவர் உண்டு. இத்தகைய சிறிய கோவில்கள் பல்லவர் காலத்தில் படிப்படியாகப் பெரிதாக்கப்பட்டன; பிற்காலச் சோழர் காலத்தில் மேலும் பெரிதாகக் கட்டப்பட்டன. முன்சொன்ன சிறிய கோவிலைச் சுற்றிலும் இசை மண்டபம், வியாக்யான மண்டபம், நடனமண்டபம், நாடக அரங்கு முதலியன அமைந்தன. இப் பெருக்கம் பல்லவர் காலத்திலேயே (நாயன்மார் காலத்திலேயே) ஓரளவு இருந்ததாயினும், பின்வந்த சோழர் காலத்தில் விரிவடைந்தது. திருக்கச்சி மேற்றளி, திருவேகம்பம், திருவொற்றியூர்க்கோவில் முதலியவற்றில் மடங்கள் இருந்தன. அவை சமயக்கல்வி, தமிழ்க்கல்வி, இவற்றைப் பரப்பி வந்தன. அப்பர் காலத்தில் திருவேகம்பத்தில் காபாலிக மடம் ஒன்று இருந்திருத்தல் கூடும் என்பது மகேந்திரவர்மன் எழுதிய 'மத்தவிலாசப் பிரகசன' த்தால் ஊகித்து அறியப்படும்.

திருவேகம்பம் பல்லவர் காலத்தில் சிறிய அளவிலும், பின்னர்ச் சோழர் ஆட்சியில் விரிவடைந்தும், அதன் பின்னர் விஜயநகரத்தார் ஆட்சிக் காலத்தில் மிக்க விரிவடைந்தும் இருத்தல்வேண்டும் என்பது அக் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களைக் கொண்டும் கட்டட அமைப்பு முறைகளைக் கொண்டும் துணியலாம். இன்றைய கோவிலுக்குள் கவ-

னிப்பாரற்றுப் பாழடைந்து கிடக்கும் (நந்தவனத்திற்குள் இருக்கும்) நடராஜர் கோவில், உருமாறி இடிந்து கிடக்கும் அம்மன் கோவில், திருச்சுற்று மாளிகை என்னும் பகுதிகள் சோழர் காலத்தனவாகும். ஏனைய பெருக்கங்கள் பிற்காலத்தனவாகும். இஃது உண்மை என்பதை மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திரு அண்ணாமலைக்கோவில், சிதம்பரம் கோவில் முதலிய பெருங் கோவில் கட்டடக்கலை உணர்வைக் கொண்டு நன்கு அறியலாம்.

கல்வெட்டுச் செய்திகள்

அரசரும் காலமும்

ஏகாம்பரநாதர், நடராஜர், திருக்கச்சிமயானர் இவர் தம் கோவிற் கல்வெட்டுக்கள் சோழர், விஜயநகர அரசர், அரசாங்க உயர் அலுவலர் இவர் தம் காலங்களில் வெளியிடப்பட்டவையாகும். சோழர் கல்வெட்டுக்கள் முறையே முதல் இராசாதிராசன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1118-1218) காலத்தவை. எனவே, இப் பெருங்கோவில் சோழப்பேரரசர் காலத்தில் ஏறத்தாழ 200 வருடகாலம் நல்ல நிலையில் இருந்ததை இக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

சோழர் ஆட்சிக்குப் பிறகு உண்டான விஜயநகர ஆட்சிக் காலத்திலும் இக் கோவில் நன்னிலையில் விளங்கியது என்பது எட்டுக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. அவை முறையே புக்கராயர், புவனேக வீரன், கணபதி தேவன், கம்பணவுடையார் என்பவர் (கி. பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகள்) காலமாகும்.

நாட்டுப் பிரிவுகள்

தொண்டை மண்டலம் முதல் இராஜராஜனால் 'ஜெயங்கொண்ட சோழமண்டலம்' என்று பெயரிடப்பட்டது. அப்பெயர் அவனுக்குப் பின் ஐந்து நூற்றாண்டுகள் வரை அப்படியே இருந்தது. 24 கோட்டங்களின் பெயர்களும் வழக்கில் இருந்தன. அவற்றுட் சில காண்க:

1. எயிற்கோட்டத்துக் கோனேரி நாட்டுக் கோனேரி (867)
2. எயிற்கோட்டத்து எயில்நாட்டுப் புதுப்பாக்கம் (824).
3. பழுவூர்க்கோட்டத்துத் தனியூரான காவிரிப்பாக்கம் என்ற விக்ரம சோழச் சதுர்வேதி மங்கலம். (822)
4. தாமல் கோட்டத்துக் களத்தூர் (814).
5. பாண்டி மண்டலத்து வீரநாராயண வளநாட்டுச் சமரகோலாகல நல்லூர்.
6. புலியூர்க் கோட்டத்து உரும்பில் வல்லம் (350).
7. மாற்றுக் காட்டுக் கோட்டத்து எறுதிபுதூர் என்ற ஏகாம்பரநாத நல்லூர் (351).
8. எயிற்கோட்டத்துக் காரையூர் (351).
9. பெரும் பாணப்பாடிக் கரைவழி ஆந்தி நாட்டு மேல் கூற்றுத் தாமரைச் செலூர் (817).

கோவிலுக்கு விடப்பட்ட தானங்கள்

1. திருநந்தா விளக்கு ஒன்று, இரண்டு வைக்கக் காலிகள் தானமாக விடப்பட்டன. ஒரு விளக்குக்கு 33 பசு வீதம் தானம் விடப்பட்டது என்பதும் இரண்டு விளக்குகட்கு 64 பசுக்கள் தானம் விடப்பட்டன என்பதும் கவனிக்கத்தக்கன. இவற்றைக் கோவில் இடையர் பெற்று நாளும் விளக்கு எரிக்க நெய் அளித்து வந்தனர்.
2. அரசன் அல்லது அரசப்பிரதிநிதி பிறந்த நாளன்று கோவிலில் சிறப்புப் பூசை நடத்த விட்ட தானம்.
   - (a) தாமல் கோட்டத்துக் களத்தூர் தேவதானம்.
   - (b) சமரகோலாகல நல்லூர் ,,
3. உத்தர அயனம், மாசிமகம் முதலிய விசேட காலங்களில் சிறப்புப் பூசைக்காகக் காசு தானம்.
4. கோவிலுக்கென்றே ஊர், நிலம் முதலியன தானம்.
   - (a) எயிற்கோட்டத்து எயில் நாட்டுப் புதுப்பாக்கம் தேவதானம் (824).

   - (b) பொன் மேய்ந்த கம்பன் வளாகம் குழி ஆயிரம் தேவதானம் (821).
   - (c) திருப்புக்குழிக்குப் பக்கத்தில் நிலதானம் (825).
   - (d) எறுதி புதூர், காரையூர், திருவாய்ப்பாடி, சிங்காரத் தோப்பு தேவதானம் (351).

தானம் விடப்பட்ட பசுக்கள் வகை

(1) பால்பசு 10 + சினைப்பசு 12 + வறள் பசு 6 + கிடாரி 4 + எருது 1. (822).

(2) நற்பசு 32 + எருது 1. (816)

(3) பால்பசு—சினைப்பசு + நாகு உட்பட 2க்கு 32 + எருது 1. (819)

(4) பசு 32 + எருது 1. (817)

(5) பசு 32 + எருது 1, (823)

(6) பால்பசு 10 + சினைப்பசு 10 + பொலிமுறை நாகு 12 (32) + எருது 1. (350)

பசு வகைகளை நோக்க நாகு என்பது மணப்பருவத்துப் பசு என்பதும், பொலிமுறை நாகு என்பது கன்று ஈனத் தகுதியுடையது என்பதும், இவ்வினத்தின் இனம் பெருக்க எருது ஒன்று உடன் தானம் செய்யப்பட்டதென்பதும் அறியலாம். 'நாகு' என்பதன் பொருள் சிறப்பு நோக்கத் தக்கது.

கோவில் இடையர்

இப் பசுக்களைப் பெற்ற இடையர் கோயில் சுரபி இடையர் (818) என்றும் கோயிலில் விளக்குக்காக இவற்றைப் பெற்று நெய் நாடோறும் தந்து வந்தனர். ஆதலால் கோயில் விளக்குக் குடிமக்கள் (816) என்றும் பெயர் பெற்றனர். இக் கல்வெட்டுக்களில் வழக்காறுகொண்ட அவர் தம் பெயர்கள் செல்வக்கோன், தழுவக்குழைந்தான், அமுதவல்லவக் கோன், சிறுநம்பிக்கோன், குருகுலராயக்கோன், பெருமாள்கோன்,

சோமக்கோன், திருவேகம்பக்கோன், நாக்குநாயகக்கோன், சந்திரக்கோன், மலையக்கோன் என்பன. இவர்கட்குத் தலைவன் 'திருவிளக்கு மன்றாடி' எனப்பட்டான்.

கோவில் அர்ச்சகர் பெயர்கள்

அக்காளிபட்டன், தேவசிவன், நாற்பத்தெண்ணாயிரபட்டன், (இவன் மனைவி சூரியதேவ ஆச்சாணி), போரேற்றுப் பெருமான் (இவன் சிறியதாய் அன்புடை ஆச்சாணி), சாமக்கொடி* பட்டன், கம்பாண்டான், புராணசிந்தாமணிபட்டன், திருச்சிற்றம்பலபட்டன், விடங்கப்பட்டன் என்பன கோவில் அர்ச்சகர் பெயர்களாகும்.

கோவிலில் நடைபெற்ற விசேடபூசைகள்

மாசிமகவிழா, உத்தர அயந விசேடபூசையில் சஹஸ்ர கலசம் ஆட்டல், திருவோணநாள்விழா, புவனேகவீரன் சந்திபூசை, கணபதி தேவன் சந்தி என்பன.

வழக்கில் இருந்த அளவைகள்

நெல் அளக்க அருமொழி தேவன் மரக்கால் அரசாங்க அளவையாக இருந்தது (867). கோவிலில் நெய் அளக்க திருவேகம்பநாழி என்பது பயன்பட்டது (350).

பண்டாரம், நாணயம் முதலியன

கோவில்பண்டாரம் (Treasury) தேவர்பண்டாரம், ஸ்ரீபண்டாரம் எனப் பெயர்பெற்றன. கோவில் கணக்கன் இருந்தான். அவன் பெயர் திருவேகம்பம் உடையான் என்பது. குருக்கள் 'பட்டர்' என்றும் 'நம்பிமார்' என்றும் பெயர் பெற்றனர். பரிசாரகர், திருமஞ்சனம் எடுப்பார் திருப்பள்ளித் தாமம் தொடுப்பார், கோவிலைக் கண்காணிக்கும் மாகேசுவரர், தேவரடியார் முதலியோர் கோவிலில்வேலைபார்த்து

* இதுவே காமகோடி என மாறியது போலும்.

வந்தனர். கோவிற் பண்டாரத்தில் பொன்னை உரைத்துப் பார்க்கக் கட்டளைக்கல் (867) இருந்தது. மாற்றுக் குறையாத தூயபொன் என்பதற்கு அடையாளமாக அரசாங்கத்தாரால் துளையிடப்பட்ட பொன்நாணயம் 'துளைப்பொன்', 'துளைநிறைபொன்' எனப்பட்டது. 'கழஞ்சு' என்பது பொன் நிறுத்தலளவைப் பெயர். வழக்கில் இருந்த காசு 'அன்றாடு நற்காசு' எனப் பெயர் பெற்றது. இப்பொழுது 'பட்டைச்சாதம்' என்பது அக்காலத்தில் 'சட்டிச்சோறு' என வழங்கியது (867). கோவில் வேலைகளில் மாணிகள் (பிரமசாரிகள்) விசேடகாலங்களில் பங்கெடுத்துக் கொள்வர். முதற் குலோத்துங்கன் காலத்தில் உத்தர அயந விசேட பூசையில் மாணிகள் எண்மர் பங்கு கொண்டனர்.

பொதுச் செய்திகள்

(1) அக்கால நில அளவை "அறுபத்தொன்பதே எண்மா அரையரைக்காணி முந்திரிகை.........நூற்றிருபத்து நாலரையே நாலுமாக்காணி முந்திரிகை" எனவரும் குறிப்புக்களால் அறியலாம். வேலி-மா-முந்திரிகை என்பன நில அளவைப் பெயர்கள்.

(2) 'தனியூர்' என்பது இக்கால Town என்பது (காவிரிப்பாக்கம்-822). 'நகரம்' என்பது இக்கால City என்பது (காஞ்சிபுரம்-820).

(3) சதுர்வேதிகள் எனப்பட்ட (நான்கு வேதங்களில்வல்ல) மறையவர்க்குத் தானமாக விடப்பட்ட ஊர் 'சதுர்வேதிமங்கலம்' எனப்பட்டது. புதுப்பாக்கமான குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலம் (824), காவிரிப்பாக்கமான விக்கிரமச்சோழ சதுர்வேதிமங்கலம் (822) என்பன இத்தகையவை.

(4) இக்காலத்தில் 'உருப்படி' என்பது அக்காலத்தில் 'உரு' என வழங்கியது.

(5) 'அவ்வையார்' என்ற வழக்கு 'அம்மையார்' என்பது போன்றதாகும். இராஜராஜன் தமக்கையார் 'குந்தவ்வையார்' எனப்பட்டதும், கம்பணவுடையார் மனைவி 'இராமதேவி-அவ்வையார்' எனப்பட்டதும் காண்க. 'அவ்வையார்' என்பதே 'ஔவையார்' என்பதினும் பொருட்சிறப்புடைய வழக்காகும். இச் சொல்லே 'அவ்வா' எனத் தெலுங்கில் குறைந்து வழங்குவது.

(6) கறியமுது எனப்படும் பதார்த்தவகைக்கு 'வெஞ்சனம்' என்ற வழக்குண்டு (814). இஃது இன்றும் தென்னாட்டில் வழங்கப்படுகின்றது.

(7) கல்வெட்டு 348–A-இல் உள்ள செய்யுட்கள்:

1. அடுகெயிலை முன்னாளில் ஆடகக்குன் றிட்ட
வடுமறைந்து போயும் மறையா—முடுகுசமர்
மாற்றோர் தொழுந்திருமால் மாவுதைப்ப வேல்வழுதி
தோற்றோடிப் போன சுவடு.

2. மாலாக்கி இந்திரை யைத்திருத் தோள்வைத்து வையகத்தைக்
கோலாற் புரந்தருள் மாவலி வாணன்நன் கொற்றவடி
வேலால் துரப்புண்ட பின்விறல் மாறன் வெகுண்டுபெண்டு
காலாற் குடித்த கடல்கண்க ளால்விழக் கண்டனமே.

3. ஏற்றார்க் கிடாதார் இலையென்ப தின்றறிந்தேம்
சீற்றத் திருமால் செருவெல்க—மாற்றிலாப்
பொன்னிட்டான் சென்னிகொடிப் பள்ளியிட்டான் சேரமான்
வென்னிட்டான் கொற்கையார் வேந்து.

இயற்கையைப் பயன்படுத்துதல்

3 *அணு சக்தி

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B.L., சென்னை.

பண்டைக் காலத்தில் இயற்கையைத் தெய்வமாகக் கொண்டு, அதற்கு அஞ்சி நடந்துவந்த மனிதன் மேன்மேலும் அறிவு பெற்று, இயற்கையின் பகுதிகளாகிய காற்றையும், நீரையும், கடலையும், வெப்பத்தையும், குளிரையும், இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணமாகிய சூரியனையும், மின்சாரத்தையும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான் என்று முன்னால் பார்த்தோம். இவை யாவும் வியக்கத்தக்க விஷயங்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும், இவை எல்லாவற்றையும்விட இன்னும் அற்புதமாக உள்ளது அவன் இப்பொழுது பயன்படுத்த முயன்றுகொண்டிருக்கும் இயற்கைப் பொருளாகிய அணு (Atom) என்னும் பொருள்.

அணு என்பது மூலகங்களின் (Elements) மிகமிக நுண்ணிய பகுதி. அது கண்ணுக்குத் தெரியாத அளவில் சிறியது. அதன் சிறுமையை நம்மால் மனத்தாலும் தெரிந்துகொள்ளுவது அரிது. இரண்டோர் உதாரணங்களால் இதை விளக்கலாம். அணுக்களில் மிகச் சிறியவை ஹைடிரஜன் (Hydrogen) அணுக்கள். இருபத்தைந்து கோடி ஹைடிரஜன் அணுக்களை வரிசையாக அடுக்கினாலும் ஓர் அங்குலம் ஆகாது! அணுக்களில் மிகப் பெரியவை யுரேனியம் (Uranium) அணுக்கள். பத்துக் கோடி யுரேனியம் அணுக்களை வரிசையாக அடுக்கினால்தான் சுமார் ஓர் அங்குல நீளம் இருக்கும்!

இவ்வளவு நுண்மை பொருந்தியதாயுள்ள அணுவைப் பகுக்க முடியாது என்று நெடுங்காலமாக எண்ணிவந்தார்கள். அதனால் அதற்கு 'ஆடம்' (Atom), அதாவது பகுக்க முடியாதது என்னும் பெயரைக் கொடுத்தார்கள். ஆனால், சில காலமாக அணுவும் பகுக்கக் கூடியது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

---

* சென்னை அகில இந்திய வானொலி நிலயத்தில் 21—-7–54-ல் ஒலி பரப்பியது; அந் நிலயத்தார் அநுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

ஒவ்வோர் அணுவிலும் இரண்டு முக்கியமான பகுதிகள் உண்டு. அணுவின் நடுமையத்தில் உட்கரு (Nucleus) என்னும் ஒரு பகுதி இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள வெளியில், அதிலிருந்து சற்று தூரத்துக்கு—மிக நுண்ணிய தூரத்திற்கு—அப்பால், மின்னணு-மேகம் (Electron Cloud) எனப்படும் ஒன்று இருக்கிறது. அணுவின் உட்கருவிலே முக்கியமாக இரண்டு வகைப்படும் மிகமிக நுண்ணிய பொருள்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுக்குப் 'புரோட்டான்' (Proton) என்று பெயர். மற்றொன்றுக்கு 'நியூட்டிரான்' (Neutron) என்று பெயர். இவை மிகவும் நெருக்கமாக உட்கருவில் அமைந்திருக்கின்றன. புரோட்டான் நேர்மின்சார (Positive) ஏற்றம் உடையது. நியூட்டிரானுக்கு யாதொரு மின்சார ஏற்றமும் இல்லை.

இப்படி அமைந்துள்ள அணுவிலே அதன் உட்கருவைச் சுற்றி மின்னணு மேகம் சுழன்றோடிக் கொண்டேயிருக்கிறது—சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் சுழன்றோடுவது போல. ஒவ்வோர் அணுவும் ஒரு சூரியமண்டலம் என்று கற்பனைமனம் படைத்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், எத்துணை சிறிய சூரிய மண்டலம்!

ஹைடிரஜன் அணுவின் குறுக்களவு ஓர் அங்குலத்தில் இருபத்தைந்து கோடியில் ஒரு பங்கு என்று பார்த்தோம். அணுவின் உட்கருவில் உள்ள புரோட்டானின் அளவு அப்படிப்பட்ட ஹைடிரஜன் அணுவில் இருபது கோடியில் ஒரு பங்கு. மின்னணு எனப்படும் எலெக்டிரான்' (Electron) என்பது அளவில் இதைவிடச் சற்றே பெரிதாயினும், எடையில் புரோட்டானில் ஆயிரத்து எண்ணூற்று நாற்பதில் ஒரு பகுதியே உள்ளது.

'இவ்வளவு நுண்மை பொருந்திய பகுதிகளால் அமைந்த மிக நுண்ணிய பொருளாகிய அணுவிலிருந்தா சக்தியைப் பெற முயலுகிறார்கள்? இத்தனை நுண்மையான அணுவிலிருந்து பெறக்கூடிய சக்தியும் மிக நுண்ணியதாகத் தானே இருக்க முடியும்? இவ்வளவு சிறிய சக்தியால் என்ன பயன் உண்டாகக் கூடும்?' என்று கேட்கலாம். ஆனால், உண்மையில் அணுவின் உள்ளே அளவிறந்த சக்தி அடங்கிக்கிடக்கிறது.

இயற்கையிலுள்ள பொருள்களிலிருந்து அவற்றின் உள்ளடங்கிய சக்தி இயற்கையாகவே வெளிப்பட்டுவருவதைச் சுமார் அறுபது வருஷங்களுக்குமுன் 'பெக்கெரெல்' (Becquerel) என்பவர் தற்செயலாகக் கண்டுபிடித்தார். அதைப் பற்றிய ஆராய்ச்சிகளைக் 'கியூரி' தம்பதிகள் (Professor and Madame Curie) செய்து, ரேடியத்தைத் (Radium) தனியாகப் பிரித்தெடுத்தார்கள். இதனால் பல நற்பயன்கள் விளைந்தன.

பின்பு, 'ரதர்போர்டு' (Rutherford), 'ஸாடி' (Sody) என்னும் விஞ்ஞானிகள் இருவர் ரேடியத்தின் விந்தைச் செயலை நுணுகி ஆராய்ந்தார்கள். அதிலிருந்து மூன்று வகையான கிரணங்கள் வெவ்வேறு வேகங்களோடு வீசி வெளிப்படக் கண்டார்கள். இந்த நிகழ்ச்சிக்கு ரேடியக் கிளர்ச்சி (Radio-activity) என்ற பெயரைக் கொடுத்தார்கள்.

இன்னும் இதை ஆராய்ந்தபோது, இவ்வாறு கிரணங்களை வீசி வரும் ரேடியமானது காலடைவில் தன் கதிர்-வீசு-சக்தியை இழந்து ஈயம் (Lead) என்னும் வேறொரு பொருளாக மாறிவிடுவதைக் கண்டார்கள். அப்படிக் கிடைக்கும் ஈய அணுவின் எடை அதை ஈன்ற ரேடியம் அணுவின் எடையை விடச் சற்றே குறைவு. ஆகையால், ரேடியத்தின் பொருளின் ஒரு பகுதி சிதைந்து அழிந்துபோகிறது என்றும், அந்தப் பொருள் சிதைவால் சக்தி-அளவிறந்த வெப்ப சக்தி-தோன்றுகிறது என்றும் முடிவு செய்தார்கள்.

சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் இந்த விஷயத்தை ஆராய்ந்த 'ஐன்ஸ்டைன்' (Einstein) என்பவரும் பொருளானது சக்தியாக மாறக்கூடும் என்று உறுதியாகக் கூறினார். அப்படி மாறும் போது பிறக்கும் சக்தி இன்ன அளவுள்ளதாக இருக்கும் என்றும் ஒரு சூத்திரத்தால் வெளியிட்டார். பின்பு, இத்துறையில் மென்மேலும் ஆராய்ச்சிகள் நடந்தன. இயற்கையில் ரேடியம் முதலிய பொருள்கள் மிகமிக மெதுவாகவே சக்தியை வீசிவருகின்றன. ஆயினும், அவற்றைத் துரிதப்படுத்தவோ, மாற்றவோ, யாதொரு வழியும் தெரியவில்லை. பின்பு, அணுக்களைப் பிளக்க ஏதாவது வழி

யுண்டானால், அப்போதும் சக்தியைச் சட்டென்று பெற முடியும் என்று தெரிந்து, அதற்குரிய முயற்சிகளை நடத்தினார்கள். அணுக்களைத் தகர்க்க வழிகளையும் அதற்கு வேண்டிய கருவிகளையும் கண்டு பிடித்தார்கள். இந்த முறைக்கு அணுப் பிளவு (Fission) என்று பெயர். இதில் முயன்றவர்களில் 'காக்கிராப்ட்' (Cockroft), 'வால்டன்' (Walton) என்னும் இரண்டு ஆங்கிலேய விஞ்ஞானிகளும், 'பெர்மி' (Fermi) என்னும் இத்தாலி நாட்டு விஞ்ஞானியும், 'ஹான்' (Hahn) என்னும் ஜெர்மானிய விஞ்ஞானியும் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள். இதில் 'மைட்னர்' (Meitner) என்னும் பெண்மணி ஒருத்தியும் பங்கெடுத்துக்கொண்டாள்.

இந்த வகையில் யுரேனியம் அணுவைப் பிளவுபடச் செய்தால் ஏராளமான சக்தி பிறக்கும் என்று விஞ்ஞானிகள் உறுதியாகக் கூறினார்கள். அந்தச் சக்தியைப் போரில் பயன்படுத்தக்கூடும் என்று அரசியல் வாதிகளுக்கும், படைத் தலைவர்களுக்கும் தோன்றிற்று. ஆகவே, அணு-குண்டை இயற்றும் முயற்சி தொடங்கப்பட்டது. இது லாஸ்-அலாமாஸ் (LosAlamos) என்னும் இடத்தில், மனிதர் அதிகம் வாழாத பகுதியில், 'ஓப்பன்ஹைமர்' Oppenheimier) என்னும் விஞ்ஞானியின் தலைமையில் நடத்தப்பட்டு வெற்றிகரமாக முடிந்தது. அம்முயற்சியின் விளைவாக அமைக்கப்பட்ட இரண்டு அணு குண்டுகள் 'ஹிரோஷிமா' (Hiroshima), 'நாகசாக்கி' (Nagasaki) என்னும் இரண்டு நகரங்களை நொடிப்பொழுதில்—சிவபெருமான் புன்சிரிப்பால் திரிபுரத்தை எரித்த கதையைப் போல—அழித்து விட்டன. அணுவில் அடங்கிய அளவிறந்த கோர சக்தியை உலகம் அறிந்தது.

இந்த அணுகுண்டு வெடிக்கும்போது, உண்டாகும் வெப்பமானது சூரியனில் உள்ள வெப்பத்தைக் கிட்டத்தட்ட எட்டிவிட்டது என்று சொல்லுகிறார்கள். அந்த வெப்பத்தினால், கண்மூடித்

திறப்பதற்குள், எஃகு ஆவியாகி மறைந்துவிடும். மேலும், அதிலிருந்து வேறு பலவகைக் கிரணங்கள் வீசப்பட்டன. அவையும் உயிருக்கு மிகவும் அபாயகரமானவை. நாளடைவில் உடலைப் பல வகையாகப் பாதிக்கக் கூடியவை.

கொடுமையே வடிவான இந்த அணுகுண்டை இயற்ற வழி தெரிந்துகொண்டபின், விஞ்ஞானிகள் இரண்டு வகையான முயற்சிகளில் இறங்கினார்கள். இத்தனை சக்தி வாய்ந்த குண்டைக்காட்டிலும் அதிகச் சக்தி வாய்ந்த வேறு அணுகுண்டை இயற்றக்கூடுமா என்பது ஒரு வகையான முயற்சி. இந்தத் துறையில் வெற்றி கிடைத்துவிட்டது. இதுதான் அணு இணைப்பு (Fusion) முறை எனப்படுகிறது. இம்முறையால் அணுகுண்டைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு சக்தி வாய்ந்த ஹைடிரஜன் குண்டும்—இதை எச்-குண்டு (H-Bomb) என்று சொல்லுகிறார்கள்—அதைக்காட்டிலும் சக்தி வாய்ந்த கோபால்ட் குண்டும் (Cobalt Bomb) செய்யப்பட்டு விட்டன என்று பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆகவே, விஞ்ஞானிகள் கொடுமையின் 'எவரெஸ்டு' (Everest) சிகரத்தை அடைந்து விட்டார்கள்.

விஞ்ஞானிகள் எடுத்துக்கொண்ட மற்றொரு முயற்சி மக்கட் சமுதாயத்துக்கு இந்தச் சக்தியால் என்ன என்ன நற்பயன்களை அளிக்கக்கூடும் என்பது. இதிலும் பலவகைகளிலும் வெற்றி கிடைத்திருக்கிறது.

காற்றின் போக்குக்கும், ஆற்றின் நீரோட்டத்துக்கும், மக்களின் போக்குவரவுக்கும் இடையூறாக உள்ள பெரிய குன்றுகளை அணு சக்தியால் தகர்க்கலாம். அவ்வாறு சமீபத்தில் ரஷ்யாவில் நிகழ்ந்ததாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்தது.

மேலும், அணுசக்தியை நமக்கு வேண்டியபடி சின்னஞ்சிறு அளவில் எடுத்துப் பயன்படுத்த வழிகளைக் கண்டுபிடித்துவிட்டால் உலகெங்கும் பலவகையான எந்திரங்களை இயங்கச் செய்யலாம்.

மக்களின் குற்றேவல்களை யெல்லாம் அணுக்கள் செய்துதரும். நகரங்கள் எந்திரசாலைப் புகை போக்கிகளால் கரியாக மாட்டா. ரயில்களும், கப்பல்களும் அணுசக்தியால் ஓடும். ரேடியக் கிளர்ச்சி உடைய புதுப்புதுப் பொருள்களை அணுசக்தியால் இயற்றக்கூடும்; அவைகளைக் கொண்டு நோய்களைக் கண்டுபிடிக்கலாம். நோய்களுக்குச் சிகிச்சை செய்யலாம். புற்றுநோய் (Cancer) போன்ற கொடிய நோய்களையும் அது தீர்க்கக்கூடும். பலவகையான தொழிற்சாலைகளில் இயற்றப்படும் பொருள்களிலுள்ள குற்றங்களைக் கண்டுபிடிக்கும் ஒற்றர்களாக அது உதவும். ஒன்றிவாழிகளை (Isotopes) அணுசக்தி இயற்றித்தரும். அணு அளிக்கும் வாழும் அளவு கடந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சக்தி என்பது மனிதனின் அடிமை. சக்தியில் இயற்கையாகவே நன்றோ தீதோ தானாகப் பொருந்தியிருக்கவில்லை. தன்னை ஏவும் மனிதன் நினைத்தபடி சக்தி செயல்புரியும். அணு சக்தியை நன்மையின் பொருட்டு மனிதன் ஏவினால், அதனால் அளவுகடந்த நன்மை விளையும்; அது தெய்வீகத் தன்மை உடையதாகத் தோன்றும். ஆனால், அணு சக்தியைத் தீய வழிகளில் ஏவினால், அது பல்லாயிரம் பேய்க்கணங்களைக் காட்டிலும் கொடியதாய், பேய்ச் செயலையே செய்யும்; அது தீமையே உருவெடுத்ததாகத் தோன்றும். ஆதலால், மனித இனமானது தன்னுடைய மனத்தைச் செம்மைப்படுத்திக்கொண்டு, அணு சக்தியை நல்வழிகளில் ஏவி, மேன்மேலும் நன்மைகள் அடைவதாக!

*மதிப்புரை

[திருவுந்தியார்—தெளிவுக்கட்டுரை. ஆசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியன். திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. பக்.—192.]

திருவாவடுதுறை ஆதீனம் பொதுவாகத் தமிழுக்கும் சிறப்பாகச் சைவத்துக்கும் பெருந்தொண்டு புரிந்து வருவது தமிழ்நாடு நன்கு அறியும். பின்னர்க் கூறிய தொண்டுக்கு எடுத்துக்காட்டாவனவற்றுள் திருவுந்தியார்-தெளிவுக் கட்டுரையும் ஒன்றாகும். இஃது அவ்வாதீனத்து வித்துவான் திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியன் அவர்களால் எழுதப்பெற்றுள்ளது. இதன்கண் ஆசிரியரது முன்னுரையும், அவ்வாதீனத்து வித்துவான் திரு. T. S. தியாகராஜ தேசிகரது அணிந்துரையும், திருவுந்தியார் நூலின் தெளிவும் அடங்கியுள்ளன. முகவுரையில் ஆசிரியர் இந்நூல் மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கில் பெறும் இடத்தையும், நூலின் காலத்தையும், நூலின் பெயர்க் காரணத்தையும் குறிப்பிட்டுள்ளார். இதனை அலங்கரிக்கும் அணிந்துரை ஒரு சிறந்த மதிப்புரையாகவே அமைந்துள்ளது.

“இத் திருவுந்தியார் தெளிவுக் கட்டுரை நூல் ஒவ்வொரு செய்யுட்கும் ஏற்ற பொதுத் தலைப்பு, உள் தலைப்பு, தெளிபொருள், மேற்கோள், உவமை விளக்கம் முதலிய பல்வகைச் சிறப்புக்களுடன் மிளிர்கின்றது......திருவுந்தியார் நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்துள்ள சித்தாந்த சைவ உண்மைத் தத்துவங்களை ஆசிரியர் தமது தெளிவுரையில் தக்க உவமைகள் வாயிலாகவும் சிறந்த மேற்கோள்களுடனும் விளக்கஞ் செய்துள்ள புலமைத்திறம் வியத்தற்பாலது. ......ஒவ்வொரு செய்யுட் கருத்துக்கும் பெரும்பான்மை ஒப்புடைய திருமந்திரச் செய்யுட்களை ஆசிரியர் தமது தெளிவுரையில் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருப்பது திருவுந்தியார் தெளிவுக்கட்டுரை நூலின் தனிச்சிறப்புக்களில் ஒன்றாம். திருவுந்தியாரில் சிவஞானபோத முதலாகிய ஞானநூல்களின் சித்தாந்த சைவ அருங் கருத்துக்கள் உள்ளடங்கி மிக நுட்பமாக விளங்குவதைப் பொதுவாக ஆதீனத்து வித்துவான் உயர் திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் தமது தெளிவுரையில் தெளிவாக எடுத்து விளக்கியிருப்பது கற்றின்புறத்தக்கது” என்று கூறுகிறது அவ்வணிந்துரை.

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

திருவுந்தியார் அநுபூதி நூல்களில் ஒன்று. மேலும் அது நூற்பா போன்ற வடிவில் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளமையால், இத்தகைய தெளிவுக் கட்டுரையின்றி இந் நூலின் உட்பொருளை எளிதில் விளங்கிக் கொள்வது எல்லோருக்குத் இயல்வதாகாது. எனவே இத் தெளிவுக்கட்டுரை மிகவும் வரவேற்கத்தக்கது. ஆசிரியர் இங்குமங்கும் பொருத்தமான உவமைகளை எடுத்தாண்டு இனிது விளக்கிச் செல்கின்றார். ஒருசில அச்சுப் பிழைகள் இறுதியில் திருத்திக் காட்டப் பெற்றுள்ளன.

திருவுந்தியார் மூலம் முழுவதும் முதலிலோ இறுதியிலோ தரப்பெற்றிருந்தால் இந் நூல் இதனினும் சிறப்பாக அமைந்திருக்கும். மேலும் பொருள் அகரவரிசை யொன்று இறுதியில் சேர்த்திருந்தால் ஆய்வாளர்கட்கு மிகவும் பயன்படும். இந் நூல் நல்லமுறையில் எழுதப்பெற்றுள்ளது.

ப. ஜோதிமுத்து.

1955-௵ பிப்பிரவரி-௴ 17௳ (ஜய-௵ மாசி-௴ 5௳) மதுரைத்தமிழ்ச்சங்கக்கட்டிடத்திற் கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப் பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1 மகா-ள-ள-ஸ்ரீ Sir. P. T. இராசன் அவர்கள்—உப-அக்கிராசனாதிபதி. மதுரை.

2 ,, N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், B. A. B. L. மதுரை.

3 ,, A. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள், அட்வகேட், இராமநாதபுரம்.

4 ,, P. இராமசாமி ராஜா அவர்கள், அட்வகேட், ,,

5 ,, P. ரெங்கசாமி நாயுடு அவர்கள், B.A., B.L., அட்வகேட், மதுரை.

6 ,, S. பார்த்தசாரதி நாயுடு அவர்கள், அட்வகேட், ,,

7 ,, N. S. சுந்தரவரதன் அவர்கள், B. A. நாயக்கர்புதுத்தெரு, மதுரை.

8 V. ஷண்முகசுந்தரம் அவர்கள், M.A., B.L., ,, (காரியதரிசி.)

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்

1. 1954-ஆம் ௵ நவம்பர் ௴ முதல் 1955-ஆம் ௵ ஜனவரி ௴ முடிய மாதாந்த வரவு செலவு கணக்கு அங்கீகரிக்கலாயிற்று.

2. சங்கக்கட்டிடத்தில் மின்சார்விளக்குப் போட்ட வகையில் நகர சபையாருக்குக் கட்டணம் செலுத்திய ரூ 88—0—0 ம், மின்சார விளக்குப் போட்ட வகையில் பின்படி சாமான்களின் விலை கூலியுள்பட ஏற்பட்ட

செலவு ரூ 1083—5—0ம், விளக்கு எற்று விழாவின் செலவு ரூ 19—7—0 ஆகமொத்தம் ரூ 1190—12—0-ம் சாங்ஷன் செய்யப்பட்டது.

3. சங்க விதிகளைத் திருத்தம் செய்யும் பொருட்டு, (1) மகா-ா-ா-ஸ்ரீ N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், (2) P. ரெங்கசாமி நாயடு, (3 S. பார்த்தசாரதி நாயடு, (4) V. ஷண்முகசுந்தரம் (அமைப்பாளர்) இவர்களடங்கிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

4. சென்னை T. N. S. இராகவாச்சாரி அவர்களால் அளிக்கப்படும் மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களின் உருவப் படத்தை சங்கம் ஏற்றுக்கொள்ளலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

17—2—55 }
மதுரை }

(Sd.) P. T. இராசன்,
துணைத் தலைவர்.

203248

ரத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	சுறுநூல் (5) இனியதுநாற்பது (உரை)	0	3	0
[illegible]	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
0.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
2.	பன்னிருப்பாட்டியல்	0	12	0
3.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
4.	நூற்றொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மகீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	[illegible]	[illegible]	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	8	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	
61.	கலைசைக்கோவை	0	12	
62.	பெருந்தொகை	5	0	
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை	0	5	
64.	சிராமலைக்கோவை	0	12	
65.	மத்யமவியாயோகம்	0	2	
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	0	8	
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1 சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவல்லபம், மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௧.] ஜய-ஹு-பங்குனி மீ [பகுதி-௫.

Vol. 51. March-April—1955. No. 5.

25 APR 1955
MADRAS

மனோன்மணீயம்

திரு. நா. அப்பனையங்கார்

மனோன்மணீயம் என்பது, தமிழிலக்கிய வரலாற்றில் மிகப் பிற்காலத்துத் தோன்றிய சிறந்த ஒரு நாடகச் செய்யுள் நூலாகும். இதன் கதைத் தலைவிக்கு மனோன்மணி என்று பெயராகையால், அத்தொடர்பு குறித்து இது மனோன்மணீயம் எனப்பட்டது. இதனைத் தத்திதாந்த நாமம் என்பர். மனத்தின்கண் சிறந்த மணி போல்பவள் என்பது மனோன்மணி என்பதன் பொருளாக உரைக்கப்படுகிறது. பாவை போல்வாளைப் பாவை என்பது போல, மணிபோல்வாளை மணியென்றது ஆகுபெயர். மனோன்மணி என்ற தொகைச் சொல் வடமொழி இலக்கண விதியொடு பொருந்தாத வழூச்சொல்லென்பாரும் உளர்.

இந் நாடக நூலை நமக்கு ஆக்கி அளித்தவர், திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரியின் தத்துவக்கலைப் பேராசிரியராயிருந்து காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளை அவர்களாவர். இவர் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்குமுன் பிறந்து, நாற்பத்திரண்டாண்டு நிலவுலகில் வாழ்ந்து புகழுடம்பு பெற்றவர்; ஆங்கிலத் தத்துவத் துறையில் தேர்ந்த புலமையும், கல்வெட்டாராய்ச்சியில் தலைசிறந்த ஆற்றலும் வாய்ந்தவர். இவற்றிற்கு மேலாக, நாடகமேத்தும் ஓர் நாடகக் கவிஞர் என்ற பெருமையும் இவர் பெயரினைப் பலருமறியப் பரவச் செய்துள்ளது.

தமிழ்மொழியில் நாடகநூல் முன்னாளில் பெரும்பாலும் இருந்ததில்லை. இருந்தாலும் அவ்வாறு நம்மக்கள் பெரிதும் விரும்பினர் அல்லர். இதற்குக் காரணம் அவற்றிற் காணும் குறைபாடுகளே என்னலாம். இத்தகைய நிலைமையில் அக் குறைகள் அறவே ஒழியப் புதியதொரு முறையில் புகுந்து, எல்லோரும் இன்புறுமாறு நல்ல முறையில் நாடகமியற்றிய பெருமை இப் பேராசிரியரையே சார்ந்தது. இது நிற்க.

மனோன்மணி என்பவள் மதுரையில் ஆண்ட பாண்டிய அரசன் சீவகன் என்பான் செல்வப் புதல்வி. அவள் சேர அரசன் புருஷோத்தமன் என்பவனைக் கனவிடைக் கண்டு காதல் கூர்ந்து, அவனையே தன் மணவாளனாக மனத்தில் இருத்தினள். புருஷோத்தமனும் அவ்வாறே மனோன்மணியை அறிந்து, அவளை மறவாமல் எண்ணி மகிழ்வுற்றிருந்தான்.

குடிலன் என்னும் பெயரினன் ஓர் அமைச்சன், தன்னலமொன்றே கருதிச் சீவகனை அடுத்து, வஞ்சனை சார்ந்த மனத்துடன் வாழ்ந்து வந்தான். ஆகையால் அரசுரிமை முழுதும் தானே அடைய எண்ணி, அவன் தன் மகன் பலதேவன் என்பானுக்கு மனோன்மணியை மணஞ் செய்வித்துக்கொள்ளப் பற்பல சூழ்ச்சிகள் புரியலாயினன்.

அதன் பயனாகப் பாண்டியனுக்கும் சேரனுக்கும் பெரும்பகை மூண்டது. இருதிறத்தார்க்கும் இன்னல்கள் விளைந்தன. இத்தகைய இடையூறுகளுக் கிடையே, சுந்தர முனிவர் என்னும் ஓர் அருந்தவப் பெருந்தகை குடிலன் செய்த கொடுமைகளை வெளியாக்கினர். அவர் அவனைச் சிறைப்படுத்தி, பாண்டியனுக்கும் சேரனுக்கும் பகைமை போக்கி ஒற்றுமை உண்டாக்கினர். இவ் வாற்றால் மனோன்மணி புருஷோத்தமனையே மணந்துகொள்ளவும் அவர் பேருதவி புரிந்தனர்.

மங்கல மணவினை நன்கு நிறைவேறியது. இறுதியில் யாவரும் இன்புற்று வாழ்ந்தனர். இதுவே இந் நாடகத்தின் கதைச் சுருக்கமாகும்.

இனி, இந் நாடகச் செய்யுள் 'லார்டு லிட்டன்' என்பவர் வரைந்த 'இரகசிய வழி' எனும் ஆங்கிலக் கவிதையை அடியொற்றியது. ஆயினும் அம்மொழித் தொடர்பு தோன்றாமல், தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்த தனிநூல் போலவே இஃது யாக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள 'சிவகாமி சரிதம்' என்ற மற்றொரு பகுதியும் வேறோர் ஆங்கிலச் சிறுநூல் மொழிபெயர்ப்பு. அஃது இந் நாடகத்தில் இடைநிலை விளக்காய் இலகொளி விரித்துப் பேரழகு புரியா நின்றது. இங்ஙனம் ஆங்கிலநூல் கருத்துக்களைத் தமிழ்மொழியில் புனைந்த அருங்கவித் திறமை இவ்வாசிரியர்க்கு முதன்மையின் உரியதாகும்.

இவர் தாம் தத்துவநூலறிஞராதற்கேற்ப, சில தத்துவப்பொருள்களை நாடகபாத்திரங்களாக உருவகப் படுத்தினர். இதில் சீவகன்—சீவான்மா; அவனைத் தன் வசமாக்கி மயங்கச் செய்த குடிலன்—மாயாசத்தி; மனோன்மணி—வீட்டுநெறி விரும்பும் ஞானநிலையெய்தின ஆன்மா; புருஷோத்தமன்—அருட் சத்தி என்று இங்ஙனமாகிய குறிப்பு அவ்வப் பெயர்களே ஒருவாறு வெளிப்படுக்கும். அன்றியும், உலகமக்களின் உரைசெயல் கடந்து, ஒரு பேராற்றல் முழுமுதல் எவ்வகைத் தொழிலும் இயங்கச் செய்யும் என்ற அடிப்படைக் கருத்து, இந் நாடகப் போக்கில் ஊடுருவித் தோன்றும் என்பர். இது நிற்க.

தேர்ந்த சொற்களை ஆளுதல், வழிப்பட்ட தொடர்மொழிகளை வழங்குதல், எளிதான வாக்கியங்களை இசைத்தல், இன்பமான பொருளமைதியை ஊட்டுதல் இவை செய்யுள் செய்வார்க்கு இன்றியமையாத பண்புகள் சில. இவை அனைத்தும் இவ்வாசிரியரிடம் ஒருங்கு காணலாவன. அன்றியும் இவர் உருவாக்கம் தந்த கதைக்கூற்றாளரின் கூற்றும் மாற்றமும் ஆகிய உரைகள் ஒன்றற்கொன்று மேலாகத் திருத்தமும் பொருத்தமும் வாய்ந்து, கதை நிகழ்ச்சிக்கு விரைவும் விறுவிறுப்பும் ஊட்டி, கதைகேட்பவர்க்குக் களிப்பினை அளிக்கவல்லன. இவர் தெரிந்தமைத்துக்கொண்ட செய்யுள்நடையும் உலகறிந்த பெற்றியின் இயல்புவளம் குன்றாமல், ஒப்புயர்வின்றி விளங்குதல் பாராட்டுக்குரியதே.

இங்ஙனம் தமிழ்மரபு தழைத்தோங்க முதன்முதல் நாடக இலக்கியம் தோற்றுவித்தாற்போலவே, முதன்முதல் தமிழ்த் தெய்வ வணக்கம் செய்த தகவுடைமையும் இக்கவிஞர் பெருமானுக்கு வாய்த்தது. முன்னாளில் கவிகள் எவருக்கும் எய்தாத பேறு இது. புதுமுறையான நூலுக்குப் புதுமுறையான நான்முகம்! அப்புதிய வழியும் மிகப் பொருந்திய நல்வழி! தமிழ்நூலியற்றுவார் தமிழணங்கினை வணங்குதல் எவ்வளவு பொருத்தமுடைய செயல் என்பது சொல்லவேண்டா அன்றோ?

ஆகையால் இச்செய்யுளின் சீர்மை இங்கே சிறிது விரித்துரைக்கத் தக்கது. இரு தரவு, பல தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்கள் பெற்ற பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா இது. தெய்வத்தைப் பரவுதற்கு இது மிகச் சிறப்பாக எடுத்தது.

இப்பாடலின் முதல்உறுப்பான தரவில், ஆசிரியர் தமிழணங்கை முன்னிலையாக்கிக் கொள்கிறார். நிலமடந்தையின் திருமுகம் போலும் பரதகண்டம்; அதில் நெற்றி போலும் தென்னாடு; அதிலணிந்த கத்தூரி திலகம்போலும் தமிழகம்; அத்திலகத்தில் நறுமணம் போலும் தமிழ் மொழி; என்கிறார். திலகம் சிறிதளவாயிருப்பினும் அதன் நறுமணம் எங்கும் கமழ்ந்து பரவுவது போல, தமிழ்நாடு சிறிதாயிருப்பினும் அதன் மொழி எங்கும் புகழ் பரப்பிப் பொலிவுறும் என்று கருத்து.

இங்ஙனம் இசைபரவ வீற்றிருக்கும் தமிழணங்கே! என விளித்து, இரண்டாவது தரவில், அத்தெய்வத்தின் இளமைத்திறம் வியப்பைத் தருவதாகையால் அஃது எஞ்ஞான்றும் நிலைபெறுமாறு வாழ்த்தக் கடவோம் என முடிக்கிறார் அவர். தன்னிடமாகப் பல மொழிகளைத் தோற்றுவித்தும் கன்னித்தன்மை அழியாத தமிழ், பலவுயிரைப் படைத்தளித்துத் துடைத்தும் தான் அழியாத பரம்பொருளை ஒக்கும் என்கிறார். 'அகிலாண்டகோடி யீன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆநந்தரூப மயிலே' என்றார் தாயுமானவரும்.

இனி, இதன் தாழிசைகளில் முதலாவதாக, கடல்முழுதும் பருகிய அகத்திய முனிவரும் தமிழின் கரையைக்காண வேறொரு குருவை வேண்டினர்; ஆகையால் அக் கடலை உவமை கூறுவது தமிழின் பெருமையை முழுதும் புகழ்ந்ததாக முடியாது என்கிறார். அன்றியும் அவ்வுவமை அக் கடலைப் புகழ்ந்ததாகு மல்லது, தமிழைப் புகழ்ந்ததாகாது என்றும் ஆம்.

இரண்டாவது தாழிசையில், சிவபிரானும் முன்னாள் ஒரு பிழையியற்றி உரை யிழந்து விழித்தார் என்றால், தமிழின் இலக்கணம் மிக அருமையுடையதென்று சொல்வதில் அதிசயம் என்னை? என்கிறார். இறையனார் அருளிய 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற செய்யுளுக்கு நக்கீரர் குற்றங் கூறிய வரலாறு குறிக்கப்படுகிறது. இதில் 'உரை யிழந்து விழிப்பாரேல்' என்றது அரிய நயமுடையது.

மூன்றாவது தாழிசையில், ஆரியமொழிக்கும் முற்பட்ட தமிழ் அநாதியே என வற்புறுத்துகின்றார்.

நான்காவது தாழிசையில், சமணர்களோடு வாது செய்த சம்பந்தர் எழுதிவிட்ட தமிழேடு வையை யாற்றில் எதிரேறிச் சென்றது, காலநதியிலும் தமிழ்மொழி அழியாது நிற்றற்கு அறிகுறியாகும் என்கிறார்.

ஐந்தாவது தாழிசையில், சர்வசங்கார காலத்தின் பின்னும் தமிழ் இறைவனுடன் அழியாது நின்று, அவனுக்கு இன்பமளிக்க வல்லது என்கிறார். சிற்றம்பலமுடைய சிவபிரான் மணிவாசகப் பெருமானிடம் இரந்து, திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதிக்கொண்ட வரலாறு குறிக்கப்படுகின்றது. அங்ஙனம் அவர்கள் எழுதிக் கொண்டது, தமக்கு ஊழியின் இறுதியில் உண்டாகின்ற தனிமையை இனிமையாகக் கழிப்பதற்காம் என்பது ஆசிரியரது தற்குறிப்பேற்றம்.

ஆறாவது தாழிசையில், தக்க புலவரைமட்டும் ஏற்று விரிந்து இடம் கொடுத்த சங்கப்பலகை தக்க சான்றோரை மட்டும் போற்றி அவரியற்றிய நூற்பொருளால் சிறந்து விரிந்துவிளங்கும் தமிழ்மொழியின் உண்மைச் சரிதத்திற்கு அடையாளமாம் என்கிறார்.

ஏழாவது தாழிசையில், வடமொழியும் தென்மொழியும் கலைமகளின் இருவிழிகள்போல் இணையொத்த பெருமையுடையன; இவற்றுள்

உயர்வு தாழ்வு கூறிக் கெடுவழக்குத் தொடர்பவர் அறிவிலிகள் என்கிறார்.

இதன் தொடர்பாக மேலுள்ள சில தாழிசைகளில், தென்மொழியே ஒருவாற்றால் உயர்ந்ததென்றும்கவிசமத்காரம்படப் பேசுகின்றார். இவ்விடத்தில் மறையையும் மனுநூலையும் குறைகூறியது குற்றமாகாமல் அமைத்துக்கொள்ளப்படும். எவ்வாற்றாலாயினும் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்றங்கூறுதல் என்பது நியாயமே. ஆகையால்,

'வேதசிகையும் விரிகலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப் பூரணமே!'—

என்று இதற்கு முந்திய காப்புச் செய்யுளில், இவர் வேதத்தையும் அதனின்று விரிந்த கலைகளையும் மேன்மையாகக் கூறியிருப்பது இதனோடு மாறுபடாதாகும். இது நிற்க.

இக் கலிப்பாவின் இறுதியுறுப்பான சுரிதகத்தில், ஆசிரியர் தமிழ்த்தெய்வத்தின்முன் தம் தாழ்வு புலப்படுத்தி, இந்நூலை ஏற்றருளுமாறு வேண்டுகின்றார்.

தாயே! பழையவும் புதியவுமான தம் நூல்களாகிய அணிகலன்களால், உன்னைப் புகழ்ந்து புனைய நெடுந்தகை மைந்தர் பற்பலர் உள்ளனர். அவருள் அடியேன் கடையேன்; அறியாச் சிறியேன்; கொடுமலையாளக் குடியிருப்புடையேன். உனக்கு உழைக்க வேண்டும் என்ற ஆசையால் இந் நாடகத்தை இழைத்தேன். இது வெள்ளியது; ஆயினும் உன் திருவடியில் ஒள்ளிய சிறுவிரலணியென, அன்புக்காணிக்கையாகக் கொண்டு அருள் புரியவேண்டும் என இப்பாடலை இனிதாக முற்றுவிக்கின்றார் இவர். இதன் இன்பச்சுவை நுகர்தல் அன்பர்க்கு மிகவும் எளிது.

இதனை இயற்றிய பெரியார் சுந்தரம்பிள்ளையவர்களின் செயற்கருஞ் செயல் இது. தமிழருள்ளத்தில் தமிழணங்கை ஏற்றி, மறவாது வணங்க வழிகாட்டினர் இவர். ஆகையால் அன்னாரை நினைந்து இந்நாள் நாம் அன்பு செலுத்தி அத்தமிழணங்கின் அருளுக்கு இலக்காதல் நன்று.

ரோட்டரி சங்கத்தின் நோக்கங்களும் அதன் வளர்ச்சியும்

திரு. கருமுத்து. தி. சுந்தரம், B. COM.,
டைரக்டர் ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ் லிமிடெட், மதுரை.

'ரோட்டரி இன்டர் நேஷனல்' என்பதைச் சுழல் கழக இயக்கம் என்று தமிழில் கூறலாம். இச் சங்கத்தின் நோக்கமும், கொள்கையும், வளர்ச்சியும் உலக முழுவதும் நன்கு பரவியிருக்கின்றன.

இன்றைய மக்களுலகில் ஒவ்வொருவரும் பிறருடைய மனவியல்பை அறிந்துகொள்வதிலும் அவருடைய நட்பைப் பெறுவதிலும் ஒருவகையான ஆர்வம் உடையவராகவுள்ளனர். இதனை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் உணர்ந்து, இந்த ஆர்வத்தின் அடிப்படை அன்பு என்றும், இதனால் விளைவது மனம் கலந்த இனிய தூய நட்பு என்றும் அறிவிப்பாராய்

'அன்புஈனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு'

என்று எடுத்துரைத்தார். முன்பெல்லாம், 'தான் வாழ ஏனோர் தனக்கு அடிமையாக' என்னும் ஊன அறிவே, பிறநாட்டு மக்களிடத்தே முனைந்திருந்தது. அதன் தீமையைக்கண்டு குடியாட்சி நிறுவிப் பிறர் இனிது வாழ்ந்தால்தான் நாம் வாழ முடியும் என்ற உண்மையை அறிஞர் உலகம் காணத் தலைப்பட்டது. ஒருவரோடொருவர் உறவாடி அவரவர் மனப்பாங்கையறிந்து நட்புற்று ஒருவருக்கொருவர் துணைவராய்த் தொண்டு புரிவதுதான் உண்மையான இன்ப உலகவாழ்வுக்கு உரிய வழியென்பது தெரிய வந்தது. அதன் பயனாகத் தோன்றியதுதான் ரோட்டரி சங்கம் என்னும் சுழல் கழக இயக்கம்.

சென்ற 1905-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் நாள் அமெரிக்க நாட்டுச் சிகாகோ நகரத்தில் வாழ்ந்த இளம் வழக்கறிஞரான பால் ஹாரிஸ் என்பவரால் முதல் முதலில் இச்சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. தன் நண்பர் குழாத்தை விரிவுபடுத்திக் கொள்ளவும், ஏனை வணிகர் தொழிலர் முதலியோர்களைப் பற்றியும் அவர்களுடைய வாணிகம் தொழில் முதலியவைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளவுமே தொடக்கத்தில் ஹாரிஸ் இதனை நிறுவினார். இச் சங்கம் தோன்றிய நாளன்று நிலக்கரி வணிகர் ஒருவரும், சுரங்கத் தொழில் இன்ஜினியர் ஒருவரும், தையல்கடைத் தலைவர் ஒருவரும் ஆக பால் ஹாரிஸ் உட்பட நால்வரே உறுப்பினராகச் சேர்ந்திருந்தனர். இச் சங்கக் கூட்டம் உறுப்பினர் ஒவ்வொருவருடைய இடத்திலும் மாறி மாறி நடந்து வந்தமையால் சுழல் கழகம் (Rotary Club) என்று பெயர் பெறுவதாயிற்று. ஒருவருக்கொருவர் அறிவுத் துணைபுரிந்து இயலும் இச் சங்கத்தின் பணி, சிறிது காலத்திற்குள் நாட்டில் நன்கு பரவியது. உறுப்பினர் பலர் சேர்ந்தனர். அதனால் சங்கக் கூட்டங்கள் பொது விடுதிகளிலும் உணவுச் சாலைகளிலும் நடைபெறலாயின.

ஒரு நகரத்தில் மக்கள் வாழ்க்கையில் எத்தனை துறைகளுண்டோ, ஒவ்வொரு துறையிலும் முதல்வராக இருப்பவர்கள் இச் சங்கத்தின் உறுப்பினராவர். கல்வி, மருத்துவம், உழவு, வாணிபம் என்ற வாழ்க்கைத்துறைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உறுப்பினர் உண்டு. ஒரு துறையிலேயே பலவேறு பிரிவுகளிருப்பின், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முதல்வர் உறுப்பினராகலாம். ஆனால் ஒன்றுக்கே பல உறுப்பினர் இருப்பதில்லை. ஒவ்வோர் உறுப்பினரும் தமது தொழிலுக்கு உரியவராகவும், அதே தொழிலைச் செய்யும் பிறர்க்குப் பிரதிநிதியாகவும் இருந்து அத் தொழிலைப்பற்றிய கருத்துக்களை ஏனை உறுப்பினருக்குத் தெரிவிக்கும் நிலையில் இருப்பர்.

இச் சங்கம் தோன்றி 16 ஆண்டுக்குள், வட அமெரிக்காவில் பரவி, தென் அமெரிக்கா, அயர்லாந்து, இங்கிலாந்து, ஆசிய, ஆஸ்தி

ரேலியா, நியூசிலந்து ஆகிய வெளிநாடுகளிலும் பரந்து அனைத்துலக இயக்கமாயிற்று. 1919-ம் ஆண்டில் ரோட்டரி சங்கம் இந்தியாவில் முதன்முதலாகக் கல்கத்தா நகரில் நிறுவப்பட்டது. 10 ஆண்டுகளுக்குப் பின், அதாவது 1929-ம் ஆண்டில் இலங்கையில் கொழும்பு நகரில் இச் சங்கம் முதலாவதாகத் தோன்றிற்று. நாம் வாழும் நிலவுலகில் இன்று 8400 ரோட்டரி சங்கங்களும் 4 லட்சம் உறுப்பினர்களும் பெருகியிருப்பது இதன் வளர்ச்சிக்கும், சிறப்பிற்கும் ஏற்ற சான்றாகும். பயன் கருதாத நட்பு முறையால் மக்கள் வாழ்க்கை இயல்பை உள்ளவாறு அறிவதால் அவர்கள் ஒன்றுபடுத்தப் படுகிறார்கள் என்ற உண்மையை பால் ஹாரிஸ் கண்டார்.

உலகில் வாழப்பிறந்த மக்கள் வாழ்வின்றி வருந்துவாரானால் வாழ்க்கை பயனற்றதாகும். பயனுள்ளவாழ்வுதான் இறைவன் திருவுள்ளத்துக்கு உகந்தது. பயனுள்ள வாழ்வு என்பது அமைதியும் இன்பமும் நிலவும் சமுதாய வாழ்வாகும். இத்தகைய வாழ்வு மக்களிடையே உண்டாகச் செய்வது அறிவும் ஆண்மையும் பொருளும் உடைய நன்மக்களுக்குக் கடமையாம். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன்' என்று தாயுமானவர் கூறியது இதுபற்றியேயாம். மக்களிடையே அமைதியும் இன்பமும் நிலவச் செய்வது அரியதொரு செயலுமல்ல. ஆர அமர இருந்து நினைந்து பார்த்தால் இது யாவரும் எளிதில் செய்யக்கூடியதொன்று. அது என்னவெனில், மக்கள் சமுதாயத்துக்குத் தேவைப்படுவதை அறிந்து அதனைத் தொண்டின் மூலமாகச் செய்வதுதான். 'தொண்டலால் துணையும் இல்லை, அன்பலால் பொருளும் இல்லை' என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. மக்கள் தொண்டு, சமுதாயத்தில் மன அமைதியையும் இன்பத்தையும் நாடினதாய்த் தன்னலமற்றதாய் இருக்கவேண்டும். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றாற் போலத் தன்னலமற்ற தொண்டுதான் பயனுள்ள வாழ்வு மக்களினம் பெறுவதற்கு ஏற்ற வழி என்று தெளிந்தே ரோட்டரி சங்கம்,

இந்தத் தன்னலமற்ற தூய தொண்டையே தனக்குக் குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றுகிறது.

மக்களினத்தில் அன்பு, அறிவு, பொருள் முதலியவற்றையுடைய நன்மக்கள் யாவராயினும் எந்நிலையராயினும் எத்தொழிலராயினும் அவருடைய உறவைப் பெறுவதில், இந்த ரோட்டரி சங்கம் முற்பட்டு நிற்கிறது. மக்கள் ஒவ்வொருவரையும் அன்பால் தழுவி அவரது மனமாண்பை அறிந்து அவருடைய தொடர்பைப் பெற்றுக் கொள்கிறது. அவ்வாறு தக்கோர்களின் தொடர்பைப் பெறுவதன் நோக்கம் அவர்கள் செல்வாக்கினால் தான் மேற்கொண்ட தொண்டை நன்றாக ஆற்றலாம் என்பதுதான். நல்லோர் தொடர்பும் உறவும் நட்பும் ஏற்படுவதால், செய்யக் கருதும் தொண்டு எளிதில் முடிந்து மக்களிடையே இன்பத்தையும் அமைதியையும் உண்டு பண்ணுகிறது.

நாட்டில் பலவேறு வகையான தொழில்களும் வாணிபங்களும் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படுகிறது. அதனால் அவைகட்கிடையே ஏற்றத்தாழ்வு இருக்க இடமில்லை. யார்யார் எந்தத் தொழிலைச் செய்தாலும் எந்த வாணிகத்தை நடத்தினாலும் அதனால் அவருக்கு உயர்வோ தாழ்வோ கிடையாது. அவைகள் உயர்வும் மதிப்பும் பெறுவது அவைகளின் நாணயத்தால்தான். நேர்மையும் நாணயமும் நல்லொழுக்கமும் அமைந்திருக்குமாயின் வாணிகம் புகழ் பெறுகிறது. தொழில், வளர்ச்சியும் மதிப்பும் அடைகிறது. உத்தியோகம், மருத்துவம், வாணிகம், தொழில் ஆகிய யாவும் நேர்மை, நாணயம், நல்லொழுக்கு என்ற நற்பண்பால் மேன்மையும் நன்மதிப்பும் புகழும் பெறுகிறபடியால், ரோட்டரி சங்கம், ஒவ்வொரு வகைத் தொழில் வாணிகம் முதலியவற்றையும் நன்கு மதித்துப் போற்றுவதுடன், அவைகளிடத்தில் நல்லொழுக்கத்தையும் நாணயத்தையும் நேர்மையையும் வளர்ப்பதே நோக்கமாகக் கொண்டு பணி செய்கின்றது. இதனால் மக்களுக்குத் தேவையான யாவும் ஒழுங்காகவும் நேர்மையாகவும் கிடைப்பதால் அவர்களுக்கும் மிக்க நலமுண்டாகிறது.

அதுவே அவர்கட்குச் செய்யும் நல்ல தொண்டாகும். அந்தத் தொண்டும் இதனால் எளிதில் நடந்து போகிறது. இதுபற்றியேதான் உத்தியோகம், மருத்துவம், தொழில், வாணிகம் முதலியவைகளைச் செய்பவர் மதிப்பை உயர்த்திச் சிறப்பிக்கும் நோக்கம் ரோட்டரி சங்கத்தின் செய்கையாகத் திகழ்கிறது.

தன்னலம் கருதாத தொண்டின் சிறப்பையும் பயனையும் ஒவ்வொருவரும் நன்றாக நினைக்கலாம்; விரிவாகப் பேசலாம்; அத்தொண்டை ஒவ்வொருவரும் செயலில் காட்டுவதுதான் இன்றியமையாதது. 'சொல்லுவது யார்க்கும் எளிது; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்றார் திருவள்ளுவப் பெருந்தகை. அந்த வகையில் யாவரையும் ஊக்கப்படுத்துவதிலும், தொண்டு செய்யும் இயல்பை வளர்ப்பதிலும் ரோட்டரி சங்கம் பெரிதும் அக்கறை கொண்டு இருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் சொந்த முறையில் வாணிகமோ, உத்தியோகமோ, தொழிலோ யாதேனும் ஒன்று உண்டு. அதைச் செய்வது அவருடைய நலம் கருதியதாகவும் இருக்கலாம். ஆயினும் அதைச் செய்யும்போதும் தொண்டு மனப்பான்மையே அவர் உள்ளத்தில் குடிகொண்டிருக்கவேண்டும். அதுவே, பின்பு, பலரோடு கூடிச் செய்யும் வாணிகம் தொழில் முதலிய பெருவாழ்வில் இடம்பெற்று மக்களினத்தின் பொதுவாழ்வில் படர்ந்து சமுதாய வாழ்வின் நன்மையும் உயர்வும் பெருக்குதற்கு ஏற்றவழியாகும். தனக்கெனச் செய்யும் சொந்தத் தொழிலிலும் தன்னலமற்ற தொண்டாற்றும் பண்பாடு கலந்து நிற்குமானால், பின்னர், அது, தன்னுடைய நண்பர் சூழலில் பரவிப் பலரையும் தொண்டு புரியும்படி செய்யும். அதனால் சமுதாய வாழ்வு முழுதும் தன்னலமற்ற தொண்டாய் உருப்பட்டு நாடு முழுதும் வாழும் மக்கள் நல்வாழ்வு பெற்று இன்புறச் செய்யும் என்பதில் ஐயமில்லை. இது பற்றியே, தொண்டின் பெருமைகளையும் பயன்களையும் நினைப்பதோ சொல்வதோ அவை ஒருபுறம் இருக்க, செய்யும் ஒவ்வொரு செயலிலும் தன்னலமற்ற தொண்டே முற்பட்டு நிற்குமாறு ரோட்டரி சங்கம் உழைத்துக்கொண்டும் பிறரை ஊக்கப்படுத்திக்கொண்டும் வருகிறது.

ஒருவர் தான் செய்யும் தொழிலிலோ வாணிகத்திலோ உத்தியோகத்திலோ தன்னலமற்ற தொண்டே நிலவுமாறு செய்தற்கு நான்கு வகைப்பட்ட தற்காட்சி என்னும் ஓர் ஆராய்ச்சிக் கருவி ரோட்டரி சங்க உறுப்பினரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்காட்சி என்றால் தன்னைக் காண்பது என்று பொருள். அதாவது தான் செய்வதைத் தானே ஆராய்ந்து காண்பது.

முதலாவது: ஒருவர் எதை சொல்வதாயினும், எதைச் செய்வதாயினும், அவர், முதற்கண் இது உண்மையா? என்று காணவேண்டும். தான் சொல்லுவதும் செய்வதும் உண்மையானதாய் இருந்தால்தான் சொல்லவேண்டும் அல்லது செய்யவேண்டும்.

இரண்டாவது: இது நேர்மையானதுதானா? என்பது. இதில் யாதொரு வஞ்சனையும் மோசமும் கலந்திருக்கக்கூடாது என்பதுதான் இதன் கருத்து.

மூன்றாவது: இது மக்கள் மனத்தில் நம்பிக்கையையும் உயர்ந்த நட்பையும் உண்டுபண்ணுமா? என்பது. மக்கட்சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லையானால் மனங்கலந்த நட்பும் ஒப்புரவும் உண்டாகாது. ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஐயமும் அழுக்காறும் தோன்றிச் சமுதாயத்தில் அமைதியும் இன்பமும் இல்லாதபடி கெடுத்துவிடும்; முடிவில் நாடு முழுதும் நல்வாழ்வின்றிச் சீரழிந்து போகும்.

நான்காவது: இதனால் எல்லோருக்கும் நன்மை விளையுமா? என்பது. எல்லோரும் நலமாக இருந்தால் நாம் அவரிடையே நலமாக வாழமுடியும். தாம் இன்புறுவதை உலகமும் இன்புற வேண்டும் என்று கருதிச் செய்வதுதான் உண்மைத் தொண்டு. ஒவ்வொருவர் வாழ்வும் பிறருக்கு நலம் பயப்பதாக இருக்கவேண்டும் என்ற இந்த நன்னோக்கம்பற்றியே சங்க கால தமிழ்ச் சான்றோர்கள் 'நீ வாழியர் இவ்வுலகத்தோர்க்கே' என்று செல்வர்களை வாழ்த்தினார்கள். ஒவ்வொரு வணிகரும் உத்தியோகஸ்தரும் இதனைக் கடைப்பிடித்துத் தங்களை ஆராய்ந்து தங்கள் தொழிலைச் செய்வார்களானால் மக்கள் சமுதாயம் இன்பத்திலே மூழ்கி எக்களித்து வாழும்.

வீழ்ச்சியுற்ற ஒரு கம்பெனியைத் தாம் மேற்கொண்டு நன்னிலைக்குக் கொண்டுவர முயன்ற சிகாகோ நகரத்து ஹெர்பர்ட் டெயிலர் என்பவர், இத்தற்காட்சி நான்கையும் கண்டுபிடித்து இவற்றைக் கடைப்பிடித்துத் தம் தொழிலைச் செய்யுமாறு கம்பெனித் தொழிலாளர் அனைவரையும் வற்புறுத்தினார். கம்பெனியும் மிக விரைவில் உயர்ந்து நாட்டில் நல்ல செல்வாக்கும் புகழும் பெறுவதாயிற்று. அதன் பங்காளிகளிடையே இத்தற்காட்சி நான்கும் பெரிய நன்மையை உண்டுபண்ணின. அந்த ஹெர்பர்ட் டெயிலர் தான் இப்போது ரோட்டரி இண்டர்நேஷனல் தலைவராக விளங்குகிறார்.

ரோட்டரியன் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் சமயத்தின்பால் பற்றும் தமது சமயக்கொள்கை வெளிப்படையாகத் தோன்றி மற்றவர் அறிந்து போற்றத் தக்க வகையில் செயலாற்றும் இயல்பும் உடையவராக இருக்கவேண்டும். ரோட்டரியன்களுக்குள்ளே பலவேறு சமயங்களிருந்த போதிலும் அவற்றில் யாவரையும் ஒன்றாகச் சேர்க்கும் கொள்கைகளை மேற்கொண்டு வேறு பிரிக்கும் கோட்பாடுகளை விலக்கிவிட்டால் ரோட்டரி சங்கத்தின் தொண்டு எல்லாருக்கும் பொது அறமாய் நின்று சிறப்பு எய்தும்; அதுவே வாயிலாக வாணிகம் தொழில் முதலியன வளர்ச்சி பெற்று உலக நட்பை உருவாக்கி உறுதிப்படுத்த உதவும்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது யாவரும் அறிந்த பழமொழி. ரோட்டரி சங்கம் இந்த உண்மை மொழியை மேற்கொண்டு இளஞ் சிறுவர்களை நல்வழியில் உருப்படுத்துவதில் முற்பட்டு நிற்கிறது. தன்னிற் சிறந்தது தன்னலம் கருதாத தனித் தொண்டு என்பது ரோட்டரி சங்கத்தின் உயிர்க் கொள்கை என்பதை, இளஞ் சிறுவர்களை ஆதரித்து அவர்கள் உள்ளத்தில் வேரூன்றி வளர்ந்து பயன்படுமாறு இச் சங்கம் பாடுபடுகிறது.

தன்னலமற்ற தொண்டு என்ற உயர்ந்த அறத்தைக் கைக்கொண்டு உலகமுழுதும் நல்லெண்ணமும் நட்புறவும் தோன்றி மலர வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதாகையால், இச்சங்கம்,

ரோட்டரியன் ஒவ்வொருவரையும் தன் குறிக்கோளாலும் கொள்கையாலும் அனைத்துலகிலும், இன்பமும் அமைதியும் நிறைந்த வாழ்வு வளர்வதற்கேற்ற மனமாற்றம் கொள்ளும்படி பணி புரிகின்றது.

தனிப்பட்ட ஒரு நல்லவரின் முயற்சியென்ற நுண்ணிய விதையிலிருந்து தோன்றி வளர்ந்த இந்த ரோட்டரி சங்கம் விரிந்து பரந்து இப்போது ஓர் உலக அமைப்பு இயக்கமாக விளங்குகிறது. உலக நாடுகள் முழுதும் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடி ஞாலம் புகழும் நலம் பெற்று நிற்கின்றது.

தன் நாட்டுப் பற்றையும் உணர்வையும் புறக்கணிக்காமல் உலக நாடுகளில் உள்ள மக்களினத்தின் முன்னேற்றம் குறித்துத் தன்னலமற்ற தொண்டு புரிய இச்சங்கம் நல்ல வாய்ப்பளித்து யாரையும் வரவேற்கிறது. கீழ்நாடு மேல்நாடு என்ற நில வேறுபாடுகளையோ, கொள்கை வேறுபாடுகளையோ கருதாமல் நல்லுணர்வு மலர்ந்த நல் வாழ்வின் மணம் கமழும் நல்லுலகைத் தோற்றுவிப்பதற்கு இச்சங்கம் அறிவும் வழியும் நல்குகிறது. இதன் செயலும் பயனும் உலகமெங்கும் பரவுக என இறைவன் திருவருளை வேண்டுகிறேன். வாழ்க ரோட்டரி சங்கம்.

வள்ளுவர் கண்ட இன்பம்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

இன்பம் என்பது எல்லா வுயிர்களுக்கும் இயல்பிலே ஊறி நிற்கும் விருப்பம் என்பர் தொல்காப்பியர். "எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" என்பது தொல்காப்பியம். இன்பத்தை விரும்பாத உயிர் எங்கும் கிடையாது; இன்பம் நாடுவது உயிர் வாழ்வின் பண்பு.

உயிர்கள் நினைப்பதும் செய்வதும் யாவும் வினையெனப்படும். வினையால் விளைவது பொருள் என்றும், அப் பொருளால் உண்டாகும் பயன் இன்பம் என்றும் யாவரும் அறிவர். வினையும் அறமாதலால், அறத்தாற் பொருளாதலால், அறம் பொருள் இரண்டாலும் இன்பம் உண்டாகிறது என்று திருவள்ளுவர் உரைக்கின்றார். "அறத்தால் வருவதே இன்பம்" (39) என்றும், "அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" (754) என்றும் திருவள்ளுவர் கூறுவதனால் அறிகின்றோம்.

ஒருவர்க்கு இன்பமாக இருப்பது மற்றொருவருக்குத் துன்பமாகத் தோன்றுவதுண்டு. அதனால் இன்னது தான் இன்பம், இன்னது துன்பம் என்று வரையறை செய்வது அரிது. இன்பம் என்பது உணர்பவர் உணர்வு வகைக்கு ஏற்ப அமைவது; உணர்வுடையவர் துன்பத்தையும் இன்பமாக உணர்வர் என்பாராய், "இன்னாமை இன்பம் எனக் கொளின் ஆகும்தன் ஒன்னார் விழையும் சிறப்பு" (630) என்று கூறுகின்றார். "ஈத்துவக்கும் இன்பம்" (228) என்றாற்போல வரும் திருக்குறளையும் பிறவற்றையும் நோக்குமிடத்து, உணர்ச்சி வடிவாய், ஓய்வின்றி அலைந்து கொண்டிருக்கும் மனத்தை அசையாமல் நிறுத்தி அமைதி பெறச் செய்வதே இன்பம் என்ற முடிபுக்கு வருகின்றோம். இதுவே "தான் அமர்ந்து வரூஉம் மேவற்று" என்ற தொல்காப்பியக் கருத்துக்கும் ஒத்து நிற்கின்றது.

"அறத்தால் வருவதே இன்பம்" என்ற குறள், இந்த இன்பம் வரும் வழியைக் குறிக்கின்றது. அறம் என்பது செய்கை. எனவே, ஒருவன் ஒரு செய்கையைச் செய்வதற்குரிய வழிகள் எவையோ அவையே இன்பம் தோன்றுவதற்கு வழியாம். உடம்பு, உள்ளம், அறிவு முதலியன செய்கைக்கு இன்றியமையாத வாயில்களாகும். "மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம் மற்று அவர் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு" (65) என்பதனால் இன்பத் தோற்றத்துக்கு உடம்பு கருவியாவது பெறப்படும். "சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்" (98) என்பது வாயாற் பேசும் சொல்லும் இன்பத்துக்கு வாயிலாவதைக் காட்டுகிறது. ஒருவனுடைய உள்ளமும் இன்பம் பெறுதற்குக் காரணம் என்பதற்காகத் திருவள்ளுவர் உள்ளத்தில் எழும் அவாவை ஏதுவாகக் கொண்டு, "இன்பம் இடையறாது ஈண்டும் அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்" (369) என்று இயம்புகின்றார். "இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சியவர்க்கு" (35) என்ற திருக்குறளால், தெளிந்த அறிவும் ஒருவர் இன்பம் பெறுவதற்குரிய காரணமாக இருப்பது இனிது தெரிகிறது.

இவ்வாறு பெறப்படும் இன்பத்தில் உயிர்களுக்கு ஈடுபாடுண்டாவதால் அந்த இன்பத்தைப் பெருக்கிக் கொள்வது உயிர்களின் முயற்சியாக இருக்கிறது. "துன்பம் உறவரினும் துணிவாற்றிச் செய்க, இன்பம் பயக்கும் வினை" (669) என்பது இதற்குச் சான்றாகும். இன்பம் பயக்கும் வினையை மிகுதியாகச் செய்யின், அதனால் பெறப்படும் இன்பம் பெரியதாகிறது. "சிற்றின்பம் வெஃகித் திறனல்ல செய்யாரே மற்றின்பம் வேண்டுபவர்" (173) என்ற குறள், இன்பம் சிறிதும் பெரிதுமாக வகைப்படுவதைக் காட்டுகிறதன்றோ! சிற்றின்பம் என்பது சிறிதுகால மிருந்து மறைந்து போவது; நெடிதிருந்து மகிழ்விப்பது இன்பத்துக்குப் பெருமை.

உலகில் வாழும் மக்களுக்கு இன்பம் ஒன்றே வேண்டப்படுவதாகையால், அதைப் பெறுவதிலும் அதற்கு மறுதலையாய்த் துன்பம் தருபவைகளைப் போக்கி விலக்குவதிலுமே கண்ணுங் கருத்து

மாக உள்ளனர். துன்பத்தை வென்று இன்பத்தைப் பெறுவதே வாழ்க்கை; அது குறித்துச்செய்யும் செய்கை வாழ்க்கைப் போராட்டம் எனப்படுகின்றது. இன்பத்துக்கு மாறாகிய துன்பத்தையும் அதனை உண்டாக்கும் காரணங்களையும் நன்கு அறிந்து அவற்றைக் களைவதுதான் இன்பம் வேண்டுவோர் செய்யத் தக்கது. துன்பத்துக்குரிய காரணங்களுள் இகல் என்பது ஒன்று; அதாவது, எதற்கும் பிறரோடு மாறுபட்டு முரணுவதாகிய செய்கை. இதனால் துன்பம் எளிதில் புகுந்து விடுவது கண்டே வள்ளுவனார், "இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின், இன்பத்துள் இன்பம் பயக்கும்" (854) என்று உரைக்கின்றார்.

ஒருவர் ஒரு செயலை மேற்கொண்டு செய்யலுற்றால், அதனால் அவர் கருதிய பொருள் கருதியவாறே கைகூடும்போது அவருக்கு இன்பம் உண்டாகிறது. இச்செயல் வகைகளில் மிகவும் கடினமான செயலாகத் திருவள்ளுவர் கருதுவது ஒருவரிடம் சென்று ஒன்றை வேண்டி இரப்பது; "இரத்தலின் இன்னாது மன்ற" (9) "இரவு உள்ள உள்ளம் உருகும்" (1069) என்ற திருக்குறள்கள் திருவள்ளுவர் உள்ளத்தை நன்கு தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. இவ்வண்ணம் நினைத்தாலும் நெஞ்சுக்கு வேதனையும் துன்பமும் தரும் இரத்தல் என்ற தொழிலையும், ஒருவன் துணிந்து மேற்கொண்டு சென்று ஒருவரிடம் எண்சாணுடம்பும் ஒருசாணாய்க் குறுகி இரக்கும்போது, ஒரு துன்பமும் இன்றி இரந்த பொருள் அவனுக்கு ஈயப்பட்டால் அவனுக்கு அது இன்பத்தைத் தருகிறது. இதனை "இன்பம் ஒருவற்கு இரத்தல், இரந்தவை துன்பம் உறாஅ வரின்" (1052) என்று வள்ளுவர் வடித்துக் கூறுகின்றார்.

வாய்க்கும் மனத்துக்கும் இனிமை தரும் பொருள் கிடைப்பின் அதனை உண்பதில் இன்பமுண்டாகிறது. ஆயினும் அந்த இன்பத்தைப் பெருகப் பெற வேண்டுமென்று வேட்கை எழுவது இன்பம் நாட்டமுடைய உயிர்க்கு இயல்பு. வேட்கை வயப்படாமல் கொள்ளும் அளவறிந்து உண்பதுதான், அதனால் பெறப்படும்

இன்பத்தை நுகரும் வழியாம். அவ்வாறின்றி மிக்க அளவில் உண்ணக் கருதினால், கருதிய இன்பம் பெருகாமல் நோய் புகுந்து துன்பமும் செய்யும் என்பாராய், "இழிவறிந்து உண்பான்கண் இன்பம் போல், கழி பேரிரையான்கண் நோய்நிற்கும்" (946) என்று இசைக்கின்றார். இன்ப நுகர்ச்சி பற்றி மேலும் ஒரு கருத்தைத் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார். ஒருவர் தாம் பெற்ற இன்பத்தை நுகருங்கால் அதனையே விரும்பி அதனகண்ணே அழுந்திவிடுவது கூடாது; அஃது இன்பத்தைத் தாராது துன்பத்துள் மிக்க துன்பத்தை விளைவிக்கும் என்று வற்புறுத்தி, "இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்" (629) என்று உரைக்கின்றார். இவ்வாறு ஒழுகுவதுதான் இன்பத்தை நன்முறையில் பயன் கொண்டு பிறர்க்கும் தனக்கும் பயன்பட வாழும் நல் வாழ்க்கையாகும். "இன்பம் விழையான் வினைவிழைவான் தன் கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்." (615) என்றும், இன்பமே நினைந்து துன்பம் வரின் அதற்கு அஞ்சிச் செயலற்று மடிபவன் இன்பத்தைப் பெற முடியாது; துன்பம் வரின் அதனை இயல்பாக வரும் தடையாக எண்ணி அதனை மதியாமல் தனக்கு உரிய அறத்தைச் செய்பவன் இன்பத்திலே சிறந்து விளங்குவான் என்பதை "இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் துன்பம் உறுதல் இலன்" (628) என்றும் திருவள்ளுவர் தெளிய உரைக்கின்றார்.

இன்பத்தைப் பெறும் வாயில்களில் நாம் மேலே கண்டவற்றில் வேறாக ஒருவனும் ஒருத்தியும் ஒருவர்க் கொருவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வாழ்வதையும் ஆசிரியர் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இல்வாழ்க்கை மேற்கொண்ட ஒருவன் ஒருத்தியாகிய இருவர் உள்ளத்திலும் ஒத்த காதலுணர்ச்சி அமைந்தால் அது இன்பத்துக்கு சிறந்த வாயிலாகும். காதல்வழிப் பிறக்கும் இன்பம் கடல் போன்ற பெருமை யுடையது என்றும், காதல் நோய் மிக்கவிடத்து அதனால் விளையும் துன்பம் கடலினும் மிகப் பெரிதாம் என்றும் கூறுகின்றார்.

காதலால் களிப்புண்ட இருவர் தம்மில் விளையாட்டாகப் பிணங்கும் போது இன்பம் பெருகுகிறது என்றும், அப் பிணக்கு நீங்கி இருவரும் கூடும்போது அவ் வின்பம் மிகச் சிறந்து விளங்குகிறதென்றும் காதலின்பத்தை நுகரும் முறையை அழகுறக் கூறுகின்றார்.. சுவைத்து உண்ணப்படும் பொருளுக்கு அதனுடைய சுவை மிகுமாறு சுவையில்லாத உப்புப் போடுவது போல்வது காதல் வாழ்வில் அதற்கு மாறான சிறு பிணக்குகள் உண்டாவது என்று கூறி அப் பிணக்குகளால் இன்பம் உண்டாவது கண்டு நுகர்வோர், அந்த இன்பம் பெருகுமென்று நினைத்துப் பிணக்குகளை மிகுதிப்படுத்தினால், உப்பு மிக்கவிடத்து, பொருளின் சுவை கெட்டழிவது போல் காதல் வாழ்வு இன்பமாகாது சீரழியும் என்பதை, "உப்பமைந்தற்றால் புலவி அதுசிறிது மிக்கற்றால் நீளவிடல்" என அறிவுறுத்துகின்றார்.

இதுகாறும் கூறியதனால், இன்பம் என்பது எல்லா வுயிராலும் விரும்பப்படுவதொரு நல்உணர்ச்சி என்றும், அஃது அறம் பொருள் என்ற இரண்டாலும் விளைவது என்றும், இந்த இரண்டிலும் மெய், வாய், மனம், அறிவு முதலியன வாயிலாக இன்பம் வருகிறது என்றும், இன்பம் பெற்ற உயிர் அதனைப் பெருக்கிக் கொள்வதில் ஈடுபடுவதால் சிற்றின்பம், பெரிய இன்பம் என இன்பம் வகைப்படுகிறதென்றும், இன்பத்தைப் போற்றுவோர் இகல்என்னும் குற்றத்தையும் ஏனைத் துன்பச் செயல்களையும் வாராமல் தடுக்க வேண்டும் என்றும், இன்பத்தை நுகருமிடத்து அதனுள் அழுந்தி அதன வயப்படாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றும், அதுவே பிறர்க்கும் நமக்கும் பயன்பட வாழும் வாழ்க்கைமுறை யென்றும், வாழ்க்கைத் துணையாகிய இருவர் உள்ளத்தையும் பிணித்து நிறுத்தும் காதலும் இன்பத்துக்கு வாயிலாம் என்றும், அங்கே அவ்வின்பம் சிறு பிணக்குகளால் சிறிது பெருகித் தோன்றிப் பிணக்கு நீங்கிக் கூடுவதால் சிறப்பு எய்துகின்றது என்றும் திருவள்ளுவர் கண்ட இன்பத்தின் இயல்பு ஒருவாறு விளக்கப் பெற்றது.

ஐந்திணை அமுதம்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

ஐந்திணையாவன குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இவை மலை நாடு, காட்டு நிலம், பாலை நிலம், வயற்பகுதி, கடற்கரை என 'நிலவகை' யாகவும், புணர்ச்சி, பிரிதல், இருத்தல், ஊடல், புலம்பல் என 'ஒழுக்க வகை' யாகவும் அகப்பொருளில் முறையே பொருள்படும். குறிஞ்சி நிலத்தில் புணர்ச்சி (களவு) நிகழும்; என்றால், ஏனை நிலங்களில் அது நிகழாதெனல் பொருள் அன்று, கருத்துமன்று. புலவர்கள் பழந்தமிழர் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டப் பல காட்சிகளை அமைத்தனர். அக் காட்சிகளே மேற்கூறிய குறிஞ்சி முதலியன. மிகப் பழைய காலத்தில் தமிழர் கையாண்டு வந்த 'மண முறை இன்னது' என்பதை அறிவித்தற்கே புலவர் அகப்பொருளை ஓர் ஓவியமாகச் சித்திரித்துக் காட்டுகின்றனர். இவ் வகப்பொருட் களவு, தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன் என நால்வர் வயப்பட்டிருக்கும் போது 'களவு' எனப்படும். இது தலைவியின் பெற்றோர்க்கு அறிவிக்கப்பட்டுப் பின் தலைவனும் தலைவியும் பலர் அறிய இல்வாழ்க்கை நடத்துவாராயின் அம்முறை 'கற்பு' எனப்படும். தலைவன் தலைவியை நடத்தும் ஒழுகலாறும்' தலைவி தலைவனை நடத்தும் ஒழுகலாறும் கற்பிக்கப் படுதலின் 'கற்பு' எனப் பெயர் பெற்றது.

குறிஞ்சி நிலக் கூட்டுறவு

ஒருவனும் ஒருத்தியும் முதன்முறை ஒருவரை ஒருவர் கண்டஞான்றே கொள்ளும் அன்பும், அவ்வன்பின் பெருக்கால் உண்டாகும் கூட்டுறவும், அக்கூட்டுறவு பலநாள் தொடர்புற்றுக் களவில் நடப்பதும் 'களவு' எனப்படும். இதனைக் குறிஞ்சி நில ஒழுகலாறாக முன்னையோர்

வகுத்தனர். தலைவனும் தலைவியும் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாகக் களவில் வதிவர். தலைவிக்கும் தலைவனுக்கும் முன்னர் ஒருவிதத் தொடர்பும் இல்லை; அவன் பெற்றோர்க்கும் அவள் பெற்றோர்க்கும் எட்டுணையும் தொடர்பில்லை; ஒருவரை ஒருவர் பார்த்தும் அறியார். இந்த நிலையில், இருவர்தம் உள்ளமும் ஒன்றுபின. இதுவே 'குறிஞ்சி நிலக் கூட்டுறவு'. இதனை

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"—குறுந்தொகை, 40

என்னும் தலைவனது கூற்றால் உள்ளவாறு உணரலாம். மேலும்,

"கொடுப்பினன் குடைமையும் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணு(து)
எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை"—குறிஞ்சிப்பாட்டு, 30-32

என்னும் அடிகளாலும், 'உயிர்க்குப் பாதுகாவலாகிய அருவினை' என்றே பண்டைத் தமிழர் தம் களவு ஒழுக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பது இனிது புலனாகும்.

பாலையின் பண்பு

களவில் தலைவி தலைவனோடு உடன்போக்கு வைத்துக்கொள்ளும் போதும், தலைவனை விட்டுத் தலைவி பிரிந்திருப்புழியும் உண்டாகும் பிரிவு 'பாலை' எனப்படும், தலைவன் பிரிவால் தலைவி நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உற்றிருப்பாள். ஆதலின், இந்நிலைமை பாலை நிலத்துக்கு ஒப்பாக்கப்பட்டது. "என் தலைவன் அடிக்கடி என் கண்களையும் தோள்களையும், என் கூந்தலையும் பாராட்டி நேற்றுவரை இவண் இருந்தான்; இன்று பிரிந்தான்; அவன் மரங்களற்ற பாலை நிலத்துக்குச் சென்றான். அந் நிலமோ, நடல் போலப் பரந்தது; பேய்த் தேரைத்

தண்ணீர் என்று மான் அருந்தச் செல்லும் அமைவுடையது" என்று தலைவி வருந்துவதாகக் கீழ்வரும் செய்யுளால் உணரலாம்.

"கண்ணும் தோளும் தண்ணறுங் கதுப்பும்
... ... பலபா ராட்டி
நெருநலும் இவணர் மன்னே; இன்றே
பெருநீர் ஒப்பிற் பேஎய் வெண்தேர்
மரனில் நீளிடை மானசை உறாஅம்
கடுமெட் டகம்பின் மத்தர் இன்ற
பிறவா வெண்ணெ யுருப்பிடத் தன்ன
உவரெழு களரி ஓமையங் காட்டு
வெயில்வீற் றிருந்த வெம்பலை அருஞ்சுரம்
ஏகுவர் என்ப தாமே தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லா தோரே."—நற்றிணை, 84

இப்பாவால் உண்மைக் காதலியின் உள்ளம் இத்தன்மையது என்பது இனிது விளங்கக் காணலாம்.

முல்லையின் முறுவல்

தலைவனது சிறு பிரிவில் மனைவி ஆற்றியிருத்தல் 'முல்லை' என்பது, ஏனைய நிலங்களைவிட முல்லை நிலம் அழகானது; முல்லை மலர் மாலைக் காலத்தே முறுவல் செய்வதே போலத் தலைவியை நோக்கி மலர்கின்றது. முல்லை நில மக்களாகிய கோவலர் தம் கன்று காலிகளை வீடு கட்கு ஓட்டிக்கொண்டு வரும் காட்சி கண்டு களிக்கத்தக்கது. வெளியிடம் சென்று மீளும் காலிகளும், முல்லையர் தீங்குழலும், முல்லை மலரும், தலைவிக்குப் பிரிந்து போன தலைவனை நினைப்பூட்டுகின்றன. அன்ன பொருள்களைக் காண்கையில் தலைவி தலைவனை நினைந்து வருந்துகின்றாள். தலைவி தோழியை நோக்கி,

"எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலை

இரவரம் பாக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே"—குறுந்தொகை, 387

என்று கூறுவதாகவுள்ள செய்யுள் தலைவனது பிரிவால் அவட்கு உண்டான எளிய நிலையை எழிலுறக் காட்டுகின்றது. இங்ஙனமே, பிரிந்து மீளும் தலைவன் தன் பாகனை விளித்து, "பாக, என் மகனுக்குக் கதைகள் கூறுபவளாகிய என் காதலிக்கு என் தோள்கள் (விரைய அவளை அணைத்தற்கு) வருகின்றன எனக் காக்கைகள் என் வருகையை முன்னமே உணர்த்தியிருக்குமா?"

"தோள்வலி யாப்ப ஈண்டுநம் வரவினைப்
புள்ளறி வுறீஇயின கொல்லோ? தெள்ளிதில்
காதல் கெழுமிய நலத்தள்; ஏதில்
புதல்வற் காட்டிப் பொய்க் குர்
திதலை ... அல்குல் தேமொழி யாட்கே"—நற்றிணை, 161.

என்று உள்ளத்தில் ஒருவாலும் உரைசெய்ய அரியதொரு காதற் பெருக்கால் வினாவும் வினாவினை நோக்குங்கால், தலைவன் தலைவிபால் கொண்டொழுகும் தலையளி இன்ன தன்மைத்தென்பது இனிது விளங்கும். இருவரும் ஒருவரை ஒருவர் காதல்கூர் கண்ணால் கவ்வ, அவ் வின்பப் பார்வையைக் கண்டு மகிழ்ந்து, முல்லை முறுவல் கொள்வதை எவரே இல்லை என்பர்!

நெய்தல் நெகிழ்ச்சி

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். தலைவனது நீண்ட பிரிவால் தலைவிக் கேற்படும் மன நெகிழ்ச்சி 'நெய்தல்' எனப்படும். பறவைகள் இல்லம் நோக்கித் திரைகடல் கடந்து மீள்வதையும், காலையிற் சென்ற பரதவர் தம் தாளாண்மையாற் பெற்ற பொருளுடன் தத்தம் இல்லோர் மகிழக் கரைசேரும் காட்சியையும் காணும் தலைவிக்குத் தனிமையும், மதியும், கடலும், காரிருளும் பிறவும் கூற்றாயமைகின்றன. அவள் கணவனது நெடும் பிரிவால் நெகிழ்ச்சி அடைகின்றாள்.

அந் நெகிழ்ச்சியால், "என் இயற்கை யழகு கெட்டது; தோள்கள் அழகிழந்தன; நெஞ்சம் துனுக்குறுகின்றது; கண்கள் துயின்றில, முகமோ வெளுத்துள்ளது. தலைவனோடு விளையாடியதன் பயனாக யான் இன்னமே விளிவதோ? கடற்கழியில் வெண்குருகு கத்துகிறது; அலைகள் கரையைப் பொருகின்றன; குளிர்ந்த பூஞ்சோலையின் நறுமண மலர்களை அலைகள் சிதற அடிக்கின்றன."

"தொல்கவின் தொலைந்து தோள்நலம் சாஅய்
அல்லல் நெஞ்சமொ டல்கலும் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ?
வெண்குருகு நரலும் தண்கமழ் கானல்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்குதிரை உடைதரும் துறைவனொ(டு)
இலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே?"

—குறுந்தொகை, 381.

என்று இவ்வாறு பண்டவன் பண்பும், இன்னல்தரும் தன் ஏகாந்தமும் எண்ணி எண்ணித் தலைவி, ஏங்குதல் முதலியன 'நெய்தல் நெகிழ்ச்சி' யாகும்.

மருதத்தின் மாண்பு

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனப்படும். இதன் ஒழுக்கம் 'ஊடல்' என்பது; ஊடல் நிகழ்ந்த வழிக் 'கூடலு'ம் உண்டென்பது கூறாது அமையுமெனக் கொள்க. எனினும் இவ்வூடற்குக் காரணம் யாதென ஓர்வது உறுபயன் விளைப்பதாகும். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் நிலங்களின் அமைப்பும் தொழிலும் நோக்குவோர்க்கு ஆடவர்தம் அரிய நேரம் மிகக் குறுகிய தென்பது தெளிவு. அந் நிலங்களில் உணவு தேடலிலேயே ஆடவனது பகற்போதெல்லாம் செல்லும் இயல்பினது. அவனைப்போன்றே, மகளிரும் தினைப்புனக் காவல், தயிர் கடைதல், விற்றல், மீனுப்புப்படுத்தல், உப்பெடுத்தல் முதலிய அருந்தொழிலில் ஈடுபடுவர். எனவே, இந்நிலங்களில் உள்ளோர் ஆண்டு

முழுவதும் உழைத்து உண்ணவேண்டுபவராகின்றனர். ஆகவே, இங்குள்ள ஆடவர் அறநெறிதவறி நடக்கச் சிறிதும் வழியில்லை. ஆனால் மருத நிலத்தார் வாழ்க்கை இங்ஙனமன்று. வயல்வேலை ஆறு மாதமே; ஏனைய மாதங்களில் வேலையற்றுத் திரிய வேண்டும் நிலையில் அமைகின்றனர். எனவே, அவர்கள் உல்லாச வாழ்க்கையை விரும்புதல் இயல்பே. அவர்தம் உல்லாச வாழ்க்கைக்கு உற்ற துணைவியாராகப் 'பரத்தையர்' உறுதலும் இயல்பே. இப்பரத்தையர் (பாணர்—பாணிச்சியர் அல்லர்) ஆடல் பாடல்களில் வல்லுநராயிருத்தல் பின்னும் பாராட்டற்பாலது. எனவே, காமநிறை இழந்த ஆடவர் இப்பரத்தையரிடை வதிவதும், பின் இல்லம் போதலும் இயல்பு. இக்கூடா ஒழுக்கத்தைத் தலைவி அறிவாளாயின், அவள் தலைவனிடம் சிறு கோபம் கொள்வள். இதனை 'ஊடல்' என்பர் முன்னையோர். இவ்வூடலைத் தலைவன் தக்க சமாதானங் கூறித் தணித்துத் தலைவியை மகிழச் செய்து அவளோடு கூடும் கூட்டம் 'கூடல்' எனப்படும். இதுவே இம் மருதநிலப்பண்பு. ஊடல் நிகழ்ந்த பின்னர்க் கூடல் நிகழுமாயின் அஃது எத்துணைப் பேரின்பம் பயப்பதென்பது பழைய பாக்களாலும் இல்லத்து நடைமுறையாலும் இனிதுணரலாம்.

பரத்தையர்க்கும் தலைவிக்கும், இக்காலத்தும் அவ்வப்போது மனவருத்த வாதங்கள் நிகழ்தல் யாண்டும் காணப்படல் போலவே, பண்டை மருதநிலத்துப் பயின்றிருத்தல் நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. ஒரு பரத்தை, பாங்காயினர் கேட்பப் பின்வருமாறு கூறுகின்றாள்: "புதுவெள்ளம் வந்த பெரிய நீர்த்துறையை விரும்பி யாம் எமது கூந்தலில் ஆம்பலின் புறவிதழ் ஒடித்த முழுப் பூவைச் செருகி அப்புனல்விளையாட்டைச் செய்யச் செல்வோம்; தலைமகள் அதனை அஞ்சினளாயின், வெய்ய போரில் தூசிப்படை அழியும்படி எதிர்த்து நின்ற பல வேல்களையுடைய 'எழினி', பகைத்துக்கவர்ந்து கொண்ட பசுக்கூட்டத்தை, உரியவர் ஒன்றுகூட்டித் தடுப்பதுபோலத் தோழியர் குழாத்துடன் தன் கொழுநனது மார்பை எமது கைக்கு அகப்படாதபடி காக்கட்டும்".

"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறும்; தானஃ (து)
அஞ்சுவ துடைய ளாயின், வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே".

—குறுந்தொகை, 80.

இதனைநோக்கப் பரத்தையின் மனப்பான்மையும், அவள் தலைவனிடம் பெற்றிருந்த செல்வாக்கும் நன்கு விளங்கும். பரத்தையர் வெளியே வருகையில் தலைவி அவர்களைத் தலைவன் காணாதவாறு செய்யும் வழக்கம் உண்டென்பது பின்வரும் பாவால் புலனும்: "இப்பரத்தை பரந்த கண்களையுடையவளாய் நறுநாற்றம் அவாவிய கூந்தலையுடையளாய், அகன்ற தோள்களையும் வெண்பற்களையும் உடையாளாய் ஒன்றை ஒன்று தாக்குறும் தொடைகளைப் பெற்றவளாய், தழைகளை ஆடையாக அணிந்தவளாய், விழா முற்றத்தை அணி செய்ய வருகின்றாள்; அவளால் கலக்குறு வகையில் நம் கொழுநனைக் காமின்", என எச்சரிக்கின்றாள்:

"மடக்கண் தகரக் கூந்தற் பணைத்தோள்
வார்ந்த வாலெயிற்றுச் சேர்ந்துசெறி குறங்கிற்
பிணையல் அந்தழைத் தைஇத் துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்துநின் றனளே
எழுமினோ! எழுமினெங் கொழுநற் காக்கம்!"—நற்றிணை, 170.

தலைவன் பரத்தையர் ஒழுக்கத்தில் இருத்தலை யறிந்த தலைவி வருந்தி, இல்லறவியல் வழாது நடந்து வருதலையும் தாங்கள் விரும்புவது இன்னதென்பதையும், தலைவனைக் கண்ட தோழிகள் அவற்கு எடுத்தியம்பல் நூல்களில் இன்பம் பயக்கும் பகுதிகளுள் ஒன்றாகும்.

"விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே; யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டோமே,"—ஐங்குறுநூறு, 2.

(தலைவியைத் தோழிகள் 'யாய்' என்னல் நூல் வழக்காம்.) இதனால் தலைவியின் இல்லறச் சிறப்பு இனிது விளங்கும். பரத்தையரைவிட்டுத் தன்னிடம் வந்த தலைவனை நோக்கித் தலைவி,

"வேண்டேம் பெரும நின் பரத்தை
ஆண்டுச்செய் குறியோ டீண்டுநீ வரலே"—ஐங்குறுநூறு, 48.

"என்னலம் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே"—ஐங்குறுநூறு, 63.

எனத்தனது வெறுப்பைக் காட்ட, தலைவன் தான் அக்கூடா ஒழுக்கம் செய்திலன் என்று செப்புவன். அதற்குத் தலைவி நகைத்து,

"மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந!
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்ற தொளியே?"
"சிறுவரின் இனைய செய்தி
நகாரோ பெரும, நிற் கண்டிசி னோரே?".

எனப் பரத்தையர் கூட்ட முண்மையை வலியுறுத்துப் பேசிக் கோபப்படுதல் ஊடலாகும். பின்னர்த் தலைவன் பலவாறு சமாதானம் கூறித் தலைவியைக் கூடுவன். பரத்தையர் கூட்டுறவு தலைவனுக்கிருந்ததேனும் அதனைத் தலைவியும் தோழியும் முற்றும் கேவலப் படுத்தினரல்லர் என்பதும், தலைவன் தலைவியினிடம் என்றும் நீங்கா அன்புடையனாயிருந்தான் என்பதும், தலைவன் இங்ஙனம் பரத்தையர் இல்லம்சேறல் மருதத்து மட்டுமே என்பதும் பண்டைய நூற்பயிற்சி யுடையோர் நன்கறிந்த செய்திகளாம்.

மொழிவளர்ச்சி-அரசியலாதரவு

திரு. அ. திருமலைமுத்துசுவாமி, B. O. L. (Hons), B. T; Dip. Lib. Sc.
தியாகராசர் கல்லூரி, மதுரை.

இந் நிலவுலகில் இன்று இரண்டாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறு மொழிகள் பேசப்படுகின்றன. இவைகள் தவிர எண்ணிறந்த மொழித் திரிபுகளும் (dialects) காணப்படுகின்றன: ஆனால் இவற்றன் பண்பட்ட மொழிகள் எனப்படுவன ஒரு சிலவே. சிறப்புடைய சில பண்பட்ட மொழிகளைத் தெரிந்து கொள்வது பெரிதும் பயன் அளிக்கும். அத்தகைய மொழிகளில் ஒரு சில பின்வருபவை:

1. ஆங்கிலம்	5. போர்த்துகீசு
2. பிரெஞ்சு	6. ருசிய மொழி
3. செர்மன்	7. இத்தாலிய மொழி
4. சுபானிசு	8. சப்பானிய மொழி

இவ்வெட்டு மொழிகளும் இன்று இத் தரணியின் பெரும்பான்மையான பகுதிகளில் பேசப்படுகின்றன. இம் மொழிகளைத் தெரிந்த ஒருவன் உலக மக்கள் பலருடனும் உறவாட முடியும்; உலகினைச் சுற்றி வரலாம். இத்துடன் அராபி, சீனம், மலாய், டச்சு மொழிகளையும் அறிந்து, வேறு சில மொழியினங்களைப் பொதுவாக அறிந்துகொண்டால், போலிச்சு, செக், சுவீடிச், டேனிச், பின்னிச், ஹங்கேரி மொழிகளுக் கிடையே காணப்பெறு வேற்றுமைகளையும் அறிந்து கொள்ளலாம். இவ் வளவில் ஒருவனது மொழிக்கல்வி ஒருவாறு முற்றுப் பெறுகின்றதெனக் கூறலாம்.

மேலே சொல்லப்பட்ட இரண்டாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறு மொழிகளில், அமெரிக்க நாட்டுச் செவ்விந்திய மொழிகள் ஆயிரம்; ஆப்பிரிக்க நீக்ரோவினரால் பேசப்படுவது ஐந்நூற்றிற்கு மேற்பட்டவை; ஆஸ்திரேலியா, நியூகினியா, பசிபிக் தீவுகள் முதலிய இடங்களில் வழங்குவன ஐந்நூற்றிற்கு அதிகமான மொழிகள் ஆசியமக்களால் கையாளப்படும் மொழிகள் ஒரு சில நூல்களில் அடக்கப்பெறும். எனினும் இம் மொழிகள் பலவும் ஒரு தன்மையான வரலாற்றுச் சிறப்புடையன என்று கூறுவதற்கில்லை. இம் மொழிகளிலும் ஒரு சிலவே பண்பட்ட மொழிகளாகும்.

உலகில் வழங்கும் பல்வேறு மொழிகளுள் ஒரு சிலவற்றுள் காணப்பெறும் ஒற்றுமையினைக் கொண்டு, எனை மொழிகளையும், பத்து இனங்களுக்குள் அடக்கியுள்ளனர். அவைகள் வருமாறு:

1. இந்தோ ஐரோப்பிய மொழிகள் (Indo European)
2. செமிட்டோ-ஹேமிடிக் மொழிகள் (Semito-Hamitic
3. ஊரல்-ஆல்டேயிக் மொழிகள் (Ural Altaic)
4. சப்பானிய-கொரிய மொழிகள் (Japanese Korean)
5. சினோ-திபெத்திய மொழிகள் (Sino-Tibetan)
6. திராவிட மொழிகள் (Dravidian)
7. மலாய், பாலினேசிய மொழிகள் (Malayo-Polynesian)
8. ஆப்பிரிக்க நீக்ரோ மொழிகள் (African Negro)
9. அமெரிக்கச் செவ்விந்திய மொழிகள் (American Indian)
10. பிற மொழிகள் (Other Groups)

வரலாறு, போர், பொருளியல், கலாசாரம், அரசியல் ஆகிய இவற்றின் அடிப்படையில் ஆராய்ந்தோமானால், உலகில் தலை சிறந்த மொழிகள் என்று எண்ணுவதற்குத் தகுதி வாய்ந்தவை நூற்றுக்கணக்கில்தான் இருக்கும்; எனினும் எல்லா மொழிகளும் ஒரே சிறப்புடையன என்று சொல்வதற்கில்லை. அவற்றிடையே எத்தனையோ வேறுபாடுகள் உண்டு.

ஒரு மொழியின் சிறப்பிற்கு எத்தனையோ காரணங்களை எடுத்தியம்பலாம். ஒரு மொழியைப் பேசுவோரது எண்ணிக்கை கொண்டே அதன் சிறப்புக் கருதப்படுகின்றது; எண்ணிக்கை மிகுதியாய் இருந்தால் ஒரு மொழி சிறந்ததெனச் சிலர் நினைக்கின்றனர். அது முற்றிலும் தவறானதாகும். ஒரு மொழியினைப் பல்வகைக் கோணங்களிலிருந்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருதலே பொருத்த முடையதாகும். பேசுவோரது எண்ணிக்கையைப் பார்ப்பதைவிட அம் மொழி பண்பட்ட மொழியா, வரலாற்றுச் சிறப்புடையதா என்பன எல்லாம் அறிதல் வேண்டும். உதாரணமாக சுபானிசு—கிரேக்க மொழிகளை எடுத்துக் கொள்வோம். இன்று சுபானிசு மொழியினைப் பேசும் மக்களது எண்ணிக்கை பத்துக் கோடிக்கு மேற்பட்டதாகும். இது ஒன்றினைக் கொண்டு, இம் மொழி பண்டுதொட்டுப் பயின்று வந்த பண்பட்ட கிரேக்க மொழியை விடச் சிறந்தது, அல்லது அதே அளவு சிறப்பினைக் கொண்டது என்று கூறுதற்கில்லை. இன்று கிரேக்க மொழியினை ஐம்பது லட்சம் மக்கள் தான் பேசுகின்றார்களென்றாலும்,

தற்காலத்தில் நல சிறந்தவை எனக் கருதப்படும் பல மொழிகளில், ஒரு சில மொழிகள் வளமாவதற்கும், உருவாவதற்கும் காரணமான தாய்மொழி என்ற அளவில் கிரேக்க மொழி தனிச் சிறப்புக் கொண்டுள்ளது.

அரசியல் செல்வாக்கும், கலாசாரமும் மொழித் துறையில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஓரளவு காரணமாக அமைகின்றன எனக் கூறலாம். 90 லட்ச மக்களால் பேசப்படும் டச்சு மொழியானது, அவர்கள், வியாபார அடிப்படையில் முன்னர் முதலில் வந்து பின்னர் ஆதிக்கம் செலுத்திய, சாவா, சுமத்திரா, போர்னியோ, செலெபெசு போன்ற இடங்களில் வாழும் 60000000 மக்களாலும், பேசப்படுகின்றது. இங்குள்ள மக்கள் தங்கள் தாய் மொழியாகிய 'மலாய்' மொழிக்கு எவ்வளவு சிறப்புத் தருகின்றனரோ, அவ்வளவு சிறப்பினை டச்சு மொழிக்கும் கொடுக்கின்றனர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த மற்றொரு மொழி பிரெஞ்சு மொழியாகும். இம் மொழி உலகில் பெரும்பான்மையான மக்களால் பேசப் படுகின்றது. 42000000 பிரெஞ்சு மக்கள் தவிர, பெல்ஜியம் சுவிட்சர்லாந்து இவ்விரண்டிடங்களிலும் இம்மொழியினைப் பேசும் மக்கள் 60 லட்சம் உள்ளனர். இது தவிர கனடாவிலும், உலகில் பலவேறு பாகங்களிலும் பிரெஞ்சு மக்கள் ஆதிக்கம் செலுத்திய பல பகுதிகளிலும் இம் மொழி நின்று நிலவுகின்றது. மேலும் ஐரோப்பிய நாடுகளில், கற்றறிந்த மக்கள், பிரெஞ்சு மொழியின் சிறப்பினைக் கருதி அதனைக் கற்று வல்லுநர்களாய் விளங்குகின்றனர். அமெரிக்கா, ஹாலந்து, இத்தாலி, போலந்து ஆகிய நாடுகளில், பிரெஞ்சு மொழி பொதுவாகவே கற்றறிந்த பலரால் கையாளப் படுகின்றது. இது போன்றே, இந்தோ ஆரிய, திராவிட, முண்டா மொழிகளைத் தாய் மொழிகளாக வுடைய இந்திய மக்களுக்கு, ஆங்கில மொழி, பொது மொழியாகப் பயன் படுகின்றது. இதற்குக் காரணம் அரசியல் செல்வாக்கே. இவ்வாறு அரசியல் செல்வாக்கானது, ஒரு மொழியினைப் பேசுவோரது எண்ணிக்கை அதிகமாதற்குக் காரணமாக அமைவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

---

*மதிப்புரை

சிவஞான சித்தியார்-சுபக்கம்: பதவுரையும் பொழிப்புரையும்.

சிவஞான சித்தியார் என்பது மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம் என்ற சித்தாந்த சைவ நூற்குச் சிறந்த விருத்தியுரை நூலாகும். இவ்விருத்தியைச் செய்தவர் மெய்கண்டார்க்கு மாணவரான அருள்நந்தி சிவாச்சாரியார். சிவஞான போதம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் செய்யப்பட்டது. அது 12 சூத்திரங்களை உடையது. அப் பன்னிரண்டு சூத்திரங்களின் உட்பொருள்களைத் தெளிவான முறையில் விளக்கிக் கூறுவதே சிவஞான சித்தியார் என்பது.

இந் நூற்செய்யுட்களுக்கு கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருந் துறவியாக இருந்தவரும் வடநூற்கடலும் தமிழ் நூற்கடலும் நிலை கண்டுணர்ந்தவருமான மாதவச் சிவஞான யோகிகள் என்பவர் பொருத்தமான பொழிப்புரைத்துள்ளார். அப் பொழிப்புரையைத் தழுவித் திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினெட்டாவது குரு மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சிறந்த முறையில் பதவுரை எழுதியுள்ளார். முன்பே இப் பதவுரையும் பொழிப்புரையும் வெளிவந்துள்ளன. இவ்விரண்டு உரையும் சில மாதங்களுக்கு முன் ஒரு நூல் வடிவில் வெளியிடப் பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்துக் குரு மகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சுவாமிகள் பட்டத்திற்கு வந்தவுடன் திருவெண்ணெய் நல்லூரில் ஆண்டுதோறும் சித்தாந்த சைவமாநாடு நடத்துகின்றனர். மூன்றாவது மாநாட்டு மலராக இந் நூல் வெளிவந்துள்ளது. பல ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கிப் பெரும்பாலும் பிழைகள் இல்லாமல் இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது பாராட்டத் தகும். நூலின் முதலில் இந்நூற் பொருளையும் திருவாவடுதுறை ஆதீனத்தார் செய்து வரும் சிவத்தொண்டு

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

பற்றிய விவரங்களையும் எழுதி வெளியிட்டிருப்பவர் இவ் வாதீன வித்துவான் சிறந்த தமிழ்ப் புலவராகிய சித்தாந்த சைவமணி, த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். இப் பேரறிஞர் தமிழ் நூல்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் பழுதறப் படித்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தார் இப் பெரும் புலவரைத் தம் ஆதீன வித்துவானாகப் பெற்றிருத்தல் பெரிதும் போற்றற்குரியதாகும். இந் நூலின் இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி அரும்பதக் குறிப்பகராதி, அருந் தொடர் அகராதி என்பன இணைக்கப்பட்டுள்ளன. இவை நூலைப் படிப்பார்க்குப் பெருந்துணை செய்வன.

இன்றுள்ள குரு மகா சந்நிதானம் பட்டத்திற்கு வந்த மிகக் குறுகிய காலத்திற்குள் சிவநெறித் தொடர்பான பல நூல்களை வெளியிட்டு வருதல் அறிஞர் பாராட்டுக் குரியதாகும். இவர்கள் பெரு முயற்சியால் ஆதினத்தின் இதுகாறும் அச்சாகாமல் உள்ள பல நூல்கள் வெளியாதல் வேண்டும் என்பது தமிழ்ப் பெருமக்கள் விருப்பமாகும். இங்ஙனம் சீரிய முறையில் சிவப்பணி செய்துவரும் ஆதின கர்த்தருக்கு நமது நன்றி உரியதாகுக.

டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

சென்னை 600 013

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணை யைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநால் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	
42.	அகராதிநிகண்டு	0	12	
43.	மேகவிடுதூது	0	2	
44.	திருக்குற்றாலமாலை	0	2	
45.	தண்டலையார்சதகம்	0	4	
46.	இராமோதந்தம்	0	2	
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	
48.	சேதுநாடும் தமிழும்	0	6	
52.	கூடற்புராணம்	0	10	
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	
56.	பாப்பாவினம்	0	10	
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	
59.	கடம்பர்கோயில் உலா	0	6	
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகளுள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.